# பொருளியல் நோக்கு

மார்ச் 1980


## தோட்டத் தொழிலாளர்



மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேயிலே – செல்வர்க்கான வறியோரின் அன்பளிப்பு

பிரிட்டிஷ் நிறுவனங்களால் பரிபாலிக்கப்படும் பெருந் தோட்டங்களில் தொழிலாளரின் வாழ்வில் இழையோடும் துயரினேயும் அவர்களுக்கிழைக்கப்படும் அநீதிகளேயும் 1974 ல் கிரஞடா டி. வி. நிலேயங்கள் பிரித்தானி ப பொது மக்களின் கவனத்துக்கு கொண்டுவந்தன. ''வறுமை மீதான போர்'' (War on Want) என்றழைக்கப்படும் அரசு சார்பற்ற நிறுவனமே இந்நிகழ்ச்சிகளின் பின்னணியில் இருந்தது. இதன் விளேவாக, பிரித்தானியா எம். பி. க்களேக் கொண்ட தூதுக் குழுவொன்று 1974 ல் இலங்கைக்கு விஜயம் செய்தது. இக்குழுவின் அறிக்கை டி. வி. நிகழ்ச்சிகள் வழங்கிய செய்திகளில் பலவற்றை ஊர்ஜிதம் செய்தது. கடல் கடந்த நாடுளிளும் எமது தோட்டத் தொழிலாளர் குறித்து கரிசனே காட்டுவோர் இருந்து வருவதனே அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கைப் பொது மக்கள் அறிந்து ொண்டனர். தோட்டங்களின் தேசிய மயம் அதிக எதிர்ப்பின்றி நடைபெற்றதற்கும் இதுவே காரணமென பலர் கருதுகின்றனர்.

தேயிலே போன்ற மூன்ருவது உலக பண்டங்களில் கவனஞ்செலுத்தும் அரசு சார்பற்ற பல குழுக்களில் ''வறுமை மீது போர்'' என்பதும் ஒன்ருகும். இத்தகைய பல குழுக்கள் அபிவிருத்தியடைந்த உலகின் பல்வேரு நாடுகளிலும் இயங்கி வருகின்றன. மூன்ருவது மண்டல நாடுகளின் வறுமை, அதனேத் தூண்டும் காரணிகள் என்பனமீது அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்களின் கவனத்தை ஈர்த்து அவர்களின் மனச்சாட்சிகளே உசுப்பிவிடுவதே இக்குழுக்களின் நோக்கமாக இருக்கிறது. தேயிலே தொடர்பாக இயங்கி வரும் குழுக்கள் தமது கல்வித் திட்டங்களிஞல், ஒரு புறத்தில் பல்தேசிய நிறுவனங்களால் மிக மோசமான முறையில் சுரண்டப்பட்டு வரும் தோட்டத் தொழிலாளர் பற்றியும், மறுபுறத்தில், அபரிமித இலாபங்கள் மூலம் நுகர்வோரை சுரண்டிக் கொழுக்கும் சில்லறை விற்பனே நிலேயங்கள் பற்றியும் பிரச்சாரம் செய்து வருகின்றன.

இக்குழுக்கள் தமது செய்தியை பல்வே வழிமுறைகளேயும் பிரயோகித்துப் பரப்பி வருகின்றன. இவற்றுள் மிக முக்கியமானது கூட்டுறவு அடிப்படையில் ஒரு மாற்றுச் சந்தைப்படுத்தல் அமைப்பை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். உற்பத்தி நாடுகளிலிருந்து தேயிலே நேரடியாக கொண்டு வரப்பட்டு, பொதிகட்டப்பட்டு ''மூன்ருவது உலக கடைகள்'' என்று அ ழக்கப்படும் சில்லறை விற்பனே நிலேயங்களில் நேரடியாக விற்பனே செய்யப்படுகின்றது. தம்மால் பல்தேசிய நிறுவனங்களின் விலேகளே விடவும் குறைந்த விளேகளில் நுகர்வோருக்கு தேயிலேயை வழங் முடிந்திருப்பது மட்டுமன்றி, உற்பத்தியாளருக்கு நியாயமான விலேகளேயும் பெற்றுக்கொடுக்க முடிகின்றது என இக்குழுக்கள் கூறுகின்றன. இது ஒரு மாற்றுச் சந்தைப்படுத்தல் முறையாகவன்றி வறுமைக்கான காரணங்கள், சமனற்ற வர்த்தகம், ஏகபோகங் ளின் செல்வாக்கு என்பவற்றை பொது மக்களுக்கு எடுத்துக்காட்டு முகமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்குழுக்களின் பிறிதொரு சிறப்பம்சம் அவற்றின் கிறிஸ்தவ தொடர்பாகும். கிறிஸ்தவ மதக் குழுக்களில் மிக ஆழமாக ஊடுறுவியுள்ள சமூக நீதிக்கான அவாவின் விளேவாகவே இந்நிலேமை தோன்றியுள்ளது. இக்குழுக்களின் நடவடிக்கைகளே நிதிப்படுத்துவதற்காக பல்வேறு வகையிலும் நன்கொடைகள் திரட்டப்பட்டு வருகின்றன.




எழுபதுக்களின் ஆரம்பத்தில் ஐக்கிய இராச்சியத்தின் ''War on Want'' குழு சமூக நீதிக்கான தனது போராட்டத்துக்கு உறுதுணேயாக பல பிரச்சார அட்டைகளே வெளியிட்டது. அத்தகைய விளம்பர அட்டையொன்று தரும் மிக வலுவான செய்தியொன்றையே மேலே நாம் காண்கிருேம். இதே வேளேயில், செல்வாக்கு மிக்க சஞ்சிகையான 'நிவ் இன்டர்னசனிலிஸ்ட்' தோட்டத் தொழிலாளர் குறித்த ஒரு சிறப்பிதழையும் வெளியிட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 5 இதழ் 12 மார்ச் 1980

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

**சிறப்புக் கட்டுரை**

ரொனி டீ மெல் 30 வளர்முக நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள்
– தீர்வு காணக் கோரி உலக வங்கிக் குழுவுக்கு அழைப்பு

**விஷேச அறிக்கை**

3 தோட்டத் தொழிலாளர்

**நிரல்கள்**

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு: ஜனவரி 1980
23 தென்னை–உற்பத்தி அதிகரிப்பின் அவசியம்
24 பொருளாதாரம்: மானியங்கள்
27 நெல்–அமோக அறுவடை

**அடுத்த இதழில்**

- கொழும்பு மாநகர அபிவிருத்தி – திட்டங்கள், செய்திட்டங்கள், மூலவளங்கள், தடங்கல்கள் என்பன குறித்த ஒரு சமூக, பொருளாதார கண்ணோட்டம்
- சமூக, பொருளாதார காரணிகளுக்கும் ''புதிய பிராமணர்களுக்கும்'' இடையே உள்ள தொடர்பு
  – பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் குறித்த ஒரு சமூகவியல் ஆய்வு
- *1979 ல் பொருளாதாரம்*

**அட்டைப்படம்**

ஸ்ரீ லங்கா நுண்கலைக் கல்லூரியில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருக்கும் ஓவியர் எஸ். எச். சரத்தினால் இந்த இதழுக்கான அட்டைப்படம் வரையப்பட்டது

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**ஜனவரி 1980**

1 தற்போதைய உலக எண்ணெய் விலைகளின் பிரகாரம், 1980 ல் இலங்கையின் பெட்ரோலிய உற்பத்திப் பொருட்களுக்கான செலவு 800 கோடி ரூபாவை தாண்டிவிடும். இது நாட்டின் அன்னியச் செலாவணிச் சம்பாத்தியத்தில் 45 சதவீதமாக இருக்குமென நிதி அமைச்சர் தெரிவித்தார்.

உற்பத்தியாளருக்கு குறைந்த பட்ச விலைகளை உறுதி செய்யும் வகையில், சோளம், சோயா அவரை, எள், நிலக்கடலை, மிளகாய், புளி என்பவற்றுக்கான மானிய உதவித்திட்டம் அமுலுக்கு வந்தது.

3 கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கொழும்பு நகரின் கட்டிட நிர்மாணம் 100 சதவீதம் அதிகரித்திருப்பதாக மத்திய வங்கியின் ஆய்வொன்று கூறுகிறது.

1979 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ம் திகதி வரை கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி, தயார் செய்யப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி மூலம் 92.5 கோடி ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தேயிலை, இறப்பர் என்பவற்றுக்கு அடுத்தபடியாக இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியைத் தேடித்தரும் மூன்றாவது பெரிய கைத்தொழிலாக இது மாறியுள்ளது. நாட்டின் பிரதான அன்னியச் செலாவணி உழைப்பு மூலங்கள் என்ற வகையில் சுற்றுலாத்துறை, தெங்குக் கைத்தொழில், இரத்தினக்கல் கைத்தொழில் என்பன முறையே 4 ம், 5 ம், 6 ம் ஸ்தானங்களைப் பெற்றன.

7 ஸ்ரீலங்காவின் மேற்குக் கரையோர மீன்பிடித் திட்டமொன்றுக்கான தொழில் நுட்ப உதவி மானியமொன்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி மணிலாவில் அறிவித்தது.

8 அமோக தேர்தல் வெற்றியொன்றின் பின்னர் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீண்டும் அதிகாரத்துக்கு வந்தார்.

9 வருமான உதவித்திட்டத்தை 1980 ஜூன் மாதமளவில் நிறுத்தி, அடுத்த அரை வருடத்துக்கான மீதிப்பணத்தை தற்பொழுது இத்திட்டம் அமுல் செய்யப்படும் தேர்தல் தொகுதிகளின் அபிவிருத்தி வேலைகளில் செலவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் பத்திரிகைகளுக்கு தெரிவித்தார்.

12 பிரேசிலின் வர்த்தகப் பற்றுக்குறை நவம்பரில் 42 கோடி டொலராகவும், ஜனவரியில் 204 கோடி டொலராகவும் இருந்தது. 1979 ல் பணவீக்கம் 77.2 சதவீதமாக இருந்ததென 'எகனமிஸ்ட்' சஞ்சிகையில் வெளியாகியுள்ள செய்தியொன்று கூறுகிறது.

தங்க ஏற்றுமதி மூலம் தென் ஆபிரிக்கா சென்ற வருடம் 700 கோடி டொலர்களை சம்பாதித்தது.

வாக்குப்பலத்தில் நான்கில் மூன்று பங்கினைக் கொண்டிருக்கும் 127 அங்கத்துவ அரசாங்கங்களின் அனுமதியைப் பெற்ற பின்னர், உலக வங்கி அதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தை 800 கோடி டொலராக (இரு மடங்கால்) அதிகரித்தது.

15 1973-74 காலப்பிரிவில் சுமார் 10,000 வரியிறுப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூ. 2.5 கோடி கட்டாய சேமிப்புக்களை மீளச் செலுத்தும் நடவடிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆரம்பித்தது.

16 அரச ஊழியர்களுக்கான புதிய அலுவல் நேரம் (30 நிமிட பகலுணவு இடைவேளையுடன்) மு.ப. 8.00 முதல் பி.ப. 3.30 வரையாக அமுல் செய்யப்பட்டது.

17 அரசாங்கத்துக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான (மாதாந்தம் 25 ரூபாவுக்கு குறைவான வாடகை விதிக்கப்பட்டிருந்த) சுமார் 21,000 வீடுகள் அவற்றின் குடியிருப்பாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

18 தீவெங்கணுமிருக்கும் 9700 பாடசாலைகளில் பாலர் வகுப்பிலிருந்து 10 ந் தரம்வரை கல்வி கற்கும் சகல சிறுவர்களுக்குமான இலவச பாடநூல் வினியோகத் திட்டத்தை குளியாப்பிட்டியாவில் ஜனாதிபதி அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார்.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களிலும் பயன்படுத்துவதற்கென, சீனா இலங்கைக்கு வழங்கவிருக்கும் 50 கோடி ரூபா கடனுக்கான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

20 கோதுமை மா, பாண், சீனி என்பவற்றின் விலைகள் முறையே 14 சதம், 10 சதம், ரூ. 1.50 என அதிகரிக்கப்பட்டன.

21 உலக சீனி விலைகள் கடந்த மூன்றரை வருட கால அதியுச்ச மட்டத்தை எய்தின.

22 லண்டன் தங்க விலை 135 டொலர்களால் வீழ்ச்சியுற்றது.

23 உலகின் பிரதான வானூர்தி தாபனங்கள் ஏப்ரல் 1 ம் திகதியிலிருந்து, அவற்றின் பயணிகள் கட்டணத்தை 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையும், பொதிகளுக்கான கட்டணத்தை 6 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரையும் அதிகரிக்கும். ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச வான் பயணச்சங்க மாநாடொன்றில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக லண்டன் பினான்சியல் டைம்ஸ் செய்தியொன்று குறிப்பிடுகின்றது.

25 பெட்ரோல், மண்ணெண்ணெய், ஏனைய பெட்ரோலிய உற்பத்திகள் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டத்தை சீர் தூக்கிப்பார்க்கும் பொருட்டு ஜனாதிபதி ஒரு கமிட்டியை நியமனஞ் செய்துள்ளார்; ஆணைக்குழுவின் தற்போதைய அதிகார எல்லைகளுக்கு வெளியே முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பாக அதற்கு அதிகாரம் வழங்குவது பற்றி இக்கமிட்டி பரிசீலனை செய்யும்.

27 1946 ம் ஆண்டின் பின்னர் மிக மோசமான பணவீக்கத்தினை சென்ற வருடம் அமெரிக்கா எதிர் நோக்கியது. நுகர்பொருள் விலைகள் 13.3 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக லண்டன் பினான்சியல் டைம்ஸ் கூறுகிறது.

28 ஸ்ரீலங்காவின் கிராமியச் சந்தைகளை (பொல) அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை திட்ட அமுலாக்கல் அமைச்சு வகுத்திருப்பதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். முதல் படியாக, உள்ளூராட்சி நிறுவனங்களால் பரிபாலிக்கப்படும் 200 சந்தைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

29 உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான சவுதி அரேபியா மண்டி எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையை (ஜனவரி 1 ம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில்) 2 டொலர்களால் அதிகரித்தது. ஏப்ரல் 1 ம் திகதியன்றைக்கு பிறிதொரு விலை அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக லண்டன் பினான்சியல் டைம்ஸ் செய்தியறிக்கையொன்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூறு ஆண்டுகளுக்கு முந்திய தோட்டத் தொழிலாளர். அவர்களது நிலைமைகள் எவ்வளவு தூரத்துக்கு மாறுதலடைந்துள்ளன? ஜனவரி 1888ல் லண்டன் 'கிராபிக்' பத்திரிகையில் வெளியான இப்படங்கள் இலங்கையில் தேயிலை நடுகை, உற்பத்திப்படி முறைகளை காட்டுகின்றன.

(1) பயிர்ச் செய்கையாளரும் பயிர் நடுவோரும்
(2) அம்பகமுவ பிளக்ஸ்டோன் தோட்டத்தில் தொழிலாளர் வரவு பதிவு
(3) கவ்வாத்து வெட்டுதல்
(4) கொழுந்து பறித்தல்
(5) அரைத்தல்
(6) காய வைத்தல்
(7) பொங்க வைத்தல்
(8) உலர வைத்தல்
(9) தரம்பிரித்தல்
(10) கலவை
(11) பொதி கட்டுதல்

# தோட்டத் தொழிலாளர்

மேலைத்தேச உலகில் வாழும் சீமான்களினதும், சீமாட்டிகளினதும் சோம்பல் மிகு மாலைப் பொழுதுகளுக்கு இனிமையூட்டும் பானமொன்றை வழங்குவதற்காக, ஸ்ரீலங்காவின் மேகம் மூடிய மலைகளில் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளை, மழையை, பனியை குளிரை, வறுமையை எல்லாவற்றையுமே சகித்துக் கொண்டு உழைத்துவரும் தோட்டத் தொழிலாளாகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட 'புகழ் பூத்த வரலாற்றுப் பிதுரார்ஜிதமொன்றுக்கு' உரித்துடையவர்கள். தேசத்தின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக விளங்கும் ஒரு துறையை தொடர்ந்தும் இயக்கிச் செல்லும் இவர்கள், நீணட நெடுங்காலமாக புறக்கணிப்புகளுக்கும், அடக்கு முறைகளுக்கும், இம்சைகளுக்கும் ஆளாகி இருப்பது மட்டுமன்றி, தலைமுறை தலைமுறையாக தமது கரங்களின் உழைப்பினால் செழிப்புற்ற ஒரு நாட்டில் ''நாடற்றோர்'' என்ற 'கௌரவத்தினையும்' பெற்றுள்ளார்கள். இந்த சமூகத்தினரின் துயரம் தோய்ந்த கதை கருக்கொண்ட வரலாற்றுப் பின்னணி, அதன் சமூகவியல் குணம்சங்கள், பொருளாதார நிலைமைகள், எதிர்காலம் போன்ற பரவலானதும், சிக்கலானதுமான பல்வேறு அம்சங்களையும் 'நோக்கின்' இந்த இதழுக்கான விஷேச அறிக்கை சுருக்கித் தர முயல்கின்றது.

ஸ்ரீ லங்காவின தோட்டத் தொழிலாளர், மூன்றாவது மண்டலம் சார்ந்த பல நாடுகளிலுள்ள கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வரலாற்று ரீதியான தலைவிதியையே தாமும் பகிர்ந்து கொள்கின்றனர். குடியேற்ற நாட்டு ஆதிக்க முறையின் கீழ் 19 ம் நூற்றாண்டில் நடைபெற்ற மேற்கத்திய முதலாளித்துவ விஸ்தரிப்பின் 'உற்பத்திகளே' இவர்கள். காலனி ஆதிக்க முறைக்கு அடையாளமாக ஒன்றில் பெருந்தோட்டத் தொழில் அல்லது சுரங்கந் தோண்டும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை ‘‘லிப்டனின் தேயிலைத் தோட்டமாக’’ மாற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 1860 க்களில் எடுக்கப்பட்டன. ஆனால், இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் வந்து குடியேறும் முறை இதற்கு முன்பு பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. வீதி அமைப்பிலும், இருப்புப் பாதை அமைப்பிலும் மற்றும் பொதுப் பயன்படு நிர்மாணப் பணிகளிலும் ஈடுபடுத்துவதற்காக இந்தியத் தொழிலாளர் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டனர். 1830 ஆம் ஆண்டிலிருந்து கோப்பித் தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 1880 களில் இலை சுருட்டி நோயொன்று அவற்றை அழித்து விட்டபோது, அவற்றிற்குப் பதிலாகத் தேயிலைத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிலும், இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் நாட்டின் மத்திய பகுதிகளில் ரப்பர்த் தோட்டங்களும் உண்டாக்கப்பட்டன. காலக்கிரமத்தில், இங்கு வந்து குடியேறிய இந்தியத் தொழிலாளர்கள் இந்தத் தோட்டங்களிலெல்லாம் மலிவாகவும், மிகச் சுலபமாகவும் தமது உழைப்பினை வழங்கினர்.

ஆரம்பத்தில், சீனத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவர்கள் இவ்வேலைகளுக்குத் தகுதிவாய்ந்தவர்களல்லர் என்றும் அவர்களை வேலைக்கமர்த்தினால் அதிக செலவாகும் என்றும் அம்முயற்சிகள் கைவிடப்பட்டன. முதலில் சிறிய அளவில் ஆரம்பமான இந்தியத் தொழிலாளர்களின் குடியேற்றம் காலஞ்செல்ல விரிவடைந்து பெருமளவில் நடைபெறறது. குடிவரவு - குடியகல்வுப் புள்ளிவிவரங்கள் இம் மக்களின் குடிபெயரும் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் இலங்கைக்கு வந்து குடியேறுவதோ அல்லது இலங்கையிலிருந்து வெளியேறுவதோ, இலங்கைத் தோட்டங்களில் தொழிலாளருக்கிருந்த தேவையையும், அவர்களுடைய சொந்தக் கிராமங்களிலிருந்த நிலைமைகளையும் பொறுத்திருந்தது. இந்தியாவில் ஏற்பட்ட வரட்சிகளும், பஞ்சங்களும், மோசமான பயிர் விளைச்சல் நிலைமைகளும் அங்கிருந்து வெளியேற அவர்களைத் தூண்டிவிட்டன. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து குடியேறுவதும் இலங்கையிலிருந்து வெளியேறுவதும் ஏறக்குறைய பின்வரும் முறையில் காணப்பட்டன:

| | |
|---|---|
| *1840-1870* | கோப்பிக் கைத்தொழில் ஸ்தாபிதம்; குடியேற்றம் அதிகரிப்பு. |
| *1871-1881* | கோப்பியில் திடீர்ச் சுபிட்ச நிலை — ஆண்டுதோறும் 24,000 தொழிலாளர்கள் குடியேற்றம். |
| *1881-1890* | கோப்பிக் கைத்தொழிலின் சீர்குலைவு — குடியேற்றம் குறைவு. |
| *1891-1900* | தேயிலைத் தோட்டங்கள் திறப்பு; குடியேற்றம் விரிவடைவு வருடந்தோறும் 34,000 பேர் குடியேற்றம். |
| *1901-1911* | குடிமக்கள் தொகையில் ஏற்பட்ட இயற்கையான அதிகரிப்புடன் குடியேற்றம் 5 சத விகிதத்தைச் சேர்க்கின்றது. |
| *1923-1928* | ரப்பரில் திடீர்ச் சுபீட்சநிலை; ஒவ்வொரு வருடமும் 60,000 பேர் குடியேற்றம். |
| *1931-1940* | பொருளாதார மந்தம் நிலவிய வருடங்கள் — இலங்கையிலிருந்து தொழிலாளர் வெளியேற்றம். |
| *1941-1945* | யுத்த வருடங்கள் — தொழிலாளர் வெளியேற்றம் — 1942-1943 ம் வருடங்களின் போது குறிப்பாகக் குடிப்பெயர்ச்சியின் மீது இந்தியாவில் விதிக்கப்பட்ட தடையின் காரணமாக இலங்கையில் தொழிலாளரின் குடியேற்றம் நின்றது. |
| *1946-1949* | யுத்தத்துக்குப் பிற்பட்ட ஆண்டுகள் — யுத்த வருடங்களில் குடியேற்றத்தில் ஏற்பட்ட குறைவை ஈடு செய்யக் குடியேற்றம் வெகுவாக அதிகரிப்பு. |

இந்தியர்கள் இலங்கைக்கு வந்து குடியேறுவதும், இலங்கையிலிருந்து வெளியேறுவதும் காலத்துக்குக்காலம் இரு அரசாங்கங்களும் எடுத்த முடிவுகளினாலும் பாதிக்கப்பட்டது. இந்தியத் தரப்பைப் பொறுத்தவரை, இம் மக்கள் திரட்டப்பட்ட நிபந்தனைகளைப் பற்றியும், இவர்கள் குடிபெயர்ந்து இறுதியில் தோட்டங்களில் வேலை செய்த நிலைமைகளைப் பற்றியும் அவ்வப்பொழுது எழுந்த பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்து இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இந்த நிலைமைகள் ஆபிரிக்காவிலிருந்து அடிமைகள் குடிபெயர்ந்ததையோ அல்லது பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஐரோப்பாவிலிருந்த சமுதாயங்களில் முதலாளித்துவம் முதன் முதலில் வேரூன்றத் தொடங்கியபோது அங்கு நிலவிய தொழிலாளர் நிலைமைகளையோ எங்களுக்கு வலுவாக ஞாபகமூட்டுகின்றன. பொது ஜனக் கோரிக்கைக்கிணங்க இந்திய அதிகாரிகள் இக் குடிப்பெயர்ச்சியை நிறுத்திய 1839 ம் ஆண்டிலேயே இந்திய எதிர்ப்பு காணப்பட்டது. இத்தடை 1847 ம் ஆண்டில் நீக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போய்க் குடியேறுவோர் சரியாகக் கவனிக்கப்படுவதற்காக 1847 ம் ஆண்டிலிருந்து 1857 ம் ஆண்டு வரை இந்தியாவில் 24 குடியேற்றச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இலங்கையிலிருந்த குடியேற்ற நாட்டு அரசாங்கம் தலையிட்டதனால் இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திலும், 1920க்களிலும் குடியேறுவோர் சம்பந்தமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1927 ம் வருட குறைந்த பட்ச சம்பள கட்டளைச் சட்டமும், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய ஒழுங்கு விதிகளும் இவற்றில் அடங்கும்.

இந்தியாவில் 1922 ம் வருட குடியகல்வுச் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின், மேலும் தொழிலாளர்களைத் திரட்டல் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு இலங்கை சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியிருந்தது. இவற்றில் ஒன்று, குடியேற்ற நிதியமொன்றை உருவாக்குவதாகும். ஆரோக்கியக் காரணங்களுக்காகவோ அல்லது ஒவ்வாத வேலை காரணமாகவோ அல்லது முதலாளியால் அநீதியான முறையில் நடத்தப்பட்ட காரணத்துக்காகவோ அல்லது விருத்தாப்பிய தசையில் தங்களைப் பராமரித்துக்கொள்ள இயலாத நிலையிலிருந்தாலோ தொழிலாளர்களைத் திருப்பியனுப்பிவிட இந்நிதியம் உபயோகிக்கப்பட வேண்டும். இத்திட்டம் 1924 மார்ச் 1 ம் திகதியிலிருந்து அமுலுக்கு வரவேண்டும்.

இத்தகைய தடைகள் தோட்ட முதலாளிமாரின் பொருளாதார நலன்களுக்கு எதிரானவையாயிருந்தபோது அவர்கள் இவற்றை எதிர்த்தனர். ஏனென்றால், இத்தகைய தடைகள் மலிவான தொழிலாளர்களைப் பெறும் இடங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தன. இதேபோல, இலங்கையிலிருந்த குடியேற்ற நாட்டு அரசாங்கம் பல்வேறு சட்டங்கள் வாயிலாகக் கோரியவாறு தோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியத் தொழிலாளர்களின் சராசரி வருடாந்த குடிப்பெயர்ச்சி**

| காலம் | குடியேறியோர் | வெளியேறியோர் | குடியேறியவர்களில் எஞ்சியோர் |
|---|---|---|---|
| 1843-1850 | 47,028 | 19,693 | 27,335 |
| 1851-1860 | 57,464 | 31,443 | 26,021 |
| 1861-1870 | 68,415 | 53,185 | 15,230 |
| 1871-1880 | 102,511 | 82,471 | 20,040 |
| 1881-1890 | 57,856 | 52,752 | 5,105 |
| 1891-1900 | 121,484 | 85,057 | 36,427 |
| 1901-1910 | 95,324 | 67,975 | 27,341 |
| 1911-1920 | 87,388 | 47,917 | 39,421 |
| 1921-1930 | 106,880 | 67,043 | — 39,639 |
| 1931-1940 | 51,784 | 54,981 | — 3,197 |
| 1941-1950 | 47,252 | 54,994 | — 7,742 |

மூலம்: எஸ். யூ. கொடிக்கார எழுதிய ''சுதந்திரத்துக்குப் பின்பு இலங்கை — இந்திய உறவுகள்'' என்னும் புத்தகம் — 1965, கொழும்பு, பக்கம் 14.

டத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகளையும் கூட தோட்ட முதலாளிமார் எதிர்த்தனர். குடியகல்வு நிலைமைகளையும் தொழிலாளர் நிலைமைகளையும் பற்றி எழுப்பப்பட்ட பல்வேறு இந்தியக் கோரிக்கைகளையனுசரித்தே இலங்கைக் குடியேற்ற நாட்டு அரசாங்கம் இக்கோரிக்கைகளை விடுத்தது.

''திடீர்ப் பொருளாதார சுபிட்சம்'' எனப்படும் நிலை ஏற்பட்ட காலங்களில், குடிப்பெயர்ச்சிக்குத் தடைவிதிக்க இந்திய அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளையும் தோட்ட முதலாளிகள் எதிர்த்தனர். ஆனால், அவர்களுடைய பொருளாதார நலன்களுக்குக் குறைந்த தொகையான தொழிலாளர்கள் தேவைப்பட்டபோது, பல்வேறு திட்டங்களின் கீழ் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்விதமாக 1930 க்களின் முற்பகுதியில் பொருளாதார மந்தம் உச்ச நிலையிலிருந்தபோது, இலங்கை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்த தேயிலை - ரப்பர் கட்டுப்பாட்டுத் திட்டமொன்றின்படி இந்தியத் தொழிலாளர்களில் உபரியாயிருந்த பெருந்தொகையானோர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். இதற்காக 1937 ம் ஆண்டில் ஒரு விசேஷ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவ்விதமாக, சுதந்திரத்துக்கு முன்பு இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடிபெயரும் தன்மை பெருமளவுக்குத் தோட்டங்களின் பொருளாதார நலன்களாலேயே நிர்ணயிக்கப்பட்டது. தென்னிந்தியக் கிராமங்களில் வறுமைப்பட்ட மக்களிடையேயிருந்து திரட்டப்பட்ட இத்தொழிலாளர்கள் உண்மையில் தங்களுடைய வாழ்க்கை நிலைமையை விருத்தி செய்வதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தைத் தேடிய வண்ணம் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்த ஒரு கோஷ்டியினராகவே இருந்தனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு, பல காரணிகள் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் வந்து குடியேறுவதைக் கட்டுப்படுத்தத் தொடங்கின. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை எதிர்நோக்கிய இலங்கை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்த கட்டுப்பாடுகள் அக்காரணிகளில் பிரதானமானவையாகும். இது, 1940 க்களில் அப்போது உணரப்பட்ட பொருளாதார மந்தத்தின் விளைவாக ஆரம்பமாயிற்று. கொடிக்கார கூறியுள்ளவாறு 1937 ம் ஆண்டுக்குப் பின் இலங்கைத் தோட்டங்களுக்காக இந்தியாவில் தொழிலாளர்கள் திரட்டப்படவில்லை. தோட்டங்கள் ஏற்கனவே தெவிட்டல் நிலையை அடைந்துவிட்டன. 1941 ம் வருட குடியேற்றமசோதா (சட்டமூலம்) வொன்று இலங்கையரல்லாதார் இலங்கைக்கு வந்து குடியேறுவதைக் கட்டுப்படுத்த வகை தேடியது. இரண்டாவதாக, அந்நியச் செலாவணி சம்பந்தமாக, அப்போதிருந்த இலங்கை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்த பல்வேறு கட்டுப்பாடுகளாலும், தொழிலாளர் படையை இலங்கையர் மயமாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளாலும் இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் வந்து குடியேறுவதற்கு இலங்கை கவர்ச்சியளிக்கவில்லை. 1948 ம் வருட, 1949 ம் வருட பிரஜா உரிமைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் தனிநபர்கள் தங்களைப் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட்டது; அத்துடன், ஏற்கனவே இலங்கையில் வசித்துவந்த இந்தியத் தொழிலாளர்கள் ''நாடற்றவர்கள்'' ஆக்கப்பட்டனர்; இதனால் இந்த இந்தியத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரையாவது தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பிவிட இலங்கை அரசாங்கம் விரும்புகிறதென்பது தெளிவாகிவிட்டது. 1930 க்களில் இந்தியத் தொழிலாளர்கள் தாமாகவே விரும்பித் தாய் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிடிருந்திருப்பார்களேயாயின், 1949 ம் ஆண்டுக்குப் பின்னர் அது அவர்களைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கையாகி விட்டது. நாற்பதுக்களின் பிற்பகுதியிலும், சுதந்திரத்துக்குப் பின்பும் இந்தியர்கள் மேலும் கீழும் போய்க்கொண்டிருந்தபோதிலும், தோட்டத் தொழிலாளர்களில் ஒரு சிறிய விகிதத்தினரே இதில் சம்பந்தப்பட்டனர் எனத் தோன்றுகிறது. 1964 ம் ஆண்டளவில், மிதமிஞ்சிய தொழிலாளர்களைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பும் திட்டங்களின்படியும், இலங்கையில் 1948 ம் வருட பிரஜா உரிமைச் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின் இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வைத்திருப்போரைத் திருப்பியனுப்பும் ஏற்பாடுகளின்படியும் 15 வருட காலத்துக்குள்ளே (அஃதாவது 1949 ம் ஆண்டிலிருந்து 1964 ம் ஆண்டு வரையுள்ள காலம்) 184,771 பேர் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

உதாரணமாக, 1946 ம் ஆண்டில் இலங்கையில் வந்து குடியேறிய 246,000 இந்தியர்களில் 80,000 க்கும் குறைந்த தொகையினரே தோட்டத் தொழிலாளர்களாயிருந்தனர். 1954 ம் ஆண்டில், மொத்தம் 100,000 பேர் வந்து குடியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர்களில் 27,000 பேர் மட்டுமே தோட்டத் தொழிலாளர்கள். 1944 - 50 ஆண்டுகளைப் பொறுத்தவரை, சராசரியாகச் சுமார் 55,000 தோட்டத் தொழிலாளர்கள் வருடந்தோறும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும், இந்தியாவிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து இலங்கைக்கும் பிரயாணஞ் செய்தனர். இது தோட்டத்தி லுள்ள வளர்ந்தோர் தொகை யில் ஏறக்குறைய ஏழில் ஒரு பங் காகும். இந்தப் போக்கிலிருந்து, தோட்டத் தொழிலாளர்கள் ஒவ் வோர் ஏழாண்டுக்கு ஒருமுறை இந்தியாவுக்கு விஜயம் செய்கின் றனரென்று சிலர் சாதிக்கின்ற னர். தோட்டங்களுடன் நெருங் கிய தொடர்பு கொண்ட மற்ற வர்களின் கருத்து என்னவென் ருல், தோட்டத் தொழிலாளர் களில் ஒரு வேளை 50 சதவிகிதத் தினர் இந்தியாவுக்குப் போவதே யில்லை; இந்த வருடங்களில் (1944 ம் ஆண்டிலிருந்து 1950 ம் ஆண்டு வரை) சராசரியாக ஆண்டுதோ றும் இரு திசைகளிலும் பிரயா ணம் செய்தோர் ஒவ்வோர் இரண்டு அல்லது மூன்று ஆண்டு களுக்கு ஒரு முறை மேலும் கீழும் பிரயாணம் செய்யும் — இடத் துக்கிடம் பெயரும் — தனி நபர் களாவர்; எஞ்சியுள்ளோர் நிரந் தரமாகக் குடியேறியவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

1920 ம் ஆண்டளவில் இத் தொழிலாளர்களில் ஒரு பகுதி யினர் தோட்டங்களில் நிரந்தர மாக வசித்து வருவோராகி விட் டனர்; இந்தியாவுடன் இவர்களு டைய பந்தங்கள் தளர்ந்து வந் துள்ளன என்று சில ஆராய்ச்சி யாளர்கள் முடிவு செய்ய இக்கார ணங்களே அடிகோலியுள்ளன. (கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

**இந்திய தோட்ட மக்கள் தொகையின் வளர்ச்சி**

| | |
|---|---|
| *1827* .. .. | *10,000* |
| *1847* .. .. | *50,000* |
| *1877* .. .. | *146,000* |
| *1911* .. .. | *457,765* |
| *1921* .. .. | *493,944* |
| *1931* .. .. | *692,540* |
| *1946* .. .. | *665,853* |
| *1961* .. .. | *949,684* |
| *1971* .. .. | *951,785* |

**நாடற்ற தோட்டத் தொழிலாளர்கள்**

1931 ல் இலங்கையிலிருந்த மொத்த இந்திய ஜனத்தொகை ஏறக்குறைய 818,500. இக் கால த்திலேதான், இத்தொழிலாளர் கள் நாட்டுக்குள்ளே மூண்ட அர சியல் சர்ச்சைகளின் மையமாகி வருவதைக் காண்கிரேம். இந் நிலைமைக்குப் பின்னுள்ள பிர தான காரணம் முப்பதுக்களில் நிலவிய உலகளாவிய பொருளா தார நெருக்கடியேயாகும். அந் நெருக்கடி கடுமையான தொழில் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. ஆனல், ''இலங்கையிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்து க்கு இந்தியாவிலிருந்து மக்கள் கட்டுப்பாடற்ற முறையில் இங்கு வந்து குடியேறுவதே காரணம் என்று சிங்களத் தலைவர்கள் உறுதியாக நம்பினர். எனவே தொழிலாளர்கள் இங்குவந்து குடி யேறுவதைக் கட்டுப்படுத்தும்படி சட்ட சபையான அரசாங்க சபையை இடையருது நெருக்கி வரத் தொடங்கினர்.'' இந்தக் காலத்திலிருந்த இலங்கையரான தொழிலாளர் தலைவர்கள் கூட சிங்கள தேசிய வாதத்தைக் கொண்ட ஒரு கொள்கையையே பின்பற்றினர். ''1928 ம் ஆண் டில் திரு. குணசிங்காவின் இல ங்கை தொழிலாளர் சங்கம் துறை முகத்திலுள்ள தொழிலாளர் கொந்தராத்துக்காரர் களுடன் ஓர் ஒப்பந்தம் செய்தது. அதன்படி சரக்குக் கப்பல்களில் பொருள்களைக் கையாள்வதில் கொந்தராத்துக்காரர்கள் 25 சத விகித இலங்கையரான தொழி லாளர்களை அனுமதித்தனர். துறைமுகத்தில் இந்த வகையான வேலையை அதுவரை இந்தியர் கள் மட்டுமே செய்து வந்தனர்'' என்று கொடிக்கார கூறுகிருர்.

எனினும், 1971 ம் ஆண்டு குடி ஜன மதிப்பீடு நடைபெற்ற கால த்திலிருந்து தோட்ட ஜனத் தொகையின் பரிமாணம் மாறி யுள்ளது. 1979 பெப்ரவரி வரை 300,000 க்குச் சற்று மேற்பட்ட தொகையான இந்திய வம்சா வளித் தமிழர்கள் இந்தியாவுக் குத் திருப்பியனுப்பப்பட்டு விட் டனர்.

1931 ம் ஆண்டில், இலங்கை யில் குடியேறியுள்ள இந்தியர் களுக்கு டொனமூர் கமிஷன் சிபா ர்சு செய்தபடி வாக்குரிமை வழங் கப்படுவதைச் சிங்களத் தலைவர் கள் எதிர்த்தனர். வாக்குரிமைத் தகைமை வழங்கப்பட்டபின் ஏற க்குறைய 100,000 இந்தியர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற் றனர். 1936 ம் ஆண்டில் இத் தொகை 145,000 க்கு உயர்ந் தது. 1939 ம் ஆண்டளவில் இது 225,000 ஐ மிஞ்சிவிட்டது. முப் பதுக்களின் முடிவில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் இந்தியக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற இத்தலைவர்களின் கிளர்ச்சியை அதிகரித்தது. இக் காலத்திலே குடிப் பெயர்ச்சியின் போக்கு எவ்வாறு மேல் கீழாக மாறிவிட்டதென்பதை இதற்கு முன்பு கண்டோம். 1940 நவம் பரில் இவர்களைத் தாய்நாட்டுக் குத் திருப்பியனுப்பிவிட வேண்டு மென்று இலங்கை அரசாங்கம் ஏற்கனவே கோரி வந்தது. இந் திய வம்சாவளியினரின் நிலைமை பற்றி ஆராய்வதற்காக இந்தியத் தலைவர்களுக்கும் இலங்கைத் தலை வர்களுக்குமிடையே நடைபெற்ற முதலாவது மகாநாட்டில் இப் பிரச்சினை கிளப்பப்பட்டது.

அதே ஆண்டில் வாழிடத் தெரி வுத் தகைமையைப் புகுத்துவதன் மூலம் பிரஜைகளாகப் பதிவு செய் வதற்கு அரசாங்கம் கண்டிப்பான நடைமுறைகளை மேற்கொண்டது. இதனுல் 1943 ம் ஆண்டில் இலங் கையிலுள்ள இந்திய வாக்காள ரின் தொகை 168,000 க்கு வீழ் ச்சியுற்றது. இது, 1939 ம் ஆண்டு க்குப்பின் 57,000 பேர் குறைந் துள்ளதைக் காட்டுகிறது.

தேச சுதந்திரத்துக்கு முன்பு, இலங்கையில் வசித்துவரும் இந்த இந்தியர்களின் தலைவிதியை நிர் ணயிப்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே மற்றிரு மகாநாடுகள் நடைபெற்றன. முதலாவது மகாநாடு 1945 செப் டம்பரில் நடைபெற்ற இலங்கை -இந்திய உறவுகள் மகாநாடா கும். இரண்டாவதாக 1947 ம் ஆண்டில் நேரு - சேனநாயக்கா பேச்சுவார்த்தைகள் நடைபெற் றன. முதலாவது மகாநாட்டில் குடியேற்றம், குடியேறுவோரைப் பதிவு செய்தல், இந்தியர்களின் வாக்குரிமையும் அந்தஸ்து ஆகிய வஷயங்கள் ஆலோசிக்கப் பட்டன. இரண்டாவது மகாநாட் டில், இலங்கையில் வசித்து வரும் 800,000 இந்தியர்களில் யாவர் பிரஜா உரிமை பெறத் தகுதியுடையவர்கள் எனக் கரு தப்பட வேண்டும் இத்தகைய பிர ஜா உரிமை அவர்களுக்கு எவ் வாறு அனுமதிக்கப்பட வேண் டும் ஆகிய பிரச்சினைகளே பெரும்பாலும் ஆலோசிக்கப் பட்டன. இரு மகாநாடுகளி லும் ஒன்றும் முடிவு செய்யப்பட வில்லை. ஆனல், இலங்கையின் சுதந்திர அரசாங்கம் பிரஜா உரி மையை விளக்கியும், குடியேற் றத்தைக் கட்டுப்படுத்தியும் 1948 - 1949 ம் ஆண்டுகளில் மூன்று சட்டங்களை இயற்ற நடவடிக்கை எடுத்தது.

பிரஜா உரிமைச் சட்டம், 1948 ம் வருட இலங்கைப் பிரஜா உரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சனத்தொகை

| ஆண்டு | | மொத்த ஜனத்தொகை | மொத்த இந்திய ஜனத்தொகை | மொத்த ஜனத் தொகையில் இந்திய ஜனத் தொகையின் சதவிகிதம் | தோட்டங்களில் உள்ளோரின் தொகை | மொத்த இந்திய ஜனத் தொகையில் தோட்ட ஜனத் தொகையின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1911 | .. | 4,106,400 | 531,000 | 12.9 | | |
| 1921 | .. | 4,488,600 | 602,700 | 13.4 | | |
| 1931 | .. | 5,306,400 | 818,500 | 15.4 | | |
| 1946 | .. | 6,657,300 | 780,600 | 11.7 | 665,855 | 88.8 |
| 1953 | .. | 8,097,900 | 974,100 | 12.0 | 815,000 | 83.6 |
| 1963 | .. | 10,582,000 | 1,123,000 | 11.6 | * 932,090 | 82.5 |
| 1971 | .. | 12,689,900 | 1,174,000 | 9.3 | 951,785 | 81.9 |

* மதிப்பிடப்படும் தொகை

மூலம்: குடிஜனமதிப்பு — புள்ளிவிவரத் திணைக்களம், 1971 ஜனத்தொகை மதிப்பு

மைச் சட்டம், 1949 ம் வருட இலங்கை வாழ் இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் ஆகிய இரு பாராளுமன்றச் சட்டங்களில் அடங்கியுள்ளது. பிரஜா உரிமை பற்றிய முதலாவது சட்டத்தின் நோக்கம், இலங்கையிலுள்ள இந்தியர்களில் மிகப் பெரும்பாலோருக்கு பிரஜா உரிமை அளிப்பதற்கு வகை செய்வதல்ல. இரண்டாவது சட்டம் பதிவு மூலம் பிரஜா உரிமை பெறுவதற்குரிய நிபந்தனைகளை விதித்து இலங்கை வாழ் இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் 1952 ம் ஆண்டில் திருத்தப்பட்டது.

1948, 1949 ம் வருட பிரஜா உரிமைச் சட்டங்களின்படி, 1951 ஆகஸ்ட் 5 ந் திகதி வரை பிரஜா உரிமை கோரி 825,000 இந்தியர்கள் 237,034 மனுக்களைச் சமர்ப்பித்தனர். சகல மனுக்களையும் பரிசீலனை செய்ய 1962 ம் ஆண்டு வரை பிடித்தது. இச்சட்டத்தின்படி பிரஜா உரிமைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் மொத்தத் தொகை 134,188; 16.2 சதவிகிதத்தினரே பிரஜா உரிமை பெற முயன்றனர். 1964 ம் ஆண்டளவில், 134, 276 பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

1953 ஜூனில் லண்டனில் நடைபெற்ற நேரு - சேனநாயக்கா சம்பாஷணைகளும், 1954 ஜனவரியில் புது டில்லியிலும் மீண்டும் .954 அக்டோபரிலும் நடைபெற்ற நேரு - கொத்தலாவலை சம்பாஷணைகளும் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையைத் தீர்க்க முயன்ற மகாநாடுகளாகும். இம் மகாநாடுகளெல்லாம் நிலைமையில் எந்தக் கணிசமான மாற்றத்தையும் உண்டாக்க முடியவில்லை. ஒப்பந்தங்கள்ன் பல் வேறு சரத்துக்களை வியக்கியானம் செய்வதில் தோன்றிய தகராறுகளால் ஒப்பந்தங்கள் முன்னேறவில்லை.

இலங்கையிலுள்ள இந்தியர்களின் தொகை 1964 செப்டம்பர் 25ந் திகதியன்றிருந்தவாறு 1,003,269 எனக் கணக்கிடப்பட்டது. இந்தியக் கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) வைத்திருப்போரின் தொகை 28,269 ஆதலின், 975,000 பேரின் பிரஜா உரிமை பற்றி முடிவு செய்ய வேண்டியிருந்தது. 1964 ம் ஆண்டில் முடிக்கப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட வகையினர் கட்டாயமாகத் திருப்பியனுப்பப்பட வேண்டியவர்களாவர்.

இலங்கையில் வசிக்கும் 975,000 இந்திய வம்சாவளியினரில் 525,000 பேருக்கு 15 வருட காலத்தில் இந்தியப் பிரஜா உரிமை வழங்குவதென்றும் அதே காலத்தில் 300,000 பேருக்கு அவர்களுடைய இயற்கையான அதிகரிப்புடன் இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள 150,000 பேரின் பிரஜா உரிமை அந்தஸ்து 1974 ம் ஆண்டுவரை ஒத்தி வைக்கப்பட்டது. இவர்களில் பாதிப் பேரை இந்தியாவுக்குத் திருப்தியனுப்புவதென்றும் மற்றப் பாதிப்பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பெருந்திட்ட வட்டாரங்கள் கூறுகிறபடி, இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்போரில் ''ஒரு சிறிய தொகையினர்'' (5,000 பேர் அஃதாவது 1.6 சதவிகிதத்தினர்) இலங்கையில் மரணமடைந்து விட்டனர். 275,000 பேர் (24.2 சதவிகிதத்தினர்) தங்களுடைய இந்தியக் கடவுச் சீட்டுகளை காலாவதியாக விட்டுள்ளனர். விவரங்களினபடி, 1964 ம் ஆண்டுக்கும் 1979 ம் ஆண்டுக்குமிடையே பிரஜா உரிமை அந்தஸ்து முடிவுசெய்யப்பட வேண்டியிருந்த 975,000 பேரில் அரைவாசிப் பேருக்குச் சற்று மேற்பட்ட தொகையினர் (508,601 பேர் அல்லது 53.5 சதவிகிதத்தினர்) ''நாடற்றதன்மை'' என்னும் வரம்புகளுக்குள் தொடர்ந்து இருந்து வருகின்றனர் என்பது தெளிவாகிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுக் காரியதரிசி திரு. எம். எஸ். செல்லசாமியின் அறிக்கையை மேற்கோள் காட்டி 11.12.79 திகதிய ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியின்படி, 15 வருட காலம் பூர்த்தியடைந்த பின் 255,400 பேர் மட்டுமே தாய்நாட்டுக்குத் திருப்பி யனுப்பப்பட்டுள்ளனர். சுமார் 160000 பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்டவர்களில் ஏறக்குறைய 60,000 பேர் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கால வரைக்கு மேல் இங்கு தங்கியிருந்து வருகின்றனர். இன்னொரு 30,000 பேர் வழக்கமாக வழங்கப்படும் ஒரு வருட 'விசா' வுடன் இங்கு தங்கியிருக்கின்றனர். இதனால் மொத்தம் 345,000 பேருக்கு இந்தியப் பிரஜா ரிமை வழங்கப்பட்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் நோக்கம் 525,000 பேருக்கு அவர்களுடைய இயற்கையான அதிகரிப்புடன் இந்தியப் பிரஜா உரிமை வழங்கும் அதே சமயத்தில் 300,000 பேருக்கு அவர்களுடைய இயற்கையான அதிகரிப்புடன் இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதாகும். 15 வருட கால முடிவில் இந்தியா 345,000 பேருக்கு பிரஜா உரிமை வழங்கியுள்ளது; இலங்கை 160,000 பேருக்குப் பிரஜா உரிமை வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் ஆரம்பத்திலிருந்தே காலதாமதங்கள் காணப்பட்டன. இந்த ஒப்பந்தம் 1964 ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டபோதிலும், இலங்கை - இந்திய (அமுல்) சட்டம் 1967 ம் ஆண்டிலேயே இயற்றப்பட்டது. இக்கால அள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துயர் தோய்ந்த கதை துவங்குகிறது...

''எங்கள் நாட்டில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்க குடியேற்றவாசிகள் கோப்பிக்காக ஏராளமான காணிகளைத் திறக்கத் தொடங்கிய 1820 களில் இந்தக் கதை ஆரம்பமாகின்றது. தோட்டங்களுக்குத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். எனினும், உள்நாட்டுச் சிங்களத் தொழிலாளர்கள் முன்வருவதாயில்லை. உள்நாட்டுத் தொழிலாளர் படையொன்றின் வளர்ச்சியைத் தடுத்த மிக முக்கியமான காரணம் யாதெனில், சிங்களக் கிராமம் எதனுலும் தொடப்படாது அப்படியே இருந்து வந்ததனுல், தோட்டங்களில் வதிவுத் தொழிலாளர்களாகக் குறைவான சம்பளத்தில் வேலை செய்யத் தயாராயிருக்கும் — காணிகளை விட்டு விலகிய — கூலித் தொழிலாளர் வர்க்கமொன்று தோன்றவில்லை என்பதாகும். இப்பிரச்சினைக்கு பிரிட்டிஷ் நில - அதிபர்கள் ஒரு தீர்வைக் கண்டனர்; அவர்கள் அயலிலுள்ள தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர்.''

''முதலாவதாகத் திரட்டப்பட்ட தொழிலாளர்கள் திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய தமிழ் பேசும் மாவட்டங்களிலிருந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்தவர்களாவார்கள் இந்தியாவிலுள்ள தங்களுடைய கிராமங்களிலிருந்து இராமேஸ்வரத்துக்கு வழியெல்லாம் நடந்தே வந்தனர். பின்னர், தலைமன்னரிலிருந்தோ அல்லது அரிப்பிலிருந்தோ இலங்கையின் மத்திய மலைகளுக்கிடையேயுள்ள தங்களுடைய தோட்டங்களுக்கு மீண்டும் நடந்தார்கள். வனந்தரத்தினூடாக நடந்துவந்த நூற்றுக்கணக்கானோர் மாண்டனர். 'இதெல்லாம் இயற்கையான அழிவு செலவு' எனக் கூறக்கூடிய மனோபாவம் படைத்த மனுப் பகைவர்களாயிருந்தனர் அக்காலத்திய ஆள் திரட்டுவோர். இக் குடிப் பெயர்ச்சியில் உயிர் பிழைத்தோர் சோர்வுற்றவர்களாகவும், கடின வேலைக்குத் தகுதியற்றவர்களாகவும், தாங்கள் கொண்டுவந்த பணத்தையோ அல்லது பொருள்களையோ பல சமயங்களிலே வழியில் பறி கொடுத்தவர்களாகவும் தோட்டங்களுக்கு வந்து சேர்ந்தனர்.''

''சிறு தொகையாக ஆரம்பமான இவர்களின் வருகை விரைவில் இடையருத பாய்ச்சலாகிவிட்டது. 1842 ம் ஆண்டில் 14,000 பேரும், 1843 ம் ஆண்டில் 31,000 பேரும், 1844 ம் ஆண்டில் 71,000 பேரும், 1845 ம் ஆண்டில் 67,000 பேருமாக இப்படி வந்தனர்.''

''1843 ம் ஆண்டிலும் 1845 ம் ஆண்டிலும் வந்த துன்பத்துக்காளான கூலிப் பட்டாளங்கள் — ஐம்பது அல்லது நூறு ஆண்களுக்கு ஓரிரு பெண்கள் வீதம் — அறிமுகமில்லாத ஒரு நாட்டில் அந்நியர்களாக — போதிய உணவோ உடையோயின்றி — வழியில் கிடைத்த எந்தக் கழிக்கப்பட்ட உணவுப் பொருள்களையும் சாப்பிட்டுக் கொண்டும் . . . . . காட்டுப் பாதைகளில் பிரயாணம் செய்து கொண்டும் . . . . மைல் கணக்கான தூரத்துக்கு அவர்களுக்கு அருகில் எந்த இடத்திலும் சில சமயங்களில் ஒரு துளி நீரும் காணப்படாது . . . . மற்றுஞ் சமயங்களில் நாளின் பெரும்பகுதியை முழங்காலளவு நீரில் கழித்தும் — சுற்றுப் புறமெங்கும் சதுப்பு நிலம் — கானகத்திலிருந்து அப்பொழுது தான் மீட்கப்பட்ட தோட்டங்களிலோ அல்லது தோட்டங்களாக மாற்றப்படவிருக்கும் தறுவாயிலுள்ள காடுகளிலோ வேலை செய்து கொண்டும் — மோசமான குடியிருப்பில் இருந்து கொண்டும் — அவர்களுடைய முதலாளிமாரால் புரிந்து கொள்ளப்படாமலுமிருந்தனர்.''

''தோட்டங்களில் கட்டுப்படுத்தப்படாத தனியார் முயற்சியின் சகல கேடுகளாலும், குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கு நேரும் கதியினுலும் அவர்கள் துன்பப்பட்டனர். சாத்தியமான வரை மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயும், ஆகக் குறைந்த செலவிலும் ஆகக் கூடிய இலாபங்களை ஈட்டுவதே தோட்டத்துரையின் நோக்கமாயிருந்தது. தொழிலாளர்கள் சுகாதாரமற்ற குடிசைகளில் குடியிருக்க வேண்டியிருந்தது; சில சமயங்களில் 10 அடியுள்ள அறையொன்றில் அவர்களில் பத்துப் பேர் நெருக்கமாக அடைக்கப்பட்டனர். கூலிகள் மிகக் குறைவாக இருந்தன. அதுவும் கிரமமாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆட்சேபணைகள் 'அடிகளாலும் சொந்த நிக்கிரகத்தினுலும் அடக்கப்பட்டன.' நோய் வாய்ப்பட்டோர் கவனிக்கப்படவில்லை; சில சமயங்களில் பாதையோரத்தில் சாக அவர்கள் துரத்தப்பட்டனர். இறந்தவர்கள் மரண விசாரணையோ அல்லது வேறு விசாரணையோயின்றிப் புதைக்கப்பட்டனர். இலங்கையில் விவசாயத்திலும் மற்றும் தொழிலாளர்களாகவும் வேலைக்கமர்த்தப்பட்ட இந்தியர்களிடையே ஏற்பட்ட மரண விகிதத்தை ஆராய்ந்தறிவதற்காக 1862 ம் ஆண்டில் ஒரு கட்டளைச் சட்டத்தை இயற்ற வேண்டியதவசியமெனக் கண்டனர். 1841 ம் ஆண்டுக்கும் 1849 ம் ஆண்டுக்கும் இடையே, குடியேறியவர்களில் 70,000 பேர் அல்லது 25 சத விகிதத்தினர் பல்வேறு காரணங்களினுல் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது.''

''மரண விகிதம் உயர்வாயிருந்தது. 1841 ம் ஆண்டுக்கும் 1849 ம் ஆண்டுக்குமிடையே குடியேறியவர்களில் சுமார் 70,000 பேர் அல்லது 25 சதவிகிதத்தினர் இறந்ததாக ''கொழும்பு ஒப்ஸர்வர்'' அறிவித்தது. இந்த உயர்ந்த மரண விகிதத்துக்குக் காரணங்கள் என்ன?''

''முதலாவது காரணம் பிரிட்டிஷ் தோட்டத்துரைகளின் பாராமுகம். ஆக்லண்ட், போயிட் அன்ட் கம்பெனி அல்லது றூட்ஸன், சண்ட்லர் அன்ட் கம்பெனி போன்ற பெரிய முகவர் ஸ்தாபனங்கள் இலங்கையில் வைக்கப்பட்டிருந்த படைப் பிரிவுகளைச் சேர்ந்த கமிஷன் அந்தஸ்துப் பெருத அதிகாரிகளைத் தோட்டங்களில் ஓவர்சீயர்களாகவும், சூப்ரண்டுகளாகவும் நியமித்தன. இவர்களில் அநேகர், இலங்கையில் தாங்கள் ஒரு குடியேற்ற நாட்டை ஸ்தாபித்தவர்களாதலால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணங்களும் நிறத் துவேஷமும் நிறைந்தவர்களாயிருந்தனர். இவ்விதமாகத் துரதிர்ஷடம் பிடித்த தொழிலாளர்கள் அடிக்கடி அவர்களுடைய கொடுமைக்கும் மிருகத்தனத்துக்கும் பலியாகினர்.''

''இரண்டாவது காரணம், தோட்டங்களுக்குச் செல்லும் வழியிலும், தோட்டங்களுக்கு வந்து சேர்ந்ததும் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதிகள் முற்ருகப் போதாதிருந்ததாகும். விஷபேதி (காலரா) யும் பெரியம்மை நோயும் உயர் விகிதத்தில் சம்பவித்தன. நோய் வாய்ப்பட்டு அலைந்து திரிந்தவர்கள் கரடுமுரடான அடிப்பாதைகளில் சாகவிடப்பட்டனர். அதே சமயத்தில் மற்றவர்கள் தங்களையும் மரணம் சூழுவதற்கு முன்பு நடையைத் துரிதப்படுத்தினர். கிடைக்கக்கூடியதாயிருந்த மருந்தை வாங்க அவர்களிடம் பணமில்லை. மேலும் தாங்கள் இந்தியாவில் விட்டுவந்த பட்டினி கிடக்கும் தங்களைச் சார்ந்திருப்போருக்கு அனுப்புவதற்காக எவ்வளவு பணத்தை மீதப்படுத்த முடியுமோ அவ்வளவு பணத்தை அவர்கள் மீதப்படுத்த வேண்டியிருந்தது.

''மூன்ருவது காரணம், தலைமன்னரிலிருந்து தோட்டங்களுக்குக் குடியேறிகள் வந்த பாதையின் கரடுமுரடான தன்மைகளும், அப்பாதை கடினமான பிரதேசத்துக்குக்கூடாக அமைந்து, பல்வேறு வெப்பதட்ப நிலைமைகளைக் கொண்டிருந்ததுமாகும்.''

''இறுதிக் காரணம், கங்காணி முறையின் கேடுகளும், எவ்வகையான சம்பளத்துடன் கூடிய வைத்திய லீவையும் அனுமதிக்கும் எந்தச் சம்பளச் சட்டமும் இல்லாதிருந்ததுமாகும். இதனுல் தொழிலாளி தான் சுகவீனமுற்றிருந்தால் கூட அல்லது வேலை செய்ய முடியாதவாறு பலவீனமாயிருந்தால் கூட தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்க வேண்டியிருந்தது.''

''மொத்தத்தில், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைத் தோட்டங்களுக்கு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயாணமும் பத்தொன்பதாம் நூற்ருண்டில் தோட்டங்களில் நிலவிய வாழ்க்கையும் மனிதத் தன்மையற்ற மகாபயங்கர அனுபவங்களாகும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் இந்தியா ஏற்கனவே சுமார் 7,900 பேருக்குப் பிரஜா உரிமை வழங்கிவிட்டது. இவர்களில் 2,600 பேர் திருப்பியனுப்பப் பட்டுவிட்டனர். இந்தியப் பிரதமர் 1973 ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இந்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப் பட்டது. ஆனல், தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டியவர்களைத் துரிதமாகத் திருப்பியனுப்புவது பற்றி எந்த ஒப்பந்தமும் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. மேலும், ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் ஏற்படும் காலதாமதங்களுக்கு இரு பிரதான காரணங்கள் உண்டு. தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டியவர்களுக்குத் தேவையான தஸ்தாவேஜுகளை (ஆவணங்கள்) வழங்குவதில் ஏற்படும்காலதாமதம் ஒரு காரணம். அவர்களுக்கு இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்டு, இந்தியக் கடவுச் சீட்டு கொடுக்கப்பட்ட நாளிலிருந்து தங்களுக்குத் தேவையான தஸ்தாவேஜுகளைப் பெற இவர்களுக்கு ஒரு வருட அவகாசம் அளிக்கப்படுகிறது. ஊழியர் சேமலாபநிதி, சேவைக் கால உபகாரப் பணம், நாணயப் பரிவர்த்தனை அனுமதிப் பத்திரம் இந்தியத் தரப்பிலிருந்து குடும்ப அட்டை ஆகியன பெறவே இந்த ஓராண்டு அவகாசம். இவற்றைப் பெறுவது துரைத்தன அதிகாரிகள் போடும் முட்டுக்கட்டைகள், தொழிலாளர்களின் அறியாமை, எழுத்தறிவின்மை ஆகியவற்றினுல் எழும் பல காரணங்களினுல் தாமதமடையலாம். இதன் விளைவாக, சுமார் 60,000 பேர் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலத்துக்குமேல் இங்கு தங்கியிருக்கின்றனர். இவ்வகையான கால தாமதங்களினுல் தொழிலாளர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாவதாகத் தோன்றுகிறது. இரண்டாவது காரணம் இலங்கை விகிதசமக் கொள்கையின் அடிப்படையில் பிரஜா உரிமை வழங்குவதாகும். இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்ட ஒவ்வொரு 7 பேருக்கும் 4 பேர் வீதம் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப் படுகிறது. இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்ட ஒவ்வொரு 7 பேருக்கு 4 பேர் வீதம் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கும் படியும், இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்டோர் உண்மையில் திருப்பியனுப்பப்படும் வரை காத்திருக்க வேண்டாமென்றும் தொழிற் சங்கங்களும், தோட்டத் தொழிலாளர்களுடன் வேலை செய்யும் மற்றும் குழுக்களும் கோரியுள்ளன. 1965 - 70 வருடங்களில் இருந்த அரசாங்கம் இதற்கு ஒப்புக் கொண்டது. ஆனல், 1970 - 77 வருடங்களில் இருந்த அரசாங்கம் இதை மாற்றி முந்திய விதியைப் பின்பற்றியது. இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதில் பெருங் காலதாமதம் ஏற்படுவதற்கு இது ஒரு காரணம் எனச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

### இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல்

| ஆண்டு | | இந்தியப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டோர் | தாய்நாட்டுக்குத் திருப்பி யனுப்பப்பட்டோர் | இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டோர் |
|---|---|---|---|---|
| 1964 | .. | 554 | 14 | — |
| 1965 | .. | 3,131 | 51 | — |
| 1966 | .. | 5,042 | 1,910 | — |
| 1967 | .. | 7,935 | 2,648 | — |
| 1968 | .. | 11,825 | 2,123 | 170 |
| 1969 | .. | 29,020 | 5,284 | 2,929 |
| 1970 | .. | 18,549 | 8,733 | 7,469 |
| 1971 | .. | 33,088 | 21,867 | 13,696 |
| 1972 | .. | 40,859 | 27,575 | 16,107 |
| 1973 | .. | 32,739 | 33,175 | 15,805 |
| 1975 | .. | 185,942 | 106,425 | 60,813 |
| 1976 | .. | 280,816 | 190,802 | 104,570 |
| 1978 (ஜூன் 30) | .. | 309,926 | 229,925 | 131,473 |

மூலம்: இலங்கைத் தேயிலை பெருந்திட்டப் பரிசீலனை — நிலைமை பற்றிய ஆவணம் இல. 4 பக்கம் 9 — 1978.

ஒப்பந்தத்தைப் பற்றிய இரண்டாவது வகைக் கண்டனம் இந்தியப் பிரஜா உரிமை வழங்கப் பட்டு, இந்தியாவுக்குத் திரும்ப வேண்டியிருப்போர் அனுபவிக்கும் கஷ்டங்களை மையமாகக் கொண்டுள்ளது. இந்தியாவுக்குத் திரும்புவதற்கு ஆயத்தஞ் செய்யும் அநேக தொழிலாளர்கள் பல்வேறு விதமான சுரண்டலுக்கும் அநியாய வட்டி அறவீட்டுக்கும் ஆளாகின்றனர். பிரஜா உரிமை வழங்கும் முறை சில சமயங்களில் குடும்பங்களும் உறவினர்களும் அன்புக்குரியவர்களும் பிரிந்து செல்வதற்கு அடிகோலுகிறது. தங்களுடைய தந்தையின் பிரஜா உரிமை முடிவுசெய்யப் பட்டபோது பராயமடையாதிருந்த (மைனர்) குழந்தைகள் தந்தைக்கு வழங்கப்பட்ட அதே பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளனர். எனினும், 18 வயதான அல்லது அதற்கு மேற்பட்ட வயதான குழந்தைகள் இந்தியாவோ அல்லது இலங்கையோ வழங்கக் கூடிய பிரஜா உரிமை அந்தஸ்துக்குத் தங்கள் சொந்த மனுக்களை அனுப்பும் காலம் வரை நாடற்றவர்கள் என்றே கருதப் படுகின்றனர். சில சமயங்களில் மனதை உருக்கும் பிரச்சினைகள் குடியேற்ற அதிகாரிகளை எதிர் நோக்குகின்றன. இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்ட ஓர் ஆண் அல்லது பெண்ணின் பிரயாணப் பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டிய ஒரு வருட காலத்துக்குள்ளே அந்த ஆண் அல்லது பெண் சந்தித்திருக்கும் ஓர் இலங்கைப் பிரஜையை (இவர் ஒன்றில் தமிழ் இனத்தவராகவோ அல்லது சிங்கள இனத்தவராகவோ இருக்கலாம்) மணக்க விரும்பும்போதே இந்த மனதைத் தொடும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆறுதல் கூறித் தேற்ற அதிகாரிகள் எவ்வளவுதான் முயன்றிருந்த போதிலும், தாயகம் மீள்வோர் (திருப்பியனுப்பப் படுவோர்) இந்நாட்டை விட்டுப் புறப்படும்போது எழும் அழுகைக் குரலையும், புலம்பலையும், பிரலாபத்தையும் மலை நாட்டிலுள்ள எந்தப் புகைவண்டி நிலையத்திலும் ஒருவர் காணமுடியுமாதலால், இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படும் விதம் மனிதாபிமானத்தைப் பொறுத்த அநேக பிரச்சினைகளுக்கு அடிகோலுகின்றதென்பதை மறுப்பது கடினமாகும்.

இந்த ஒப்பந்தம் சம்பந்தமாகத் தெரிவிக்கப்படும் இன்னொரு பலத்த கண்டனம் இதோ: தோட்டத் தொழிலாளரின் தலைவிதி இரு அரசாங்கங்களாலும் முடிவு செய்யப்பட்டபோது அவர்களு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் வாழ்வைத் தேடி . . . . .

தாய்நாடு மீளும் ஒருவர் புறப்படும் நாளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தமது குடும்பத்தினர் எல்லோருடைய பிரயாணப் பத்திரங்களையும் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். கடவுச் சீட்டுகளின் (பாஸ்போர்ட்) செல்லுபடி காலம் முடிவடைந்திருந்தால், அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்; கடவுச் சீட்டு வழங்கப்பட்டதற்குப் பின்பு பிறந்த குழந்தைகளின் பெயர்கள் தாயின் கடவுச்சீட்டில் சேர்க்கப்பட வேண்டும்; இறந்துபோன குழந்தைகளின் பெயர்கள் நீக்கப்பட வேண்டும்; தங்களுடைய தாயின் கடவுச்சீட்டு வழங்கப்பட்டதற்குப் பின்னர் 14 வயதை அடைந்த குழந்தைகள் தனியாக ஒரு கடவுச்சீட்டைப் பெற வேண்டும். இதற்கு, அண்மையில் எடுக்கப்பட்டு அததாட்சிப் படுத்தப்பட்ட மூன்று புகைப்படங்களும் ரூபா 6.25 ம் கண்டியிலுள்ள இநதிய ஹைகமிஷனுக்கு அனுப்பப்பட வேண்டும்.

இவற்றில் எதைச் செய்யத் தவறினாலும், தலைமன்னார் கப்பற்றுறை (பியா) யிலிருந்து புறப்படுவது தாமதமடையும். மறு பக்கத்தில், நாணயப் பரிவர்த்தனை அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கும் வாசகால அனுமதிப் பத்திரம காலாவதியாகும் திகதிக்குமிடையே செய்யத் தவறியவற்றைப் பூர்த்தி செய்துகொள்ள அடிக்கடி போதிய அவகாசம் இருப்பதில்லை.

இன்னொரு நாட்டில் வாழ்க்கையைத் தொடங்குவதற்காகத் தாங்கள் பல்லாண்டுகள் வரை அல்லது தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்துள்ள ஒரு நாட்டை விட்டுப் போகும் ஆட்களுக்குப் பயணச் சாமான்களைப் பொதுயாகக் கட்டுவதென்பது ஒரு முக்கியமான காரியமாகும். எனினும், எங்களுடைய ஆராய்ச்சி முடிவுகளின்படி இநதக் காரியம் அடிக்கடி சரியாகச் செய்யப்படுவதில்லை. பெட்டிகள் எளிதில் உடைந்துவிடக் கூடியனவாகவும் சரியாகக் கட்டப்படாமலும் இருக்கின்றன. சில சமயங்களில், ஒருவரின் சொந்த உடைகளை எடுத்துச் செல்வதற்குக்கூடப் போதிய உறுதியுடனில்லாத பெட்டிகளுக்குள் அம்மிகளும் கடப்பாரைகளும் திணிக்கப்படுகின்றன. தாயகம் மீள்வோரில் சிலர் இலங்கையில் தங்களுடைய தந்தையர் புதைக்கப்பட்ட புதை குழிகளிலிருந்து அல்லது இலங்கையில் தாங்களும் தங்களுடைய தந்தையரும் வாழ்ந்த எளிய வீடுகளின் தரையிலிருந்து மண்ணைத் தோண்டியெடுத்துப் பெட்டிகளில் நிரப்பிக் கொண்டு செல்லும் சம்பவங்களும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பழைய குடும்பப் புகைப்படங்கள் யாவும் பல சந்தர்ப்பங்களில் அவற்றின் அசல் கண்ணாடிச் சட்டங்களுடன் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியனவே.

தலைமன்னார் கப்பற்றுறைக்கு இரவு மெயில் வண்டியைப் பிடிப்பதற்காக தாயகம் மீள்வோரில் பெரும்பாலோர் தங்களுடைய தோட்டத்திலிருந்து கொழும்பு கோட்டை ரெயில்வே ஸ்டேசனுக்கு அல்லது பொல்காவலை ரெயில்வே ஸ்டேசனுக்குப் புகைவண்டியில் பிரயாணம் செய்கின்றனர்.

ஒவ்வொரு வாரமும் இராமேஸ்வரத்துக்கு மூன்று முறை — அஃதாவது செவ்வாய்க் கிழமையிலும் புதன் கிழமையிலும் வெள்ளிக் கிழமையிலும் — கப்பற் சேவை நடைபெறுகிறது. தாயகம் மீள்வோர் திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை அல்லது வியாழக் கிழமையன்று இரவு புகை வண்டியில் ஏறுகிறார்கள். செவ்வாய்க் கிழமையன்று புறப்படும் மெயில் வண்டியை அவர்கள் விரும்புவதில்லை. ஏனென்றால் செவ்வாய்க் கிழமையன்று பயணத்தைத் தொடங்குவது அபசகுனமென்று கருதப்படுகிறது. சில தோட்டங்கள் தோட்டப் பெயர்ப் பதிவு இடாப்பில் (செக்ரோல்) உள்ள ஒவ்வொருவருக்கும் பயண உதவிப்பணமாக 40 ரூபாயை வழங்குகின்றன. ஆனால், எல்லாத் தோட்டங்களும் இப்படிச் செய்வதில்லை.

தாயகம் மீள்வோர் இந்தியாவுக்குத் தங்களுடைய பயணத்தைத் தொடங்கிவிட்டார்களேயானால், வெளியாருடன் பேசுவதற்கு விரும்புவதில்லையென்பதை நாங்கள் கண்டு பிடித்தோம். அப்படிப் பேசினால், அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் இந்தியாவுக்குப் போய்ச் சேரவிடாது தங்களைத் தடுத்துவிடுவார்களென்று அவர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணம். ஏனென்றால், இந்தக் கட்டத்தில் இந்தியா தான் அவர்களுக்குப் புதிய நம்பிக்கையூட்டும் நாடாக விளங்குகின்றது.

புகைவண்டிப் பிரயாண நிலைமைகள் எவ்விதத்தும் சௌகரியமாயிருப்பதாகச் சொல்ல முடியாது. அளவு மீறிய ஜன நெருக்கம், போதிய வெளிச்சமின்மை, தண்ணீர் வராத குழாய் — இவை புகை வண்டிப் பிரயாணத்திலுள்ள பிரதான பிரச்சினைகள். மேலதிக நிறையுள்ள பயணச் சாமான்களுக்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதே வேளையில் சுமை கூலிக்காரர்களும் தரகர்களும் தாங்கள் செய்த சேவைகளுக்குப் பணம் கோருகிறார்கள்.

குழந்தைகளும் சில சமயங்களில் வளர்ந்தோரும் ரெயில் பெட்டிகளிலுள்ள நடைபாதைகளில் உட்கார்ந்து கொள்கின்றனர் அல்லது சாப்பிடுகின்றனர். எங்கு இடம் கிடைக்கின்றதோ அங்கு, ஆசனங்களுக்கு அடியில் கூட படுத்துறங்குகிறார்கள். ரெயில் மேடையில் விம்மி விம்மி அழுது புலம்புவதும், பிரலாபிப்பதும், இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி, தாயகத்துக்குப் புறப்பட்டுள்ளவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்வதும் ஆகிய இவையெல்லாம் தாயகம் மீள்வோர் தோட்ட லயங்களிலிருந்து புறப்படும் நாளன்று நடப்பவையே. மறுநாள் தலைமன்னார் கப்பற்றுறையிலிருந்து கப்பல் புறப்படும்போது நடக்கப் போவதற்கு இவை ஓர் ஒத்திகையுமாகும்.

## கப்பற்றுறையில்....

புகைவண்டி அதிகாலை சுமார் 5 மணிக்குத் தலைமன்னாரை அடைகின்றது. அப்போது இலங்கை வங்கி கல்லாப்பெட்டிக்கருகிலும், சுங்கத் துறையிலும் அமைந்துள்ள ‘கியூ’ க்களில் முதலிடங்களைப் பெற முண்டியடித்துக் கொண்டு பாய்கின்றனர்.

கப்பற்றுறையிலுள்ள நீர்வசதியும் மலஜலகூட வசதியும் போதா. உட்காருவதற்கு ஒரு சில பெஞ்சுகளே (வாங்கு) கிடைக்கக்கூடியனவாயுள்ளன. எநத நாற்காலிகளும் காணப்படவில்லை.

வங்கியில் கடவுச்சீட்டு வைத்திருக்கும் ஒவ்வொரு வயதுவந்தவரும் எஞ்சியுள்ள இலங்கை நாணயத்தில் 6.00 அமெரிக்க டாலர் பெறுமதி வரையும், ஒவ்வொரு குழந்தையும் 3.00 அமெரிக்க டாலர் பெறுமதி வரையும் மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போதுள்ள சட்டவிதிகள் இந்திய நாணயமாக மாற்ற அனுமதிக்கவில்லை. தாயகம் மீள்வோர் இப்பொழுது தான் முதல் முறையாக ஓர் அமெரிக்க டாலர் நாணயத் தாளைப் பார்க்கின்றார்கள். இது அச்சடிக்கப்பட்டுள்ள விதத்தைக் கவனிக்குமிடத்து, எழுத்தறிவற்ற ஒருவர் ஒரு டாலர் நோட்டுக்கும் பத்து டாலர் நோட்டுக்குமிடையே வித்தியாசம் காண்பது சுலபமல்ல. ஆதலால், கப்பற்றுறையிலோ அல்லது கப்பலிலோ அல்லது இந்தியாவுக்குப் போய்ச் சேரும் போதோ தாயகம் மீளும் சந்தேகமற்ற ஒருவர் ஒரு டொலர் நோட்டுக்குப் பதிலாகப் பத்து டொலர் நோட்டைக் கொடுத்து வருவது அபூர்வமாக நடைபெறும் ஒரு சம்பவமல்ல.

கப்பலில் 820 பிரயாணிகளுக்கே இடமுண்டு. இடங் காணாத தாயகம் மீள்வோருக்குக் கப்பலில் ஏற அனுமதி மறுக்கப்படுகிறது. இப்படி இடவசதி மறுக்கப்படுவோரின் தொகை தினமும் 10 இலிருந்து 200 வரை மாறுபடலாம். இவ்விதம் மறுக்கப்படுவோருக்காகவும் அவ்வப்போது இக்கட்டான நிலைக்கு ஆளாவோருக்காகவும் (உதாரணமாகக் குழந்தையொன்றைப் பெற்றெடுக்கும் தாய், மரணமடையும் ஒருவர், நெஞ்சறிய உண்மையிலேயே டிக்கெட் (பயணச் சீட்டு) டை இழந்த ஒருவர்) தகுந்த நிதி வசதியுடன் சேவைக் கமிட்டியொன்றைத் தலைமன்னார் கப்பற்றுறையில் அமைப்பதவசியமாகும்.

கப்பல் காலை 10 மணிக்குப் புறப்படும். கேப்டனின் தயவால் கப்பலின் புறப்பாடு அடிக்கடி பிற்பகல் 1.30 மணி வரை தாமதிக்கப்படுகிறது. இதனால் இருட்டுவதற்கு முன்பு கப்பல் மூன்று மணி நேரத்தில் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்து விடுகிறது.

## கப்பற் சேவை

கப்பலில் கலகலப்பான ஒரு சூழ்நிலை நிலவுகிறது: சிலர் கோஷ்டிகளாகச் சுற்றி உட்கார்ந்து, பேசிக் கொண்டும், சந்தோஷமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். குப்பை கூளங்கள் எங்கும் வீசப்படுகின்றன. ஆனால், கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் இதையெல்லாம் சகித்துக் கொண்டு, உதவி செய்கிருர்கள். துரதிர்ஷ்டவசமாக, ஊழியர்களில் ஒரு சிலர் தாயகம் மீள்வோரின் அறியாமையையும், அனுபவமின்மையையும் பயன்படுத்திக் கொண்டு, அவர்களிடம் இன்னும் எஞ்சியிருக்கக்கூடிய ஒரு சில இலங்கை ரூபாய் பணத்தைக் கறந்துவிடுகிருர்கள் அல்லது பயணப் பொதியைப் பாதுகாப்பாகக் கையாண்டதற்காகப் பணமோ, சவர்க்காரமோ அல்லது தேங்காய் எண்ணெயோ கேட்கிருர்கள் அல்லது கப்பலேறும் அட்டையை நிரப்புவதில் உதவி செய்வதற்காக மிதமிஞ்சிய கைம்மாறு கேட்கிருர்கள். இந்த அட்டை ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்டிருப்பது அறிவிற்கெட்டாத ஒரு விஷயம்.

பொது ஒலிபெருக்கியில் சில அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. ஆனுல், சிறு தொகையினரே அதைக் கேட்கின்ருர்கள். அதை விளங்கிக் கொள்பவர்கள் அவர்களை விடக் குறைந்த தொகையினராகவே இருப்பார்களெனத் தோன்றுகிறது.

## இராமேஸ்வரம்

முதலில் தாயகம் மீள்வோரையும் பின்னர் அவர்களுடைய பயணப் பொதிகளையும் துறைமுகப் பாலத்துககுக் கொணடு போவதற்காகச் சில படகுகள் கப்பலுககுப் பக்கத்தில் வருகின்றன. துறைமுகப் பாலத்தில் தாயகம மீளவோர் மகுநத விசனமூட்டும் முறையில் சுரண்டபபடுவதை நாங்கள் நேரில் கணடோம. சுமை கூலிக்காரர்கள் ஒருசில யார் தூரத்துக்குப் பயணப் பொதியைக் கொணடு செல்வதற்குப் பணம் கேட்கிருர்களா; பெட்டிகளைக் காணும் என்று அறிவக்கப்படுகிறது; பணம் பெறுவதறகாக வேண்டி, ஸ்தலத்திலுள்ள பழகினவர்களின் உதவியில்லாமல் சுங்கத்தைக் கடப்பதிலுள்ள கஷ்டங்கள் மிகைபடுத்தப்படுகின்றன. இதே வேளையில் சுங்கத் துறையில் தாயகம் மீள்வோர் பணம், சவர்க்காரம், கராம்புகள் அல்லது தேங்காய் எண்ணெயைக் கொடுக்கும்படி அடிக்கடி நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள். அப்படிக் கொடுக்காவிட்டால், அவர்களுடைய பயணப் பொதிகளைக் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்படும் அபாயமுண்டு. சுங்க அனுமதி பெறுவதற்கு நீண்ட நேரமாகிறது. சிலர் இவ்வனுமதியைப் பெறக் காலைப்பொழுது வரை தங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள்.

இக்கட்டத்தில் தான் தாயகம் மீள்வோரில் அநேகர் தாங்கள் கொண்டிருந்த உயர் நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும் முதலாவது அதிர்ச்சிகளால் தாக்கப்படுகின்றனர். இத்துடன், விரக்தி தொடங்கி வருகிறது.

சுங்கத் துறையிலிருந்து தாயகம் மீள்வோர் மண்டபம் முகாமுக்குச் செல்லும் புகைவண்டியிலேறுவதற்காக ரெயில்வே ஸ்டேசனுக்கு நடந்து செல்கிருர்கள்.

(ஆதாரம்: ஜி. ஏ. ஞானமுத்து எழுதியுள்ள ''இலங்கையில் கல்வியும் இந்தியத் தோட்டத் தொழிலாளியும்'' என்னும் நூலும், கண்டி, தோட்டப் பகுதிகளுக்கான இணைப்பு அலுவலகம் வெளியிட்டுள்ள ''இலங்கையிலிருந்து தாயகம் மீள்வோர்'' என்னும் நூலும்.)

டைய பிரதிநிதியெவரும் அதில் பங்குபற்றவில்லை. இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், முழு எண்களையே கருத்திற் கொண்ட இரு அரசாங்கங்களும் ஏறக்குறையப் பத்து இலட்சம் மக்களின் தலைவிதியை அவர்கள் பங்குபற்ருமலே முடிவு செய்துவிட்டன. அப்படி முடிவு செய்யப்பட்டதும், அம்முடிவு ஒரு கட்டாய அடிப்படையில் அமுல் நடத்தப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் வருடாந்த அறிக்கையின்படி, பிரஜா உரிமைக்கான இலங்கை இடாப்புகள் மூடப்பட்டபோது, இலங்கைப் பிரஜா உரிமை கோரிச் சுமார் 700,000 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஆனுல், இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டியவர்களின் தொகை 375,000 மட்டுமேயாகும். இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டியவர்களின் தொகை 600,000 ஆக இருக்கையில், இந்தியப் பிரஜா உரிமை கோரிச் சுமார் 400,000 மனுக்களே தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த ஒப்பந்தம் ஒரு காரிய சாத்தியமான, செயலாற்றத்தக்க பரிகாரத்தை ஏற்படுத்தியது. ஆனுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது முற்றிலும் துன்பந் தரும் ஒன்ருகவே தொடர்நது இருந்து வருகிறது.

## தோட்ட ''இராச்சியங்களின்'' முகாமையும் தொழிலாளர்களும்

தேயிலைத் தோட்டங்களுக்கு முதன் முதலாகத் திரட்டப்பட்டவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பாரும், காணியற்ற தொழிலாளர்களும் குடியிருக்கும் தமிழ் பேசும் மாவட்டங்களான திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகியவற்றிலிருந்து வந்தவாகளாவர். பிரதானமாக அவர்களுடைய வறுமைப்பட்ட வாழ்க்கையே அன்னிய நாடொன்றுக்கு அவர்களை விரட்ட தூண்டுகோலாக இருந்தது. தோட்ட வேலைக்கு ஆட்களைத் திரட்டியவர் வழக்கமாக அந்தந்தக் கிராமத்தில் செல்வாக்குள்ளவராகவே இருந்தார். அவர் கங்காணி என்று அழைக்கப்பட்டார். இலங்கைக்குக் கொண்டு வரப்படுவதற்காக அவர் கிராமத்திலிருந்து ஆட்களைத் திரட்டிஞர். இப்படித் திரட்டப்பட்ட கோஷ்டி கங்காணியின் உடனடிக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. தலைமைக் கங்காணி முறை அமைக்கப்பட்டதுடன், தலைமைக் கங்காணிக்குக் கடன்பட்ட தொழிலாளியை அடிப்படையாகக் கொண்ட நாசகரமான துண்டு முறை நடைமுறைக்கு வந்தது. தொழிலாளி தனது கிராமத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் தான் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காகவும், தனது வெளிப் பிரயாணத்துக்குரிய செலவுக்காகவும் தலைமைக் கங்காணியிடம் ஆரம்பத்தில் கடன் வாங்கினுன். இந்தக் கடனுடன் திருமண வைபவங்கள், ஈமச் சடங்குகள், பூப்பெய்தும் வைபவங்களுக்கென வாங்கிய பலவித கடன்கள், கங்காணிக்குச் சொந்தமான தோட்டக் கடையில் வாங்கிய பொருள்களுக்குரிய கிரயம் ஆகியன சேர்க்கப்படும். தொழிலாளர் கோஷ்டியொன்றின் சேவைகளை வேண்டும் ஒரு தோட்டத்துரை, அக் கோஷ்டியினர் கங்காணிக்குத் தரவேண்டிய மொத்தக் கடன் தொகையைக் கங்காணிக்குச் செலுத்திவிடுவார். அப்பொழுது கங்காணி சென்மதியாளராகி, தொழிலாளர்கள் இப்பொழுது தனக்குத் தரவேண்டிய பணத் தொகைகளை மீட்க முற்படுவார். எந்தப் புதிய முதலாளி (வேலை வழங்குவோன்) யும் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருக்கும் பழைய முதலாளியிடமிருந்து துண்டு இல்லாமல் இவர்களுக்கு வேலை கொடுக்கமாட்டார். துணடில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனக்குச் சேர வேண்டிய கடன் தொகைகள் செலுத்தப்பட்டால் இவர்களை விடுவிக்கத் தான் தயாராயிருப்பதாகக் குறிப்பிட்டுப் பழைய முதலாளி ஒரு துண்டு எழுதிக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் தட்டுப்பாடாக உளள காலங்களில், ஒரு கங்காணி வசமுள்ள தொழிலாளர் கோஷ்டியொன்றின் சேவைகளைப் பெறுவதற்காகத் தோட்டத் துரைமார் அக் கங்காணிக்கு அவருடைய தொழிலாளர் கோஷ்டியிடமிருந்து வர வேண்டிய மொத்தக் கடன் தொகைக்கு மேல் பணம் செலுத்த முன்வருவதும், கங்காணி தனது சேவையையும் தனது தொழிலாளர் கோஷ்டியின் சேவைகளையும் ஆகக்கூடிய பணங் கொடுக்கச் சித்தமாயிருக்கும் தோட்டத்துரைக்கு விற்க முயல்வதும் அசாதாரணமாக நடக்கும் காரியங்களல்ல. துண்டு முறை 1921 ம் ஆண்டில் சட்டவிரோதமானதாக்கப்பட்டது. ஆனுல், தொழிலாளர்கள் கங்காணியைச் சார்ந்திருக்கும் நிலை பல வருட

காலம் (50 க்கள் வரை) தொடர்ந்து இருந்து வந்தது. ஆதலால் தோட்டத் தொழிலாளர்கள் கடனில் வேலை செய்யத் தொடங்குவதும், கடனிலேயே வாழ்வதும், கடனிலேயே சாவதும் விநோதமான சம்பவங்களல்ல. இந்தக் கடன்படும் நிலைமையினால் தொழிலாளர்கள அவர்களுடைய சம்மதமின்றியே ஒரு முதலாளியினால் இன்னொரு முதலாளிக்கு விற்கப்படுவார்கள். தோட்டத் தொழிலாளரின் முழு வாழ்க்கையையும் அடக்கியாண்ட ஒரு முறையின் — ஓர் அடிமை முறையின் — பிரதான அம்சங்களில் சிலவே இவை.

தோட்டப் பொருளாதாரத்தை எடுத்துக் காட்டும் விசேஷ அடையாளம், அதன் திட்டுத் தன்மையாகும். தோட்டத் தொழில் முறை கூலித் தொழிலாளர்களையும் தொழிற்சாலை போன்று பெருந் தோட்டங்களை நடத்துவதையும், அந்நிய சந்தைகளுக்கான உற்பத்தியையும் அடிப்படையாகக் கொண்டதாகும். முதலாளித்துவ அடிப்படையில் அமைக்கப்பட்ட இது பிரதானமாக ஜீவனோபாய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு கிராமப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. தோட்டப் பொருளாதாரம் கிராமப் பிரதேசங்களைப் பொறுத்தவரை ஒரு திட்டாக மட்டும் அமைந்திருக்கவில்லை. ஆனால், தோட்டங்களில் வேலை செய்யும் மக்களும் பிறமக்களுடன் தொடர்பற்ற ஒரு தனித்த ஆட்கூட்டமாயினர். கிராமங்களில் வாழும் மக்களுடன் ஒப்பிடுகையில் இவர்கள் வேற்றினத்தில் தோன்றியவர்களாயிருப்பதும், தோட்டம் அவர்களுடைய வாழ்க்கையை நிர்ணயித்த முறையும் அளவும், பிறமக்களிடமிருந்து அவர்களைத் தனியாகப் பிரித்து வைக்க உதவின. மேலும், தோட்டத் தொழிலின் ஆரம்ப கட்டங்களில் தோட்டத்துக்குள் வெளியார் பிரவேசிக்கக் கூடாதெனத் தடை விதித்த பல சட்டங்களுமிருந்தன.

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மூலங்களைப் பார்க்கும்போது, இலங்கையில் முகிழ்த்த தோட்டத் தொழில் சகாப்தத்தின் ஆரம்பகால கட்டங்களைச் சித்திரிக்கும் படங்களிலும், வர்ணனைகளிலும் சில, ஓர் அமெரிக்க இதிகாசத்திலிருந்து எடுக்கப்பட்டவை போலத் தோன்றுகின்றன. தோட்டத் துரைகளின் முரட்டுத்தனமும், குணக்கேடான அவலட்சண நடத்தையும் காணப்படுகின்றன. இலங்கையில் நடைபெறும் தோட்டத் தொழில் பற்றி பிரபல வரலாற்றுப் புத்தகமொன்று கூறுவது இதோ: ''உண்மையில், ஆரம்ப கால தோட்டத் துரைகள் முரடர்கள்; எதற்கும் ஆயத்தமாக இருப்பவர்கள். மகிமைப் பிரதாபம் பொருந்திய முதலாளித்துவ தோட்டத் துரைகளின் சகாப்தம் சற்றுப் பின்பே உதயமாயிற்று. கோப்பியில் நடைபெற்ற பேரங்கள், கண்காணிப்பாளர்களை எவ்வாறாயினும் வாடகைக்கு அமர்த்தின. வெகு சிலரே விவசாயப் பயிற்சி பெற்றவர்களாயிருந்தனர். பல சந்தர்ப்பங்களில் இவர்கள் சொற்ப கல்வியறிவுள்ளவர்களாகவே இருந்தனர். இவர்கள் துணிகரச் செயலாளர்களாகவே நாட்டுக்கு வந்தனர் அல்லது பட்டாளத்திலிருந்து கொண்டுவரப்பட்டனர். இவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 200 பவுணுக்கு மேற்படாத சம்பளம் அளிக்கப்பட்டது. இராணுவத்திலிருந்து கழிக்கப்பட்ட இப் பேர்வழிகள் ஒரு சாதாரண தந்திரோபாயத்தின் மூலம் தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயன்றனர். அவர்சள் எல்லோரும் கேப்டன்களாகிவிட்டனர். அவர்கள் முகாமை செய்த முறையில் வன்முறைகள் இடம் பெற்றதில் விநோதமொன்றுமில்லை. தோட்டங்களின் ஆரம்ப முகாமையமைப்பு பிரிட்டனில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த கைத்தொழில் ஸ்தாபன அமைப்பையே பின்பற்றியது. அந்த அமைப்பில் தொழிலாளர்கள் பெரும்பாலும் இராணுவக் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு, அரைவாசி அடிமை நிலைமையில் கட்டுப்படுத்தப்பட்டனர். இதே வேளை முகாமையாளருக்குப் பெருமளவு சுதந்திரமும் அதிகார அனுமதியுமிருந்தன.''

கண்டிதமான அதிகார ஆணவ முறைகளின் உதவியுடன் முகாமை செய்யப்பட்ட இலங்கையின் முதலாவது தொழிலாளர் வர்க்கத்துக்கு, தோட்டத்துக்குள்ளேயே அவர்களுடைய உழைப்பின் பிரதிபலனைக் காட்டுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டன. தோட்டங்களுக்குள்ளேயே குடியிருப்பு, சுகாதார, கல்வி, கூட்டுறவு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. தொழிலாளியைத் தோட்டத்துக்குள் வைக்க, தோட்ட ஆளுநருக்கு இவை உதவின. தேவைப்பட்டபோது தொழிலாளருக்கெதிராக உபயோகிப்பதற்கான ஓர் ஆயுதமாகச் சவுக்கு அவருக்குப் பயன்பட்டது.

முகவர் நிலையங்கள் (ஏஜன்சி ஹவுஸ்) இருந்த நாட்களில் கூட, தோட்டம் என்பது ஓர் அனுக்கிரமத்தினால் (தரவாரியாக அமைந்த அதிகாரிகளின் முறை) நிர்வகிக்கப்படும் தன்னைத் தானே தாபரித்துக் கொள்ளும் ஒரு ஸ்தாபனமாகவே கிரியாம்சையில் காணப்பட்டது. இந்த அனுக்கிரமத்தின் தலைவராக சூப்ரின்டென்ட் நின்றார். அவர் முறையே பணிப்பாளர் சபையினால் அல்லது ஒரு சில சந்தர்ப்பங்களில் முதலாளிமாரால் நேரடியாகத் தமக்கு அனுப்பப்பட்ட கொள்கைகளை அமுல் செய்தார். ஆனால், இக் கொள்கைகள் பிரதானமாக கொழும்பிலுள்ள முகவர்கள் மூலமாகவே அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இச் சமயத்தில் கூட, நிர்வாக முறையும் அமைப்பும் பின்வருமாறு இருந்ததாக வர்ணிக்கப்பட்டது: ''தோட்டங்களிலுள்ள முகாமைச் செயல் முறைகளின் அடக்கியாளும் உருவம் செங்குத்தாகவும் ஏதேச்சாதிகாரமாகவும் உள்ளது. மூன்று செங்குத்தான வரிசைகள் முகாமையாளர் அல்லது சூப்ரின்டென்டு என்பவரிலிருந்து இறங்குகின்றன — இவரே மேலிருந்து பணிக்கப்படுகிறார். முதலாவது வரிசை சூப்ரினடென்டிலிருந்து அவருடைய உதவியாளர்கள் (யாருமிருந்தால்) வாயிலாக மேற்பார்வையாளர்கள், கங்காணிகள் ஆகிய கள உத்தியோகத்தர்களுக்கும், அவர்களிலிருந்து நடுதல், பறித்தல், கிளை நறுக்குதல், களை பிடுங்குதல் ஆகிய வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் செல்கின்றது; இரண்டாவது வரிசை சூப்ரின்டென்டிலிருந்து அவருடைய உதவியாளர்கள் வாயிலாகத் தொழிற்சாலை அலுவலர்கள் அல்லது தொழிற்சாலையின் தலைமையதிகாரிகள், அவருடைய சிரேஷ்ட - கனிஷ்ட உதவியாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும், அவர்களிலிருந்து தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்கும் செல்கின்றது; மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை சூப்ரின்டன்டிலிருந்து அவருடைய உதவியாளர் மூலமாக, ஒரு பக்கத்தில், தலைமை இலிகிதர், உதவி இலிகிதர்கள், ஸ்டோர்கீப்பர்கள், அலுவலகப் பையன்கள் ஆகிய அலுவலக ஊழியர்களுக்கும், மறு பக்கத்தில், பிரதம மருந்து வழங்குநர், உதவியாளர்கள், மருத்துவச்சிகள், வார்டு கவனிப்பாளர்கள் ஆகிய வைத்திய அலுவலர்களுக்கும் செல்கின்றது.''

தோட்டத்துறையிலிருந்த இந்தக் கண்டிதமான சமூகப் பிரிவுகளுக்கிணங்க, ஒவ்வொரு சமூகக் குழுவிலும் ஒரு கண்டிதமான, தனித்த வாழ்க்கை முறை வளர்ந்தது. சமூகப் பழக்க முறைகள் இந்தப் படைபடையான பிரிவுகளைத் திடப்படுத்தின. சில சமயங்களில் தோட்டங்களில் பேசப்படும் சொற்களும் கூட இந்தப் பிரிவுகளைப் பிரதிபலித்தன. உதாரணமாக, சூப்ரின்டென்டுகள் பங்களாக்களிலும், இலிகிதர் போன்ற உத்தியோகத்தர்கள் அவர்களுக்குரிய வசிப்பிடங்களிலும், தொழிலாளர்கள் 'லயன்' அறைகளிலும் வசித்தனர். பரம்பரையாகத் தோட்டங்களுக்கான முகாமையாளர்கள் மேல் வகுப்புக்களிலிருந்தே திரட்டப்பட்டனர். வழக்கமாக அவர்கள் சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாகவே இருந்தனர்.

சுதந்திரத்துக்குப் பின்பு பிரிட்டிஷ் சூப்ரிண்டென்டுகளுக்குப் பதிலாக இலங்கையர் நியமிக்கப்பட்டனர். ஆனால், அடிப்படை காலனி ஆதிக்க மனோபாவங்களும் யதார்த்த நிலைமைகளும் தொடர்ந்து இருந்து வந்தன. பெரும்பாலும் ஆங்கிலேய மொழி நடை உடை பாவனை பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்த சூப்ரிண்டென்டு எங்கள் சமூகத்தின் மேல் வகுப்பைச் சேர்ந்தவராகவே இருந்தார். அவர் ஒன்றில் பிரசித்தி பெற்ற றகர் விளையாட்டு வீரராகவோ அல்லது கிரிக்கெட் விளையாட்டு வீரராகவோ இருந்தார்.

தேயிலைக் காணிகள், தேசியமயமாக்கப்பட்டதும், அவை வெவ்வேறு ஸ்தாபனங்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இப்பொழுது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்த தேயிலைக் காணிகளில் பெரும் பகுதிக்கு இரு அரச கூட்டுத்தாபனங்களான அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியனவும், மலையகத் தோட்ட அபிவிருத்திச் சபை (உசவசம), தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், ஜனவசம ஆகியனவும் பொறுப்பாயிருந்தன. இந்த ஸ்தாபனங்கள் தேசியமயமாக்கப்பட்ட தேயிலைக் காணிகளில் 63 சதவிகிதத்தைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. எஞ்சிய 37 சதவிகிதம் தனியார் கைகளில் சிறிய காணிகளாக இருந்தன.

சாணிகளை மறு சீரமைப்புச் செய்யப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரண

## தோட்டத் தொழிலாளர் பற்றிய கடல் கடந்த கரிசனை

புறூக் பொண்ட் லிமிடெட்டால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் மானுடத்துக்குச் சவால் விடுக்கும் அவலம் மிகு வாழ்க்கை நிலைமைகளை 1974 ம் ஆண்டில் கிறெனடா டெலிவிஷன் தொடர் நிலையங்கள் பிரிட்டிஷ் பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தன. இந் நிகழ்ச்சியின் பின்னாலிருந்த அரசாங்க சார்பற்ற ஸ்தாபனம் ''வறுமை ஒழிப்புப் போர்'' நிறுவனமாகும். இந்த டெலிவிஷன் பிரசாரத்தின் விளைவாக, 1974 ம் ஆண்டில் பிரிட்டிஷ் எம். பீ. க்களைக் கொண்ட ஒரு தூதுக்குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. அவர்களுடைய அறிக்கை டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் அனுப்பப்பட்ட செய்திகளில் பெரும்பாலானவற்றை ஊர்ஜிதம் செய்தது. தோட்டத் தொழிலாளர்களின் சார்பாகப் பிரசாரம் நடத்திவரும் பலம்பொருந்திய வெளிநாட்டுக் குழுவொன்று இருப்பதைப் பற்றி இலங்கைப் பொதுமக்கள் அநேகமாக இச்சமயத்திலே தான் அறிய வந்தனர். கம்பெனிகளிடமிருந்து அவ்வளவாக எதிர்ப்பின்றித் தோட்டங்கள் சுமுகமாகச் சுவீகரிக்கப்பட்டதற்கு இந்த அந்நிய நாட்டு அரசாங்க சார்பற்ற தூதுக்குழுவின் நடவடிக்கைகளே பொறுப்பாகுமென்று கூடச் சிலர் கருதுகிறார்கள்.

இந்த ''வறுமை ஒழிப்புப் போர்'' நிறுவனம் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஒல்லாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் அநேகமாகப் பரந்த அளவில் தோன்றியுள்ள ஒன்றோடொன்று தொடர்புகொண்ட அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களில் ஒன்றாகும். இந்த ஸ்தாபனங்கள் தேயிலை போன்ற மூன்றாம் உலகின் வணிகப் பண்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கைத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் வறுமையைப் பற்றியும் அந்நிலைமைக்கு அடிகோலும் செயற்பாடுகளைப் பற்றியும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள பொது மக்களின் மனச்சாட்சியைத் சுண்டியெழுப்புவதில் அவற்றின் நடவடிக்கைகள் பிரதானமாகச் சிரத்தை கொண்டுள்ளன. தேயிலை சம்பந்தமாகப் பணியாற்றிவரும் குழுக்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய கல்வி வேலைத் திட்டங்கள், தோட்டத் தொழிலாளியின் பரிதாபமான நிலைமையையும், அத்துடன் தேயிலை விலைகளையும் சில்லறைச் சந்தைகளையும் கட்டுப்படுத்துவதிலும், ஒரு பக்கத்தில் தோட்டத் தொழிலாளியையும் மறு பக்கத்தில் நுகர்பவரையும் சுரண்டுவதன் மூலம் அமிதமான இலாபங்களைப் பிழிந்தெடுப்பதிலும் பெரிய பல்தேசிய கம்பெனிகள் எடுத்துவரும் பங்கையும் சுட்டிக்காட்டுவதையே மையமாகக் கொண்டுள்ளன.

இக் குழுக்கள் தங்களுடைய செய்திகளைப் பரப்புவதற்குக் பல்வேறு முறைகளை உபயோகிக்கின்றன. இம் முறைகள் எல்லாவற்றிலும் மிகச் சுவாரஸ்யமானதென்னவென்றால், கூட்டுறவு அடிப்படையில் ஒரு மாற்று சந்தைப்படுத்தும் முறையை அமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். தேயிலை, உற்பத்தி செய்யும் நாட்டிலிருந்து நேரடியாகக் கொண்டுவரப்பட்டு, அங்கேயே சிப்பமாகக் கட்டப்பட்டு, பின்னர் சில்லறை நிலையங்களில் விற்கப்படுகிறது. இந் நிலையங்கள் சில சமயங்களில் மூன்றாம் உலகக் கடைகள் என அழைக்கப்படுகின்றன. பல்தேசிய கம்பெனிகள் விற்கும் விலையை விடக் குறைந்த விலையில் நுகர்வோருக்குத் தேயிலையைத் தங்களால் விற்க முடிந்துள்ளதென்றும், அத்துடன் உற்பத்தியாளருக்கும் தங்களால் நல்ல விலையைக் கொடுக்க முடிந்துள்ளதென்றும் இக்குழுக்கள் கூறுகின்றன. இந்த இயக்கங்கள் சில சமயங்களில் ''தேயிலை நடவடிக்கை'' என அழைக்கப்படுகின்றன. இந்தத் ''தேயிலை நடவடிக்கை'' ஒரு மாற்று சந்தைப்படுத்தும் முறையை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்படவில்லை; ஆனால், வறுமைக்கான காரணங்கள், ஏற்றத் தாழ்வான வர்த்தகம், ஏகபோக உரிமைகளின் செல்வாக்கு போன்ற அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகளை விளக்கிக் கூறும் ஒரு முறையாகவே எடுக்கப்படுகிறது.

இக் குழுக்களில் சிலவற்றின் இன்னொரு குணாம்சம் யாதெனில், அவர்கள் கொண்டுள்ள கிறிஸ்தவ இணைப்பாகும். கிறிஸ்தவ மதத்திலும் திருச்சபை தொடர்பான ஸ்தாபனங்களிலும் பலமாக உட்புகுந்துள்ள சமூக நீதிக்கான கவலையின் விளைவாகவே இக்குழுக்கள் எழுந்துள்ளன. பல்வேறு வகையான வசூலிப்பு முறைகள் மூலம் நன்கொடைகள் வாயிலாகவும் பெருமளவில் நிதிகள் திரட்டப்படுகின்றன. இதனால் இக்குழுக்கள் தொடர்ந்து பணியாற்றிவர முடிகிறது.

''வறுமை ஒழிப்புப் போர்'' நிறுவனம் ஒருபுறமிருக்க, தோட்டத் தொழிலாளர்கள் சார்பாகப் பணி புரிந்துவரும் இந்த அந்நிய நாட்டு அமைப்பில் அடங்கியுள்ள மற்றும் குழுக்களில் சில பின்வருமாறு: வர்த்தக உதவி, கொன்ஸோ, வர்த்தகத்துக்கும் அபிவிருத்திக்குமுரிய நியூஸிலாந்து கூட்டணி, நியூஸிலாந்தைச் சேர்ந்த ஐ. சி. எம், உலக அபிவிருத்திக்கான செயற் குழு, டி. ஆர். ஐ. சி. ஆஸ்திரேலியா, உலக அபிவிருத்தி இயக்கம், பிரிட்டனின் ஒக்ஸ்பாம், எஸ். ஓ. எஸ். உலக வர்த்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக, பல்லாண்டுகளாக வெவ்வேறு ஸ்தாபனங்களின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளின் பரப்புகள் வேறுபட்டிருந்தன. 1976 டிசம்பர் முடிவில், (1976 ஏப்ரலில் காரியார்த்தமான நடவடிக்கைகளை ஆரம்பித்த) ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் தேயிலைக் காணிகளில் 46 சதவிகிதத்தை நிர்வகித்தன. இதே சமயத்தில் மற்ற ஸ்தாபனங்களின் பங்கு பின்வருமாறு: உசவசம 5.6 சதவிகிதம், ஜனவசம 1.1 சத விகிதம், தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 5.8 சதவிகிதம். அதற்குப் பின்பு, தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் நடைபெற்ற புனரமைப்பின்படி தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் உசவசமாவும் அகற்றப்பட்டு ஜனவசம கமிஷனின் கீழிருந்த பெருந் தோட்டங்கள் ஜனதா பெருந் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும், அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன. இவ்விரு அரசாங்க கூட்டுத்தாபனங்களும் இப்பொழுது தேயிலைக் காணிகளில் ஏறக்குறைய 5 சதவிகிதத்தை நிர்வகிக்கின்றன. இவை மிகுந்த விளைச்சல் தரும் தேயிலைக் காணிகளாகும்.

தோட்டத்துறையில் ஒரு புதிய நிர்வாக முறையைப் புகுத்துவதற்காக முதலாவதாகவும், மிகக் குறுகிய காலமும் செய்யப்பட்ட முயற்சிகளே, கூட்டுறவு நிர்வாக முறையும் கூட்டுநிர்வாக முறையும். கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பாக தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தத் தேர்தல் தொகுதியின் எம். பீ. வாயிலாகத் தங்களுடைய முகாமையில் (நிர்வாக அமைப்பில்) கனத்த அரசியல் செல்வாக்கைக் கொண்டிருந்தன. இதே வேளையில் ஜனவாச தங்களுடைய குறிக்கோள்களில் ஒன்று, நிர்வாக அமைப்பில் தொழிலாளர்கள் பங்குபற்ற வேண்டுமென **வெகுவாக** வலியுறுத்தியது. ஜனவாச கூட்டு முறையில் நிர்வகிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்கள் பற்றி நடத்தப்பட்ட சில ஆராய்ச்சிப் பரிசீலனைகள் இந்த முயற்சிகளைப் பாராட்டின.

அரச துறையிலுள்ள தோட்டங்களில் பெரும்பாலானவற்றை நிர்வகித்துவரும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையும், அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனமும் கிட்டத்தட்ட சகல நிர்வாக அம்சங்களிலும் முகவர் நிலைய (ஏஜென்சி ஹவுஸ்) நாட்களிலிருந்து வந்த பழைய முறைகளையே பின்பற்றுவதாகத் தோன்றுகிறது. "ஒரு தோட்டத்தின முகாமை முறை வளைந்து கொடுக்காத தரவாரி அதிகாரிகள் முறையைக் கொண்டதாகவும், எதேச்சாதிகாரமுள்ளதாகவும் இருக்கிறது. சூப்ரண்டென்டுகளோ அல்லது முகாமையாளர்களோ கொள்கை சம்பந்தமான விரிவான உத்தரவுகளை, இறுதியில் லண்டனிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட முகவர் நிலையங்களிலிருந்து முன்பு பெற்றதைப் போல இப்பொழுது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்தோ அல்லது அரச தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்தோ பெறுகின்றனர். இவ்விதமாக **விதிக்கப்பட்ட** விரிவான வரையறைகளுக்குள்ளே தோட்டத்தில் சூப்ரிண்டென்டோ அல்லது முகாமையாளரோ தனது சொந்த எஜமானக விளங்குகிறுர். அடிமட்டத்திலுள்ள தொழிலாளி வரை சங்கிலித் தொடராக நீளும் ஆணை பிறப்பிக்கும் அதிகாரிகளின் உச்சியில் அவர் இருக்கிறுர். முகாமையில் பங்குபற்றுவதை விட்டுவிடுவோம் — கலந்தாலோசனை நடத்தும் எந்த முறையுமில்லை." கடந்த அரசாங்கத்தின கீழ் அநேக அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கலந்தாலோசிக்கும் உரிமைகளுடன் ஸ்தாபிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் சபை தேசிய மயமாக்கப்பட்ட தோட்டத் துறையில் ஸ்தாபிக்கப்படவில்லை.

1950 க்களிலிருந்து அரசதுறை முகாமையின் அழிவுக்கு ஏதுவாயிருந்த குறுகிய நோக்கங் கொண்ட, வேண்டியவர்களுக்குச் **சலுகை செய்யும் அரசியலை** தேசியமயத் திட்டம் அன்றுட முகாமைக்குள்ளும் புகுத்தியுள்ளது. (அரசதுறை முகாமை பற்றிய எமது விசேஷ இதழைப் பார்க்கவும்) முன்பிருந்த தோட்டத் துரைமார் ஆட்சியிலே அதன் முகாமை அமைப்பில் அடக்குமுறைகள் இருந்தபோதிலும், ஓரளவுக்குத் தீர்க்கதரிசனத் திறமையையும், பகுத்தறிவுடன் கணக்கிடும் திறனையும் தோட்டங்களிலிருந்து மேலதிக மிச்சத்தைச் சிருஷ்டிப்பதற்குத் தேவையான பின்னணியையும் அது கொண்டிருந்தது. மேலும், புதிய மாறுதல்கள் பல அதிகார மையங்களை ஏற்படுத்தியிருப்பதுடன், பதவிகளைக் கைப்பற்றக் கபடோபாயங்களைக் கையாளும் பல்வேறு நிர்ப்பந்தக் கோஷ்டிகளைப் பொறுத்து, எது சரியான நடவடிக்கை என்பதைத் தீர்மானிக்கப் பல முறைகளையும் உண்டாக்கியுள்ளன. முகாமைத் துறைக்குள் வேண்டியவர்களுக்குச் சலுகை செய்யும் அரசியல் புகுந்ததன் விளைவாகவே இந்தக் கபடோபாயங்கள் கைக்கொள்ளப்படுகின்றன. ஆதலால், நியாய முறைப்படி குறிக்கோள்களை அடையும் நடவடிக்கைகள் சீர்குலைந்து விடுகின்றன. தோட்டத் துறையின் முகாமையில் ஏற்பட்டுள்ள ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் முன்பிருந்த தோட்டத் துரைமார் சங்கம் தோட்ட முகாமையாளர் சங்கம் என்னும் ஒரு புதிய ஸ்தாபனமாக மாற்றப்பட்டுள்ளதிலும் காணப்படுகிறது. தோட்ட முகாமையாளர்கள் பிரதானமாகத் தங்கள் தொழிற் சங்கத்துக்கே மாறியுள்ளனர். இது முகாமையாளரிடையே அவர்களுடைய தொழில் ஈடுபாட்டையும், சிரத்தையையும் அதிகரிப்பதற்கு அடிகோலக்கூடும். இதனுல் நெடுங்காலத்தில் தோட்டத் துரைமார் ஆட்சியின் சில எதிர்மறையான அம்சங்கள் அகன்று விடலாம்.

இவ்வருடம் ஜூலை மாதத்தில் தேசிய தோட்ட முகாமைக் கழகம் அமைக்கப்பட்டமை தோட்ட முகாமையை அபிவிருத்தி செய்வதற்குச் சரியான திசையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகுமெனக் கருதப்பட்டது. இக் கழகம் மேற்பார்வை செய்யும் அதிகாரிகளில் மேல் மட்டத்திலுள்ளவர்களுக்கும், நடு மட்டத்திலுள்ளவர்களுக்கும் பயிற்சி பெறுவதற்கான சந்தர்ப்பங்களை அளிக்குமெனத் தோன்றுகிறது. தேசியமயத் திட்டத்துக்குப் பின்பு மறைந்துவிட்ட முந்திய கழகமான இலங்கை தோட்டத் தொழில் கழகம் அதிகமாக மேல்மட்ட முகாமையிலேயே முழுக் கவனஞ் செலுத்தியது. ஆனுல், முகாமை பற்றிய கருத்துக்கள் ஒரு பக்கத்தில் சமுதாயத்தில் நிலவும் ஒரு வகைச் சமூக அமைப்பிலிருந்தும், மறுபக்கத்தில் குறித்த கைத்தொழில் அமைந்துள்ள முறையிலிருந்தும் தோன்றுவனவாதலால் தற்போதுள்ள அமைப்புக்குள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கழகங்கள் அடிப்படையை மாற்றும்படியான புதிய முகாமை முறைகளைப் புகுத்துமென எதிர்பார்ப்பது கடினம்.

முகாமைக்கும் தொழிலாளருக்கு மிடையே இன்று தொடர்புகளை வைத்திருப்பது தொழிற் சங்கமேயாகும். இதுவே தொழிலாளர் நலன்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்காக விருத்தியடைந்துள்ள பிரதான தாபனமாகும். அடிமட்டத்தில் ஏறக்குறைய 380,000 தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருப்பதாகக் கூறும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களிடையே மிகப் பெரிய தொழிற் சங்கமாக விளங்குகிறது. இதன் கட்டுக்கோப்பைக் கவனிக்குமிடத்து, இந்த தாபனம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தோட்டக் கமிட்டியையும், அதற்கு இணையாக ஒரு மாதர் சங்கத்தையும், ஆண் பெண்களைக்கொண்ட ஒரு வாலிபர் காங்கிரசையும் தெரிவு செய்கின்றது. ''தோட்டக் கமிட்டி தனது அங்கத்தவர்களிடையே யிருந்து ஒரு தலைவரைத் தெரிவு செய்கிறது. அவருடைய செலவுகளுக்காக அவருக்கு ஒரு சிறு தொகைப் பணம் படியாகக் கொடுக்கப்படுகிறது.'' தலைவரின் கடமைகளில், தொழிலாளர்களின் மனக் குறைகளையும், கோரிக்கைகளையும் (இவை முகாமையின் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்படுகின்றன.) முகாமைக்கு முறையிடுவது, சமய விழாக்களுக்கும் ஏனைய வைபவங்களுக்கும் ஏற்பாடு செய்வது, தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளில் அவர்களுக்கு உதவி செய்வது ஆகியனவும் அடங்கும். இந்தத் தலைவர் ஒரு பக்கத்தில் தொழிலாளிக்கும் முகாமைக்குமிடையே நடுவராகவும், மறு பக்கத்தில் தொழிலாளிக்கும் தொழிற் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிக்குமிடையே நடுவராகவும் — ஆக இரு வழிகளில் நடுவராக — செயலாற்றுகிறார்.

தற்போதிருந்து வரும் முகாமைக் கட்டுக்கோப்புக்குள்ளே — தொழிலாளர்களுக்கும் முகாமைக்குமிடையே நிலவிவரும் சமூக அடுக்கமைப்பில், தொழிற் சங்கமானது தோட்டத்துக்குள்ளே முடிவுகள் செய்யப்படும் முறையில் தொழிலாளர்கள் பயனுறப் பங்குபற்றுவதற்கு ஏதுவாயுள்ள ஒரு ஸ்தாபனமாயிருப்பதைவிட அதிகமாகத் தொழிலாளர்களின் மனக் குறைகள், கோரிக்கைகளுடன் முகாமைக்கு எதிர்முகமாய் நிற்கும் ஒரு ஸ்தாபனமாகவே இருக்கின்றது. தொழிலாளர்கள் சுதந்திரமாகத் தெரிவு செய்யப்படவிருந்த ஆறு தொழிற்பாட்டுக் கமிட்டிகளால் — திட்டமிடலும் அபிவிருத்தியும்; வழங்கல்கள்; சந்தைப்படுத்தல்; ஒழுக்கமுறை; கலாசாரமும் சேம நலமும்; குறிக்கோள் அமைப்பு) — நிர்வகிக்கப்படவிருந்த ஜனவாசாக்கள் தோட்டத்துறையில் துணியப்பட்ட வெகு முன்னேற்றமான ஒரு ஜனநாயக முகாமை முறையாகும். தொழிலாளர் ஜனநாயகம் என்ற வகையில் தற்போதுள்ள அமைப்பு இக்கருத்துக்களை நெருங்குவதாகவேயில்லை ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் அல்லது அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனத்தின் எந்தப் பணிப்பாளர் சபைக்கும் தொழிற்சங்க அதிகாரிகளின் பிரதிநிதிகளை நியமிக்கும் நடவடிக்கையைக் கொண்டு முகாமையில் தொழிலாளர் எவ்விதத்திலும் பங்குபற்றுவதாக வியாக்கியானம் செய்யவே முடியாது.

தேவைப்படும் காலங்களில் மலிவான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளலே தோட்ட முகாமைத்துறையின் முதன்மையான நோக்கமாகவுள்ளது. தேயிலைச் செடியின் வளர்ச்சி அம்சங்களைப் பொறுத்து தோட்டங்களுக்குத் தொழிலாளர் தேவைப்படுகின்றனர். எனவே, தேயிலைக்கு பருவ கால அடிப்படையிலேயே தொழிலாளர் தேவை நிலவுகிறது. முன்னரெல்லாம், தேவைப்படாத காலத்தில் தோட்ட முகாமைத்துறை தொழிலாளர்களை இடை நிறுத்திவிடக் கூடியதாகவிருந்தது. இவ்வழமை இப்போது இல்லாது போனாலும் கூட, நாட் சம்பளம் வழங்குவதன் மூலம், தொழிலாளர் தேவையை ஒழுங்கு படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு தோட்ட முகாமையாளர்களுக்கு கிடைத்துள்ளது. இவ்வகையில், காலாகாலம் தொழிலாளர் தேவைப்படுவதற்கேற்ப முகாமையாளர்கள் நிலைமையைச் சரி செய்து கொள்கின்றனர். இது தோட்டங்கள் இலாபகரமாக இயங்க உதவுகின்றது.

இந்த வகை தொழில் வழங்கல் அம்சங்கள் காணப்பட்டாலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தளவில், தோட்டமே தொழில் வழங்கும் சாதனமாக, வருமான மூலமாக இருந்து வந்துள்ளது. தோட்டத்துடனான அவர்களது தொடர்பு தலைமுறை தலைமுறையாக நீடித்து வருகின்றது. ஆனால், தோட்டத் துறையில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆண்டாண்டு காலமாக நிலைத்து வந்த இவ்வுறவைப் பாதித்துள்ளன.

தேசியமயத்தைத் தொடர்ந்து சில தோட்டங்கள், கூட்டுறவு மாதிரியிலான நிர்வாகத்தின் கீழ் வந்தன. நாடற்ற இந்தியத் தொழிலாளர், இக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெறுது தடுக்கப்பட்டனர். சில தோட்டங்களில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகத்தைக் கையேற்றதும், இந்தியத் தொழிலாளர் வெளியேற்றப்பட்டனர். தோட்டத் தொழிலாளரது தொழிலுக்கு — அதன் பாதுகாப்புக்கு — ஆபதது ஏற்பட்ட ஒரு தருணம் இதுவெனக் குறிப்பிடலாம். 1977 ல் நிகழ்ந்த இனக் கலவரமும், சில தொழிலாளரைத் தங்கள் தோட்டங்களிலிருந்து வெளியேறி வேறிடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

1969-70 ல் மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார ஆய்வின்போது, தோட்டத் துறையில் சுமார் 51,000 பேர் வேலையின்றிக் காணப்பட்டனர் எனவும், இது நாட்டில் மொத்த வேலையற்றோர் தொகையில் 10 சதவீதமெனவும் கூறப்பட்டது. பின்னர், இத் தொகை சுமார் 65,000 என மதிப்பிடப்பட்டது. எனினும், (தினமும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வழங்கப்படாத) கீழுழைப்பு நிலைமையையும் கருத்திற் கொண்டு பார்க்குமிடத்து, தோட்டத் துறை வேலையின்மைப் புள்ளி விவரங்கள் மேலே கூறியவற்றை விட வெகு அதிகமானதாகவே காணப்படும். தேசியமயத்தை யடுத்து, இந்தியத் தமிழ்த் தொழிலாளரை வேலைக்கமர்த்துவதற்கான வழிவகைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன போலத் தோன்றின. தோட்ட நிர்வாகம் பின்பற்றிய சில கொள்கைகளே இதற்குக் காரணமாகின. தேயிலை தொடர்பான பெருந் திட்டத்தைப் பொறுத்தளவில், ''தேசியமயமாக்கப்பட்ட இத் தேயிலைத் தோட்டங்களில், சிங்களத் தொழிலாளர்களது விகிதாசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தை அதிகரிப்பது அரசாங்கத்தின் கொள்கையாகவுள்ளது. சிங்களவருக்கான தொழில் வாய்ப்பைப் பெருக்குவது இதற்கான காரணங்களுள் ஒன்றாகும். தாயகம் திரும்பிவிட்ட அல்லது வேறு தொழில்களுக்குச் சென்றுவிட்ட இந்தியத் தொழிலாளருக்குப் பதிலாக உள்ளூர்த் தொழிலாளர்களை நியமித்தல் இக் கொள்கைக்கான இன்னொரு காரணமாகும்.''

இதனால், தேயிலைத் தோட்டங்களுக்கு அண்மையில் — அதாவது நடந்து சென்றுவிடக் கூடிய தூரத்திலுள்ள — கிராமங்களில் சிங்களத் தோட்டத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்தது. இவர்கள் தோட்டங்களில் வசிக்காத தொழிலாளராகக் காணப்பட்டனர். தோட்டங்களிலிருந்து தூரத்தில் அமைந்துள்ள கிராமங்களைப் பொறுத்த வரையில், மிகச் சிறியளவு சிங்களத் தொழிலாளரே தோட்டத்துக்கு வந்தனர். குறிப்பாக, இடை நில, தாழ் நிலத் தேயிலைத் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளரது எண்ணிக்கை ஏற்கனவே குறிப்பிடத்தக்க அளவை அடைந்து விட்டதாகவும் அவ்வாய்வு தெரிவித்தது. ஐந்து இடை நிலைத் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர் 8 இலிருந்து 25 சதவ்தத்தினராகக் காணப்பட்டனரென இவ்வாய்வு கூறுகிறது. தாழ்நிலத் தோட்டங்களில் இவர்களது எண்ணிக்கை 53 சதவீதம் வரையும் அதிகரித்துக் காணப்பட்டது.

தேசியமயமாக்கலைத் தொடர்ந்த அண்மைய வருடங்களில், பல சிங்களவர்கள் உதவி, கனிஷ்ட மேற்பார்வையாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உண்மையையும் பெருந் திட்டம் தெரிவிக்கிறது. இத் தரங்களில் தோட்டத் தொழிலாளர் நியமனம் பெறக்கூடிய சாத்தியங்களை தடை செய்தது மாத்திரமன்றி, தேவைக்கதிகமான ஊழியர்கள், இன அமைதியின்மை போன்ற நிலைமைகளும் தோன்றியிருப்பதாக தோட்டத் துறையுடன் நெருங்கியோர் தெரிவிக்கின்றனர். இவ் வட்டாரங்கள் தரும் தகவல்களின்படி, தோட்டக் குழந்தைப் பராமரிப்பு நிலையப் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் போன்ற பதவிகள் கூட தகுதிவாய்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கோ, அல்லது தோட்ட அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டவர்களுக்கோ வழங்கப்படவில்லை.

இடை நில, தாழ் நிலத் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளரை அறிமுகம் செய்யக்கூடிய சாத்தியம் காணப்பட்ட அதே வேளை, உயர் நிலத் தோட்டங்களுட் பெரும்பாலானவை, தங்களது தொழிலாளர் தேவைக்கு, தோட்டங்களில் வசிக்கும் இந்தியத் தொழிலாளர்களிலேயே நிரந்தரமாகத் தங்கியிருந்தன போலக் காணப்பட்டன. இத்தோட்டங்களிலேயே இந்தியத் தொழிலாளர் தாயகம் திரும்பிய போது, தொழிலாளர் பற்றாக்குறை எழுந்தது. இப்பிரச்சினையின் தன்மை பற்றி 1978 ம் ஆண்டில், திட்ட அமுலாக்கல் அமைச்சு வெளியிட்ட செயற்பாட்டு அறிக்கையிற் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:—

''கொழுந்து பறிப்போர் பற்றாக் குறை பற்றிய பிரச்சினை ஆழமாக ஆராயப்பட்டதுடன், நுவரஎலியா, பதுளை ஆகிய பகுதிகளின் தோட்டங்கள் சிலவற்றில் இப்பற்றாக்குறை பிரச்சினைகளை ஏற்படுத்துவது கண்டறியப்பட்டது; இதுவும் உற்பத்தி உச்சமாகக் காணப்படும் காலங்களில் மாத்திரமே. தேசிய முகாமை நிறுவனத்தால் நுவரேலியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகளின் பிரகாரம் மனித-காணி விகிதாசாரம் ஏக்கருக்கு 1.25 தொழில் அலகாக இருக்கவேண்டிய அதே நேரம், சில இடங்களில் இது, .81 அலகு வரை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைத் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறை தொடர்பான ஆய்வுகள், தொழிலாளர் அதிகமாகத் தேவைப்படும் உற்பத்திப் பருவகாலத் தேவையையும் கணக்கிற் கொண்டு பார்க்குமிடத்து, சுமார் 2,309 தொழில் அலகுகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டன. அத்துடன், இந்தியத் தொழிலாளர் எதிர்பார்க்கப்பட்டமை போன்று தாயகம் திரும்பின், 1984 ல் 10,500 தொழில் அலகுகளுக்குப் பற்றாக்குறை நிலவும். பதுளையைப் பொறுத்தளவில் 11,900 தொழில் அலகுகள் மேலதிகமாகத் தேவைப்படுமென தோட்டச் சுப்றீண்டன்கள் மதிப்பிட்டுள்ளனர். 1978 அக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட ஒரு புள்ளி விவர ஆய்வு இதனைத் தெரிவிக்கின்றது.''

**வேதனமும் உழைப்பும்**

1944 ல் ஸ்தாபிக்கப்பட்ட வேதனச் சபை, தேயிலை உற்பத்தி, கைத்தொழில் துறைகளுக்கான வேதனங்களை நிர்ணயித்து வருகின்றது. அரசாங்க, தொழிலாளர், தொழில் வழங்குவோர் (தோட்டத் துரைமார் இப்போது அரச கூட்டுத் தாபனங்கள்) பிரதிநிதிகள் இச்சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களது வேதனம் மாதாமாதம் வழங்கப்பட்டாலும் நாளாந்த அடிப்படையிலேயே அது கணிக்கப்படுகிறது. வேலையும் நாளாந்த அடிப்படையிலேயே நிச்சயிக்கப்படுகிறது. விளைச்சல் நிலைமைகளுக்கேற்ப காலத்துக்குக் காலமும், இடத்துக்கிடமும் இது வேறுபடுகிறது. ஆண்களுக்கான கொந்தராத்தும் (களை பிடுங்கல் கொந்தராத்து) பயிர் விளைச்சல் நிலைமைகளுக்கேற்ப தோட்டத்துக்கு தோட்டமும், மாவட்டத்துக்கு மாவட்டமும் வேறுபட்டுக் காணப்படுகிறது. எனவே, வேலை வழங்கப்படும் நாட்களுக்கு ஏற்பவே தொழிலாளர்களது மாத வேதனமும் அமையும். தேசியமயத்துக்கு முன்பு, 40-50 சதவீதத் தோட்டங்கள் வாரத்துக்கு மூன்று நாட்களே வேலை வழங்கின எனவும், 40 சதவீதமான தோட்டங்கள் 4 நாட்கள் வேலை வழங்கின எனவும், 10 சதவீதத் தோட்டங்களே 5 தினங்களும் அதற்கு மேலும் வேலை வழங்கின என்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளர் கூறியிருந்தார். தோட்ட நிர்வாகங்கள், தொழிலாளருக்கு, 6 மாதத்துக்கு ஆகக் குறைந்தது 109 நாட்கள் அல்லது வருடத்துக்கு 218 நாட்கள் வேலை வழங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தும் சட்டம் 1974 மார்ச் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம், வாரத்துக்கு 4 வேலை நாட்கள் என்பது உண்மையாயினும், வாரத்துக்கு இத்தனை நாட்கள் கட்டாயமாக வேலை வழங்க வேண்டுமென இச்சட்டம் குறிப்பிடவில்லை. நிர்வாகம் தொழிலாளருக்கு 3 மாதம் தினமும் தொடர்ந்து வேலை வழங்கி விட்டு அடுத்த 3 மாத காலம் வேலை வழங்காதிருக்கவும் இது வழி வகுத்தது. இதனால் 6 மாதத்துக்குக் குறைந்தது 120 தினங்கள் வேலை வழங்கவேண்டுமென்ற சட்டம் உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்யப்பட்ட தொழிலாளி ஒருவரே இங்ஙனம் குறைந்த பட்ச நாட்கள் வேலை பெற உரித்துடையோராவார். பதிவு செய்யப்பட்ட தொழிலாளி ஒருவர் காரணம் காட்டாது 30 தினங்களுக்கு மேல் வேலைக்கு வராதிருப்பின், அவரது பெயர் பதிவிலிருந்து நீக்கப்பட இடமுண்டு. பதிவு செய்யப்படாத சமயாசமய தொழிலாளர்கள் தொடர்ந்து ஒழுங்காக 3, 4 வருடங்களுக்கு வேலைக்கு வருவார்களாயின் (வருடத்துக்கு 218 நாட்கள் அல்லது அதற்கு மேல்) கொள்கையடிப்படையில் அவர்கள் பதிவு செய்யப்படவேண்டும். எனினும், சமயாசமய தொழிலாளர்களைத் தொடர்ந்து வேலைக்கமர்த்தாது, சில நாட்கள் விட்டு விட்டு வேலை வழங்கின் அவர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாகப் பதிவு செய்து கொள்ளல் சாத்தியமன்று. சார்பு ரீதியாகப் பெரிய தொகை சமயாசமயத் தொழிலாளர்களை வைத்திருத்தல் தோட்டங்களுக்கு நிச்சயமாக இலாபம் தரவல்லதாகும்.

**வேதனச் சபைத்தொழில் துறைகளிலுள்ள தொழிலாளர்களது வேதன வீதக் குறிகாட்டி**

| | குறைந்த பட்ச வேதன வீத குறி காட்டி | மெய் வேதன வீதக் குறி காட்டி |
|---|---|---|
| | 1952 - 100 | |
| 1972 .. | 148.5 | 98.4 |
| 1973 .. | 168.1 | 101.5 |
| 1974 .. | 210.0 | 113.0 |
| 1975 .. | 241.2 | 121.6 |
| 1976 .. | 246.4 | 122.8 |
| 1977 .. | 310.2 | 152.6 |
| 1978 .. | 451.1 | 197.7 |

(மூலம்: இலங்கை மத்திய வங்கி)

எனினும் வேலை வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை இன்னும் வேறுபட்டே காணப்படுகிறது; தேசியமயம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

தேயிலைப் பெருந் திட்டத்துக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 1978 ஏப்ரலில் வழங்கப்பட்ட சராசரி வேலை நாட்களின் எண்ணிக்கை 4 உயர் நிலத் தோட்டங்களில் 16.4 இலிருந்து 21.9 தினங்களாகக் காணப்பட்டன. ஐந்து இடை நிலத் தோட்டங்களில் இது 17.0 முதல் 19.3 ஆகவும், 3 தாழ் நிலத் தோட்டங்களில் 13.2 முதல் 15.5 ஆகவும் காணப்பட்டன.

முழு நாட்டுக்குமான சராசரியை எடுத்துப் பார்த்தால், வேலை நாட்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது, பின்வரும் அட்டவணை இதனை விளக்குகிறது:

தேயிலை, றப்பர் தொழிலாளர்களின் (1972-1976) வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி, வேதன அதிகரிப்புக் குறிகாட்டிப் புள்ளி, மெய் வேதன குறிகாட்டிப்புள்ளி விவரங்கள் வருமாறு:

மதியைக் கூட்டுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. வாழ்க்கைச் செலவு விசேட படி, தோட்டத் தொழிலாளருக்கான விசேட படி (1972 ன் 1 ம் இலக்க அவசர காலச் சட்டத்தின் கீழான இவ் விசேட படி 1972 நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வந்தது), 1975 ன் 1 ம் இலக்க அவசரகால (தனியார் துறை) மேலதிக லைசன்ஸ் (தேயிலைத் தோட்டத்துறைக்கானது), தேயிலை விலைகளின் அடிப்

| | நாளாந்த சராசரி குறைந்த பட்ச சம்பள வீதம் | தோட்டத் தொழிலாளருக்கான வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி எண் அடிப்படை (1939-100) | வேதனவீத குறிகாட்டி எண் (1939-100) | மெய் வேதன குறிகாட்டி எண் (1939-00) |
|---|---|---|---|---|
| 1971-72 .. .. | 2.82 | 428 | 688 | 161 |
| 1973 .. .. | 3.25 | 474 | 79 | 167 |
| 1974 .. .. | 4.06 | 532 | 990 | 186 |
| 1975 .. .. | 4:66 | 568 | 1136 | 200 |
| 1976 .. .. | 4.76 | 575 | 1161 | 202 |

(மூலம்: இலங்கை ஆண்டறிக்கை—1977)

**தேயிலைத் தோட்டத் தொழிலாளரது குறைந்தபட்ச அடிப்படை வேதனம் (1969—1978)**

| | ஆண் ரூபா | பெண் ரூபா | வித்தியாசம் ரூபா | வித்தியாசம் % |
|---|---|---|---|---|
| 1969 .. .. | 4.67 | 3.65 | 1.02 | 21.8 |
| 1970 .. .. | 4.79 | 3.69 | 1.10 | 23.0 |
| 1971 .. .. | 5.09 | 3.83 | 1.26 | 24.8 |
| 1972 .. .. | 5.45 | 4.07 | 1.38 | 25.3 |
| 1973 .. .. | 6.17 | 4.55 | 1.62 | 26.9 |
| 1974 .. .. | 6.83 | 4.99 | 1.84 | 26.3 |
| 1975 .. .. | 7.01 | 5.11 | 1.90 | 27.1 |
| 1976 .. .. | 6.57 | 5.14 | 1.43 | 21.8 |
| 1977 .. .. | 8.20 | 6.25 | 1.95 | 23.8 |
| 1978 செப். .. | 8.91 | 6.73 | 2.18 | 24.7 |
| 1979 ஜன. .. | 11.43 | 9.30 | 2.13 | 18.6 |

மூலம்: தொழில் கஸெட்

வருடாந்த விடுமுறை, கடன்கள் வழங்கல் போன்ற விடயங்களைக் கணிக்கும் விஷயத்தில் தொழிலாளியொருவர் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை கவனத்திற் கொள்ளப்படும்.

இத்தகைய நிலைமைகளின் கீழேயே உத்தரவாதப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மாத வேதனக் கோரிக்கை, தோட்டத் தொழிற் சங்கங்களின் அதி முக்கிய கோரிக்கைகளுள் ஒன்றாக மாறியுள்ளது.

தொழிலாளரின் நாளாந்த சம்பளமானது, ஓர் அடிப்படைக் குறைந்தபட்ச வேதனத்துக்கு, அலவன்ஸ் தொகைகளின் பெறுபடையிலமைந்த அலவன்ஸ் (ஆகக் கூடியது 1 ரூபா) மற்றும் பொதுத் துறை அலவன்ஸ்கள் என்பன இத்தகைய விசேட அலவன்ஸ்களாகும்.

அடிப்படைக் குறைந்தபட்ச சம்பள வீதத்தில், ஆண், பெண் தொழிலாளரிடையே வேறுபாடு காணப்படுகிறது. இதன்படி, வழமையாக ஆண்களது சம்பள வீதம் பெண்களை விட 25% அதிகமாகவே இருந்து வந்துள்ளது: ஆனால், மணித்தியால வேலை அளவைப் பார்த்தால் பெண்கள் கூடிய நேரம் வேலை செய்கின்றனர். இவை யாவும், தோட்டத் துறையில் பெண் தொழிலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பெருமளவில் சுரண்டப்படுகின்றனர் என்பதைக் காட்டி நிற்கின்றனர். இதனால் ஆண் - பெண் தொழிலாளர் வேதன வேறுபாடு அகற்றப்பட வேண்டுமென்பது தோட்டத் தொழிற் சங்கங்களின் இன்னொரு நிரந்தரக் கோரிக்கையாக இருந்து வருகிறது. தோட்டத் தொழிலாளரது வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி, கிராட்டியுட்டி என்பனவற்றை ஏனைய அரச கூட்டுத்தாபனத் தொழிலாளர்களுடையனவற்றுடன் சமப்படுதல், கனே பிடுங்கல் கொந்தராத்து (கொந்தராப்பு) வீதத்தைச் சுப்றீன்டன்கள் நிர்ணயிக்க விடாது தடுத்தல் என்பன தோட்டத் தொழிற் சங்க யூனியன்களின் ஏனைய கோரிக்கைகளாக இருந்து வருகின்றன.

1974 முதல் தோட்டத் தொழிலாளரது வேதன மட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. ஆனல், தொழிலாளரைப் பாதித்துள்ள ஏனைய விஷயங்களுடன் ஒப்பிடுகையில், வேதன மட்டத்திலான இம் மாற்றங்கள் அவற்றை ஈடு செய்யப் போதுமானதா என்பதே கேள்வியாகவுள்ளது.

தேயிலேப் பெருந்திட்டத்துக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தேயிலேத் தோட்டத் தொழிலாளரது வருமானம் தொடர்பான மேலும் பல உண்மை நிலைமைகள் தெளிவாகின்றன. 4 உயர் நிலத் தோட்டங்களேயும், 5 இடைத்தரத் தோட்டங்களேயும், 3 தாழ் நிலத் தோட்டங்களேயும் உள்ளடக்கி இவ்வாய்வு நடத்தப்பட்டது. 1978 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான இவ்வாய்வுப் புள்ளி விபரங்களின்படி:—

* ஒரு தொழிலாளிக்கான மொத்த மாத வருமானம் (தொழிலாளியின் சேமலாப நிதிக்கான கொடுப்பனவையும் உள்ளடக்கி) ரூபா 155-02 இலிருந்து, ரூபா 243-62 வரையானதாகக் காணப்பட்டது;

  இதன் சராசரி நடுப்புள்ளியாக ரூபா 200.52 காணப்பட்டது.

* தோட்டத்தில் வசிக்கும் ஒரு தொழிலாளியின் தேறிய வருமானம் சராசரி (சேமலாப நிதிக் கொடுப்பனவைக் கழித்து), ரூபா 251-14 இலிருந்து ரூபா 515-92 ஆகக் காணப்பட்டது. இதன் நடுப்புள்ளி ரூபா 469-21 ஆகக் காணப்பட்டது.

* தொழிற் சங்கக் கொடுப்பனவுகள், உணவுக்கான முற்பணக் கழிவு, உற்சவ கால முற்பணம், சுய தேவைகள் போன்றனவற்றையெல்லாம கழித்துப் பார்க்கையில், தொழிலாளியொருவர் மாத இறுதியில் பெறும் சம்பளம மிகச் சிறிய ஒரு தொகையேயாகும். ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்ட 3 குடும்பங்களின் மொத்த வேதனத்தில் இங்ஙனம் கழிக்கப்பட்ட தொகை 23 முதல் 29 சதவீதம் வரையானதாகக் காணப்பட்டதாகத் தெரிகிறது. இதனடிப்படையில் இம் மூன்று குடும்பங்களும் முறையே ரூபா 212-37, ரூபா 238-63, ரூபா 591-45 என்ற தொகைகள் மாத வருமானமாகப் பெற்றிருந்தன. இவற்றுள் முதலாவது குடும்பம் 2 வளர்ந்த பிளளேகளேயும், 4 சிறிய பிள்ளேகளேயும் கொண்டிருந்தது; இரண்டாவது குடும்பத்தில் 4 வளர்ந்த பிள்ளேகளும் 4 சிறு பிள்ளேகளும் இருந்தனர்; அடுத்த குடும்பத்தில் 4 வளர்நத பிள்ளேகளும், 2 சிறுவர்களும் காணப்பட்டனர்.

* ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தோட்டத்தின் குடும்பங்களின் சராசரி அளவு 4.1 முதல் 5.4 ஆகக் காணப்பட்டது.

* உணவுப் பங்கீட்டுப் பொருள்களே விநியோகிப்பதில் கூட்டுறவு நிறுவனங்களிலும் ஏனைய சில்லறை விற்பனே நிலேயங்களிலும் காணப்பட்ட குறைபாடுகளாலும், பலவீனங்களாலும் இப்பணியை தோட்ட நிர்வாகங்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலே உருவாகியது. இது, தோட்ட நிர்வாகத்தை ஒரு நடுவர் வர்த்தகராக்கி இலாபமீட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்தியதெனவும் கூறப்படுகிறது.

நிச்சயமாக இந்நிலேமைகள் யாவும், தோட்டத் தொழிலாளியின் நிலேமையை மேலும் மோசமாக்கின.

**வீட்டு வசதியும் சுகாதாரமும்**

தேசிய மயத்துக்கு முன்னர் இவ்வசதிகள் இரண்டும் தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பிலிருந்தன. எனினும், நேரடியாகவோ மறைமுகமாகவோ இவ்விஷயத்தில் அரசாங்கம் செல்வாககுச் செலுத்தவும் இடம் இருந்தது. தேசிய மயத்தையடுத்து, தோட்டங்களின் சுகாதார அமைப்பு தேசிய சுகாதார அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டது. எனினும் வீட்டு வசதிகள் ஏறத்தாழ இன்னும் தோட்ட நிர்வாகத்தின் கையிலேயே இருந்து வருகின்றன.

இவ்விரு விஷயங்களிலும், பிரச்சினே எத்துணே ஆழமானதென்பதை முதலில் மட்டிட்டுக் கொள்ள வேண்டும்; நிலேமையைச் சீர் செய்ய எடுக்கப்பட்டுள்ள வழிவகைகள் போதுமானவையா என்பதை ஆராய இது உதவும். வீட்டு வசதிகளேப் பொறுத்தளவில், தோட்டங்களே ஆரம்பித்தோர், சாதாரண வீடுகளில் தொழிலாளர் குடியமாத்தப்பட வேண்டுமென எண்ணவில்லே. இதற்கு மாருக "லேன் அறைகளே"க் கட்டி வழங்கினர். ஒரு நீண்ட கட்டிடமான இது பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டுத் தொழிலாளர்க்கு வழங்கப்படும். 10 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட இவ்வறைகள் 5 அல்லது 6 அடி அகலம் கொண்ட பொது வராந்தாவுடன் இணேந்திருக்கும். இத்தகைய லேன்கள் அமைக்கப்படுவதைத் தடை செய்யும் சட்டங்கள் 1950 ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், தோட்டப் பகுதிகளில் இன்றும் இந்த லேன் அறைகளே பாரியளவில் தொழிலாளர் வதிவிடங்களாகக் காணப்படுகின்றன.

1969-70 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார ஆய்வின் பிரகாரம், தோட்டப் பகுதிகளிற் காணப்பட்ட 25,655 தொழிலாளர் வதிவிடங்களில் 22,572 (89.72 %) இந்த லேன் அறைகளாகவே காணப்பட்டன; தோட்டத் தொழிலாளருள் 85 சதவீத மானேர் இந்தலேன் அறைகளில் வசித்து வந்தனர்.

1973 ல் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி பற்றிய ஆய்வொன்றின் பிரகாரம், நகரப் பகுதிகளில் 35 சதவீதமான வீடுகளில் அளவுக்கதிகமான ஆட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்து வந்தனர். கிராமப்புபகுதிகளில் இது 35 சதவீதமாயும், தோட்டததுறையில் இது 75 சதவீதமாயும் காணப்படடது. ஓர் அறைக்கு இருவர் என்ற வீதப்படி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. தேயிலைப் பெருந்திட்டத்துக்கான ஆய்விலும், இத்தகைய லைன் அறைகள் பற்றியும், அவற்றின வசதியீனங்கள பற்றியும் குறிப்பிடப்பட்டது. ''4 தனித்தனியான லைன் அறைக் குடும்பங்கள் ஆய்வுக் கெடுத்துக் கொள்ளப்பட்டனா. தொடர் வீடுகள் போன்ற இந்த லைனகள் ஒவ்வொன்றும் சுமார் 100 அடி நீளமும் 15 அடி அகலமும் கொணடவை. ஒவ்வொரு கட்டிடமும் 9 அல்லது 10 அறைகளைக் கொண்டுள்ளது: இதனைச் சுற்றி சிமெந்துத் தரையும், இரு திறந்த கால்வாயும் காணப்படுகின்றன. தரைகளி மண்ணுலானது: காலாகாலம் இது சாணத்தால் பூசி மெழுகப்படும். கல்வனைஸ் சீட்டுக்கள் கூரைக்குப போடப்பட்டுளளன: இவை மாற்றப்பட வேண்டியது அவசியமாகவுள்ளன. சந்தித்த 32 குடும்பங்களுள் மூனறைத் தவிர, ஏனைய சகல குடும்பங்களும் 10 அடி நீள 12 அடி அகல அறைகளிலேயே வாழ்கின்றன: இவ்வறைகள் ஒவ்வொனறும் ஒரு சிறிய வராந்தாவைக் கொணடுள்ளன. அறையினுள் அல்லது வெளியே ஒரு சிறிய குடிலில் சமையல் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புகைபோக்கிக் குழாய் வசதிகள் எவையும் இங்கில்லை. சில வேளைகளில் வராந்தாவிலும் சமையல் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சில குடும்பங்களே ஏதோ ஒரு வகை தளபாடங்கள் அல்லது உடமைகளை வைத்திருக்கத் தக்க அலுமாரி வசதிகளைக் கொண்டுள்ளன. நித்திரை செய்யப் பாய்களே பயனபடுத்தப்படுகின்றன. விடிந்தவுடன் இவை சுருட்டி வைக்கப்படும். துணித் தூளிகளில் (தொட்டில்களில்) குழந்தைகள் தூங்குகின்றன. இந்த லைன் அறைகளுக்கு சிறிது தூரத்தில் குழாய் (நீர்) கள் உள: நடந்து சென்று நீரைப் பெற்றுக்கொள்ளலாம். சில தேயிலைச் செடி மீதிகளைத் தவிர, விறகுக்குத் தட்டுப்பாடு காணப்படுகிறது. மலசலகூட வசதிகள் எவையும் இல்லை.

தோட்டத் தொழிலாளரின் வாழிட வசதிப் பிரச்சினைகளைத் தீர்க்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

(1) லைன் அறைகளின் தரத்தை உயர்த்துதற்கான பல்வேறு திட்டங்கள்; அறைகளைத் திருத்திப் புதுப்பித்தல், குடியிருப்போர் எணணிக்கையைக் குறைத்தல் என்பனவற்றை இது உள்ளடக்குகிறது:

(2( சிறு வீடுகளை (Cottage) அமைத்தல்.

(3) உலக வங்கி புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் மஸ்கேலியா - டிக்கோயா மாவட்டங்களில் வீட்டு வசதிகளை அபிவிருத்திசெய்தல்; இத் திட்டத்தின கீழ் 1979 ல் 300 புதிய இரட்டைச் சிறு வீடுகளைக் கட்டலும், 600 லைன்களை அபிவிருத்திசெய்தும் இத் திட்டத்தின் கீழ்வருகின்றன.

தேசிய மயத்துக்கு முன்னர் போன்றே தோட்டத் தொழிலாளியின வீட்டு நிலைமைகளுக்கான பொறுப்பு தோட்ட நிர்வாகத்திடமேயே உள்ளது. தேயிலைக் கைத்தொழிலில் ஏற்படக்கூடிய இலாபத்தைப் பொறுத்தே வீட்டு வசதுகளை அபிவிருத்தி செய்தல் தங்கியுள்ளது. உற்பத்திச் செலவைக் குறைவாக வைத்துக் கொள்ள வழிசெய்யும் வகையில், வீட்டு, சேமநல வசதிகளுக்கான செலவினங்களைத் தாழ் மட்டத்தில் வைத்துக் கொள்ளத் தோட்ட நிர்வாகங்கள் முயலும் ஒரு நிலையை இது தோற்றுவிக்கிறது. தேயிலையின விலை குறைந்து, வேதன அதிகரிப்பின் காரணத்தால் தொழிற் செலவு அதிகரித்துவரும் நிலையில், தொழிலாளர்களின் சேமநலனுக்கான (வீட்டு வசதிகளை ஏற்படுத்தல் போனறவைவற்றுக்கான) நிதிவள வசதிகள் குறைவாகவே இருக்கும்.

**சுகாதாரம்**

ஏனைய விஷயங்களில் போன்றே தோட்டத் தொழிலாளரது சுகாதார நிலைமைகளும் கூட, தேசிய தரத்தை விட வெகு தாழ் மட்டத்தில் தான் காணப்படுகின்றன. இத் தொழிலாளர்களிடையே பொதுவாகக் காணப்படும் சுவாச நோய்கள் இவர்கள் வாழும் நிலைமைகளின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. சுவாச நோய்களான புறங்கையிட்டிஸ், நியூமோனியா, புளூரசி, தொய்வு (ஆஸ்த்மா) என்பனவே தோட்டப் பகுதிகளில் பெருமளவில் காணப்படும் நோய்களாகும். தவிர, இந்நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் பாரியளவானதாகும். தோட்டத் துரைமார் சங்க தோட்டச் சுகாதாரத் திட்ட வைத்திய டைரக்டரது 1969 ம் ஆண்டறிக்கையின் பிரகாரம், இந் நோய்கள் இங்ஙனம் பெருமளவிற் காணப்படுதற்கான காரணம் ''மோசமான கால நிலை நிலைமைகளுக்கும், தாழ் வெப்ப நிலை நிலைமைகளுக்கும் அவர்கள் உட்படுவதும், உயர் மலைப் பிரதேசங்களில் தொழில் செய்வதும், வீடுகளில் அளவுக்கு மீறிய ஆட்கள் இருப்பதுமே எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர், நுவரேலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றனர். இந்த 5 மாவட்டங்களுமே நாட்டில் அதிகமாகக் குழந்தைகள் இறப்பு வீதம் காணப்படும் மாவட்டங்களாகும். தவிர, குழந்தை இறப்பு வீதம் அதிகமாக காணப்படும் மாவட்டங்களை ஒழுங்குபடுத்தினல் முதல் ஐந்து இடங்களைப் பெறுவதும் இம் மாவட்டங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. உணவுப் பற்றுக்குறை கடுமையாகக் காணப்பட்ட 1974 ம் ஆண்டில் எல்லா இனத்தவர்களிடையேயும், ஜனத்தொகை வளர்ச்சி 1973 ன் 1000க்கு 20.3 என்பதிலிருந்து 1974 ல் 18.5 ஆகக்குறைந்தது. இந்தியத் தமிழர்களது ஜனத்தொகை வளர்ச்சி வீதம் 1973ன் 14 இலிருந்து 1974ல் 7.1 ஆகக் குறைந்தது. பெருந்தோட்டங்களை உள்ளடக்கும் வைத்திய அத்தியட்சகர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட உலக சுகாதார ஸ்தாபன ஆய்வொன்று, தேசிய சராசரித்தர மட்டங்களை விட வெகு குறைவானவையாகக் காணப்பட்டன எனக் கூறுகிறது. 100,000 பேருக்கான டாக்டர்கள் மத்திய மாகாணத்தில் 15.2 ஆகவும், ஊவா மாகாணத்தில் 13.2 ஆகவும், சப்பிரகமுவ மாகாணத்தில் 13.4 ஆகவும் காணப்பட்டனர்: இதேவேளை, தேசிய சராசரியானது 25.7 ஆகக் காணப்பட்டது. இதே போன்று 100,000 பேருக்கான தாதிகளின் எண்ணிக்கையும் முறையே மூன்று மாகாணங்களுக்கும் 29.5%, 24.1%, 34.6% எனக் காணப்பட்டது. முழுத் தீவுக்குமான எண்ணிக்கை 50.8 ஆகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான சோகை, புரதச் சத்துப் பற்ருக்குறை போஷாக்கின்மை என்பன தோட்டத் தொழிலாளர்களிடையேயும் அவர்களது குடும்பத்தினரிடையேயும் வெகு தாராளமாகக் காணப்படுகின்றன என வெளிக்கள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசியமயத்தையடுத்து தோட்டப்பகுதிச் சுகாதார அமைப்பு நாட்டின் தேசிய சுகாதார அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுவிட்டாலும், சில பழைய பாதகமான அம்சங்கள் தொடர்ந்தும் காணப்படவே செய்கின்றன. அரசாங்க வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் தோட்டத் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு தோட்ட நிர்வாகம் ரூ. 5.60 வழங்க வேண்டுமென்ற திட்டம் இன்னும் அமுலில் உள்ளது. தொழிலாளியொருவருக்கு ஓராண்டுக்கு அரசாங்கம் வழங்கும் வைத்தியச் செலவு மானயமாக 1912 ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 50 சதமே இன்னுமுள்ளது. நிச்சயமாக இது இப்போது போதாதென்பதை எவரும் ஒத்துக் கொள்வர். இத்திட்டத்தின் கீழ் மருந்துகளின் விநியோகம் நீண்ட நாட்கள் தாமதமாகின்றன; தவிர, சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட மிகக் குறைந்த அளவு தொகைக்கே பல சந்தர்ப்பங்களில் மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன. தோட்டப் பகுதிகளில் மருந்துப் பற்ருக்குறையை இது இயல்பாக உருவாக்கி வருவதுடன், தொழிலாளியின் வைத்தியச் செலவுச் சுமையை மென்மேலும் தோட்ட நிர்வாகங்களின் மேல் போட வழிசெய்கின்றன. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான தோட்ட நிர்வாகத்தின் முயற்சிகள், இவ்வசதிகளில் மறைமுகமான தாக்கங்களை ஏற்படுத்தலாமென்பதையே இது குறிக்கிறதெனலாம்.

அண்மைக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களது சுகாதார நிலைமைகளை விருத்தி செய்யவென பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தோட்டப் பகுதிகளின் 200 பொலி கிளினிக்குகளை ஆரம்பிப்பது இவற்றில் ஒன்று. 10 வைத்திய அத்தியட்சகர் பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு 20 என்ற வீதம் இவை ஸ்தாபிக்கப்படவிருந்தன. ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு மாதத்துக்கு ஒரு முறை இவை இயங்கவிருந்தன. தாய் சேய் நலன் பேணல்,

**கல்வி மட்டங்கள் (விகிதாசாரம்)**

| | தீவு | நகரம் | கிராமம் | தோட்டம் |
|---|---|---|---|---|
| பாடசாலை செல்வோர் எண்ணிக்கை .. | 17.5 | 11.6 | 15.8 | 38.9 |
| ஆரம்ப வகுப்புகள் .. .. | 44.6 | 37.8 | 45.4 | 51.0 |
| நடுத்தர வகுப்புகள் .. .. | 9.4 | 37.8 | 31.7 | 8.8 |
| ஜி.சி.ஈ. (சாதாரணம்) சித்தியடைந்தோர் .. .. | 6.6 | 11.0 | 6.3 | 3.3 |
| ஜி.சி.ஈ. (உயர்தரம்) சித்தியடைந்தோர் | 6.9 | 1.0 | 0.8 | 0.0 |

| கல்வியறிவு வீதம் | நகரம் | கிராமம் | தோட்டம் |
|---|---|---|---|
| கல்வியறிவு பெற்ருேர் .. | 88.7 | 84.3 | 61.2 |
| கல்வியறிவற்ருேர் .. .. | 13.3 | 11.7 | 38.8 |

மூலம்: 1969-70 சமூக பொருளாதார ஆய்வு, குடிசன புள்ளிவிபரத் திணைக்களம்.

தொற்றுநோய் தடுப்பு மருந்தேற்றல், போசாக்கு குடும்பத் திட்டம், சுகாதாரக் கல்வி போன்றன இப் பொலி கிளினிக்குகளின் நடவடிக்கைகளாக இருந்தன. யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. போசாக்குள்ள பாலுணவுகள், திரிபோசா என்பனவற்றையும் இக் கிளினிக்குகள் விநியோகித்தன. திரிபோச திட்டம் ''கெயர்'' நிறுவன உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. யுனிசெப் நிறுவன உதவியுடன் பாலர் விடுதிகளை தரமுயர்த்தல் என்பது தோட்டத் தொழிலாளர்களது சேம நலனை உயர்த்தவென உருவாக்கப்பட்ட இன்னெரு திட்டமாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் அண்மைய அறிக்கையொன்றின் பிரகாரம் 300 பாலர் விடுதிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், சுமார் 200 விடுதிகளில் இவை தொடர்பான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கல்வி

தோட்டத் துறையின் மிகச் சிறிய அளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இன்னுமோர் அம்சம் கல்வியாகும். நாடெங்கும் மேற்கொள்ளப்பட்ட அனேகமான எல்லா முக்கிய கல்விச் சீர்திருத்தங்களும், ஓர் இம்மியளவேனும் தோட்டத்துறையை உள்ளடக்கவில்லை. 1969 - 70 ஆம் ஆண்டில் சமூக பொருளாதார ஆய்வின் கல்வித் தராதரங்களின் ஒப்பீட்டில் இவ்வுண்மை தெளிவாகின்றது.

இப் புள்ளிவிபரங்களின் பிரகாரம், கிராம நகரப்புறங்களுக்கிடையிலான வித்தியாசம் அவ்வளவு அதிகமானதல்ல. ஆனல், தோட்டத்துறையை பொறுத்தவரையில் கல்வித் தரத்தில் அது மிக கீழ் மட்டத்தில் உள்ளது. 1973 ஆம் ஆண்டில் நுகர்வாளர் நிதி ஆய்வும் இதனையே காட்டுகின்றது. பாடசாலை இடை நடுவில் நீங்கல், பாடசாலைக்கு செல்லல் போன்ற புள்ளிவிபரங்களும் இதனையே காட்டுகின்றன. இது குறை கல்வித் தரத்தையே காட்டுகின்றது. இவ் விடயங்களை பொறுத்தவரையில் முழு நாட்டிற்குமான புள்ளி விபரங்கள் மகிழ்ச்சி தருவதொன்ருக இல்லையென்ருலும் கூட தோட்டத் துறையானது இவ்விடயத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இதனேடு ஒப்பிடத் தக்க நிலைமைகள் கொழும்பு நகரின் சேரிப்புறங்களில் மாத்திரமே காணப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் நிலைமைகள் உண்மையில் மேலும் மோசமடைந்துள்ளன. பின வரும் புள்ளி விபரங்கள் காட்டுவது போன்று தோட்டங்களில் பாடசாலைகளின் எண்ணிக்கையும், பாடசாலை செல்வோர் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளது.

**வயது அடிப்படையில் பாடசாலை செல்வோர் (தோட்டத் துறை)**

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 5- 9 வயது .. | 58.5 | 57.7 |
| 10-16 .. | 69.2 | 49.5 |
| 18-19 .. | 20.8 | 6.7 |

மூலம்: கல்விப் புள்ளிவிபரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக தோட்டப் பாடசாலைகளில் 5 ம் வகுப்பு வரையிலேயே வகுப்புக்கள் இருக்கும். எனினும், இந்த வகுப்புக்களையும் கூடப் பல பிள்ளைகள் படிப்பதில்லை. 2 ம், 3 ம் வகுப்புக்களில் பலர் விலகிவிடுகின்றனர். உயர் வகுப்புக்களுக்குச் செல்லும் ஒரு சில பிள்ளைகள் தோட்டங்களுக்கு வெளியேயுள்ள பாடசாலைகளிற் கல்வி பயில்கின்றனர்.

தோட்டத்துறையைப் பொறுத்தளவில் கல்வியின் ஆரம்பம், தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு காணப்படுகிறது. பாடசாலைகள் தோட்ட நிர்வாகங்களாலேயே நடாத்தப்பட்டன: உண்மையான கல்வியை வழங்குவதன்றி, பகல் வேளைகளில், பெற்றோர் வேலைக்குச் சென்றுவிடுவராதலின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவே இப் பாடசாலைகள் இயங்கின எனக் கூறுவோரும் உளர்.

''இடை நடுவே சுவர்களற்ற தனி ஒரு மண்டபத்தை தோட்டப் பகுதிகளின் மிகச் சிறந்த பாடசாலைக் கட்டிடமெனக் கொள்ளலாம். ஒரு பாடசாலை இவ்வாறுதான் அமைய வேண்டுமென 70 ஆண்டுகளுக்கு முன்னர் விதித்த நிபந்தனைகள் இன்று இக் கட்டிடங்களுக்குப் பொருந்தும். ஏனைய பல பாடசாலைகள் கோயில்கள், பாலர் விடுதிகள், ஸ்டோர் அறைகள் போன்றனவற்றுக்கருகேயுள்ள அரைச் சுவரினாலான கொட்டில்களில் இயங்குகின்றன. கணிசமான அளவு பாடசாலைகள் லாயக்கற்ற கட்டிடங்களில் அமைந்துள்ளன. இக் கட்டிடங்களுட் பல போதிய காற்று வசதிகளின்றி, இருட்டானவையான நெரிசல் மிக்கனவையாகவுள்ளன. இள வயதுப் பிள்ளைகளின் சுகாதாரத்துக்கு இவை எவ்வகையிலும் பொருத்தமானவையல்ல. தளபாடங்களும் இதே போன்று பொருத்தமற்றனவாகவே காணப்படுகின்றன. இருக்கைகள் போதாமையால் பிள்ளைகள் அவற்றில் நெருக்கிக் கொண்டு உட்காருமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்: பல சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு மேசை வசதிகள் கிடையா. சிறு பிள்ளைகள் பொதுவாக நிலத்திலேயே உட்கார்ந்து படிக்கின்றனர். கரும்பலகைகள், தேசப்படங்கள், வரைபடங்கள் முதலிய வற்றிற்காக செலவிடும்பணமும் வெகு குறைவே''.

**தோட்டப் பாடசாலை**

| ஆண்டு | | | மொத்தப் பாடசாலைகள் | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த ஆசிரியர் எண்ணிக்கை | ஒரு ஆசிரியருக்கான மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1973 | .. | .. | 774 | 74,376 | 1219 | 40.8 |
| 1974 | .. | .. | 770 | 62,517 | — | — |
| 1975 | .. | .. | 720 | 58,614 | 1105 | 53.0 |
| 1976 | .. | .. | 725 | 50.816 | 784 | 52.0 |

மூலம்: புள்ளிவிபரத் திரட்டு, 1976.

14 வயது வரை தோட்டப் பாடசாலைகளில் கல்வி கட்டாயமெனினும் (அதாவது ஒரு பிள்ளையின் 9 ம் வகுப்பு வரை), தோட்டப் பாடசாலைகள் எவையும் 5 ம் வகுப்புக்கு மேல் வகுப்புக்களை நடாத்துவதில்லை. வாசிப்பு, எழுத்து ஓரளவு கணக்கு, ஓரளவு பேச்சறிவு, விளையாட்டு, தேகாப்பியாசம் என்பனவற்றை விட வேறெதையும் இவை படிப்பிக்க வேண்டிய அவசியமில்லையென எதிர்பார்க்கப்பட்டன எனினும், புவியியல், சூழல், ஓரளவு ஆங்கிலக் கல்வி போன்ற பாடங்களை அறிமுகம் செய்து, பாட விதானத்தை விரிவாக்கும் முயற்சிகள் சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டன. எனினும், பல்வேறுபட்ட வயது வேறுபாட்டைக் கொண்ட, பல வகுப்புக்களிற் கல்வி பயிலும் சுமார் 50 பிள்ளைகளுக்குக் கல்வி புகட்ட ஒரேயொரு ஆசிரியரை மட்டும் கொண்டிருக்கும் இத் தோட்டப் பாடசாலைகளில் — அதுவும் 2 அல்லது 3 மணித்தியால நேரத்துள் — இப்புதிய அம்சங்களைப் புகுத்தல் என்ன பயனைத் தருமென ஒருவர் கேட்பதற்கும் இடமுண்டு.

1975 ன் காணிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் பின்னர், தோட்டப் பாடசாலைகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றம், அவை கல்வித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படவெனக் கையேற்கப்பட்டமையாகும். இப்பாடசாலைகளைப் படிப்படியாகக் கையேற்கத் திட்டமிடப்பட்டதுடன் இதற்கென 2 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டது. இங்ஙனம் கையேற்கப்படுவதற்கெனப் இப் பாடசாலைகள் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தன. இதனல் பல பாடசாலைகள் கையேற்கப்படாது விடப்பட்டன. இதனையடுத்து இம் முடிவு மாற்றப்பட்டது போற் தோன்றியதுடன், அண்மையில் சகல தோட்டப் பாடசாலைகளையும் கையேற்பதென்ற முடிவை அரசாங்கம் எடுத்தது. கையேற்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைக்கும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன; யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் இவற்றை அபிவிருத்தி செய்தல் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் என்பன இவற்றுட் சில. சில பகுதிகளில் புனரமைப்பு என்ற பெயரில் சில பாடசாலைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டது. பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய தூரத்தைக் கருத்திற் கொள்ளாது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையே இதற்குக் காரணமெனவும் தூரம் அதிகரித்தமை காரணமாகப் பிள்ளைகள் பாடசாலை செல்லாது விட்டனர் எனவும் தொழிற் சங்கங்கள் குற்றஞ் சாட்டின. மேலும், ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரிகளுக்குச் சென்றபோது, அவர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அத்துடன் இவ்வளவு பெருந்தொகை தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட சிறுதொகை நிதி பற்றியும் இவை சுட்டிக்காட்டின.

தோட்டப் பாடசாலைக் கல்வி தொடர்பான மேலெழுந்தவாரியான அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தளவில், முன்னைய திட்டங்கள் யுனிசெப் நிறுவன உதவியுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றதென்பதே உண்மை நிலையெனலாம். தோட்ட நிர்வாகத்தைப் பாடசாலை நிர்வாகத்திலும் பங்குபற்றச் செய்தலே இத்துறையில் மேற்கொள்ளவுள்ள பிரதான மாற்றமாகவிருக்கும். ஒருமுகப்படுத்தப்பட்ட அரச அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் பாடசாலைகளைக் கொண்டுவரும் முயற்சி இதுவெனச் சிலர் குறிப்பிடுகின்றனர். பாடசாலைகளின் விவகாரங்களைக் கவனிக்கவென, கல்வி அபிவிருத்திக் குழுக்களை நிறுவுவதை புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. ஏனைய பாடசாலைகளில்

இக் குழுக்களின் தலைவர்களாகப் பணியாற்றுவது பாடசாலை அதிபர்களாவர்: இவர்களது பணி தோட்டப் பாடசாலைகளைப் பொறுத்தளவில், தோட்ட நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படும்.

இந்நாட்டு மக்களின் ஏனைய பிரிவினருடன் ஒப்பிட்டு நோக்கும் பட்சத்தில், இச்சமூகத்தவர் கல்வி வசதிகள் மறுக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆதாரபூர்வமாக நம்பத் தகுந்த வகையில் நிச்சயமாக நிரூபிக்கலாம். இச்சமூகத்தவரின் வரலாற்றுத் தோற்றம், அவர்கள் இந்நாட்டில் எங்ஙனம் நிலை கொள்ளத் தொடங்கினர் என்பனவற்றை ஆராயப்படுவதன் மூலம் இதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கலாம். அவர்கள் பெறும் கல்வியின் தரம், தோட்டங்களில் அவர்களது வாழ்க்கை, பெருந்தோட்டத் துறைப் பொருளாதாரத்தில் அவர்களது பங்கு என்பனவற்றுக்கிடையேயான தொடர்புகள் இதனை விளக்குன்றன.

காணிச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து தோட்டக் கல்வித் துறையில் பல மாற்றங்கள் நிகழ்துள்ளன. மூன்று தலையங்கங்களின் கீழ் இம் மாற்றங்களை நாம் ஆராயலாம்:

(1) கல்வியில் அரசாங்கக் கட்டுப்பாடு அதிகரித்தமை;

(2) கல்வி நிலைமைகளைச் சீர்திருத்தவென கூடிய நிதி வளங்களை வழங்கமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை;

(3) காத்திரமான முறையில் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், நிர்வாகத்தைப் பரவலாக்கும் சில முயற்சிகளை மேற் கொண்டமை. கடந்த வருடங்களில் எமது முழுக் கல்வித் திட்ட அமைப்பிலும் — அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் — மேற்கொள்ளப்பட்ட பாரிய மாற்றங்களெனக் கூறக் கூடியவை மேற்சொன்ன நோக்குகளே. பாடவிதானத்திலும் மாற்றங்கள் பல செய்யப்பட்டாலும் கூட, ''உள்ளக'' மாற்றங்கள் என்று தான் கொள்ள வேண்டும்.

எனவே, ஏனைய பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளவைவற்றுக்குச் சமனாக நிகழ்ந்துள்ள சில அபிவிருத்திகளை நாம் நோக்குவோம். இக் கோட்பாடுகளுடனான அபிவிருத்திச் சாத்தியப்பாடுகள் — குறிப்பாக கல்வி அமைப்பின் எமது ஏனைய அனுபவங்களின் — அடிப்படையில் — எங்ஙனம் இருக்கும் என்பதே இங்கு எழக் கூடிய ஒரு வினாவாகும்.

பின்னர் வந்த வருடங்களில், நமது தேசத்தின் பொருளாதார வாழ்வின் உயிர்நாடியாக மாறிய ஒரு துறையில் வேலை செய்வதற்காகவே இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர் இங்கு கொண்டு வரப்பட்டனர். இவ்வகையில், இந்நாட்டின் முதலாவது தொழிலாளர் வர்க்கம் என்ற கௌரவத்தை இத்தோட்டத் தொழிலாளர்கள் பெறுகின்றனர். ''பெரிய துரை'' சகல அதிகாரங்களும் பொருந்தியவராக இருந்தார்; சில சந்தர்ப்பங்களில் அவர் கொடூரமானவராகவும் விளங்கினார். கல்வியறிவற்றவர்களாகவும், நாட்டின் ஏனைய மக்கட் பிரிவினரிடமிருந்து புவியியல், கலாச்சார ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவும், (நாடற்ற தன்மை காரணமாக) அரசியல் செல்வாக்கில்லாதவர்களாகவும் இக்கட்டான ஒரு நிலைமையில் தவித்த இத்தொழிலாளர்களுக்கு, தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்க ரீதியாக ஒன்றுபடுவது மட்டுமே ஒரு வழியாகத் தென்பட்டது.

1967 ல் இலங்கை தேயிலையின் நூற்றாண்டைக் கொண்டாடியது. அதன் பின் ஒரு தசாப்தமும் சென்றுவிட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன நடந்து விட்டது? அவர்களது பங்கு கொள்ளல் இன்றி ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதுடன் சிலரது எதிர்காலம் ஸ்ரீ லங்காவுககு வெளியே நிர்ணயிக்கப்பட இருக்கின்றது. இந்த ஒப்பந்தம் இருமுகமான தாக்கத்தினைக் கொண்டது. இவர்களில் சிலர் இந்நாட்டின் பிரஜைகளாகி விடுவார்கள்; எனவே ஓரளவில் அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும். ஆனால், தேர்தல் பலப் பரீட்சையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மையினரின் செல்வாக்கில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனை பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

இந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள பிறிதொரு முக்கியமான மாற்றம் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமையாகும். ஆனால், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை அமைப்பில் எத்தகைய முக்கிய மாறுதல்களும் இதனால் ஏற்பட்டதாக தெரியவில்லை. பெருந்தோட்டங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான உறவுகளைப் பொறுத்த வரையில், இந்த தேசிய மயமும், ஏனைய சீர்திருத்தங்களும் எந்த அடிப்படை மாற்றங்களையும் கொண்டுவரவில்லை. தோட்டங்களை முகாமை செய்யும் விஷயத்தில் இன்னும் அவர்கள் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவே இருக்கின்றனர். அவர்களது கூலிகளையும், கொடுப்பனவுகளையும் கணிப்பீடு செய்வதற்கு எந்த முறைகள் பாவிக்கப்பட்டனவோ அந்த முறைகளே இன்றும் பாவிக்கப்படுகின்றன. விடுமுறைத் திட்டம், லீவு என்பவற்றிலும் எந்த மாற்றங்களும் இல்லை. சம்பள அதிகரிப்புகளுக்கு மத்தியிலும் அவர்களது வாழ்க்கை நிலைமைகள் அவலம் மிகுந்தவையாக இருக்கின்றன. வீடமைப்பைப் பொறுத்த வரை பெரும்பான்மையோர் லைன்களிலேயே வசிக்கின்றனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டபோதிலும், சுகாதாரம், கல்வி என்பவற்றின் தரம் அப்படியொன்றும் பெருமைப்படக்கூடிய அளவுககு இல்லை. தோட்டச் சுகாதாரத்தையும், கல்வியையும் தேசிய அமைப்புடன் ஒருங்கிணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை ஓர் அடிப்படை மாற்றமெனக் கருதமுடியுமெனினும், இதன் விளைவுகளை பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும். ஆனால், இங்கும் கூட தேசிய மட்டத்துடனான ஒருங்கிணைப்பு இன்னும் பூர்த்தியாகவில்லை. பொதுவாக, தோட்டங்கள் செலவுகளைக் குறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளினால் இந்த சேவைகள் பாதிப்படைவது இயற்கையே. எது எவ்வாறிருப்பினும், 110 வருடங்களின் பின்னரும் கூட, நமது நாட்டுத் தோட்டத் தொழிலாளரின் அடிப்படை வசதிகள் இன்னும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது தெளிவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டப் பொருட்கள்**

# தென்னை—உற்பத்தி அதிகரிப்பின் அவசியம்

தென்னை இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களுள் ஒன்றாகவிருந்தபோதிலும், உலக சந்தையில் அதிகரித்துச் செல்கின்ற விலைகளினால் முழுப் பயன் பெறவியலாத நிலையில் இலங்கை உள்ளது. 1979 ல் 9 சதவீதம் அளவில் உற்பத்தி அதிகரித்த போதிலும் தெங்குத் தயாரிப்புக்களின் ஏற்றுமதிப் பிரமாணம் 11 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்தது. சென்ற வருடம் வருமானம் 4.2 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. உள்ளூர்ச் சந்தையிலும், சர்வதேச சந்தையிலும் ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பிற்கு ஏற்ற வகையில், 1979 ம் ஆண்டில் உற்பத்தி அதிகரிக்கவில்லை. முன்னர் இப் பகுதியில் குறிப்பிட்டது போன்று உற்பத்தியாளர்கள் போதிய விளைச்சலைப் பெறாததுடன், வேறு சில காரணங்களின் நிமித்தம் இது வீழ்ச்சியடைந்து செல்லும் ஒரு கைத்தொழிலாகவும் தென்படுகின்றது. தாழ் பிரதேச உற்பத்தியாளர் சங்கம் தனது அறிக்கையில் இந்நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தியது. வருடாந்த தலா தென்னை நுகர்வு 125 காய்களாகும்; எமது சனத்தொகையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு மில்லியன் அதிகரிப்பிற்கும், ஒவ்வொரு வருடமும் 12.5 கோடி மேலதிக காய்கள் தேவைப்படுமெனவும் அவ் அறிக்கை எச்சரிக்கை செய்துள்ளது. எமது தற்போதைய 40,000 தொன் தேங்காய்த் துருவல் வெளியீடு வருடாந்தம் 27.5 கோடி காய்களைக் கவர்ந்து கொள்கின்றது. நாட்டின் சனத்தொகை இரண்டு மில்லியனிற்கும் சிறிது கூடுதலாக அதிகரிப்பின், ஏற்றுமதிக்குரிய தேங்காய்களும் இலங்கையில் நுகர்வு செய்யப்படும்; அல்லது உள்ளூர் நுகர்வினைத் தீவிரமாகக் குறைக்கும் என்பதே அதன் கருத்தாகும்

தாழ் பிரதேச உற்பத்தியாளர் சங்கம் கீழ்க் காணும் வகையில் சாதகமற்ற தன்மைகளைச் சுட்டிக்காட்டுகின்றது: ''இருபது வருடங்களுக்குள் நாட்டின் சனத்தொகை 60 இலட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது; இதனால் அடுத்து வருகின்ற ஏழு வருடங்களுக்குள் தேங்காய்த் துருவல் கைத்தொழில் பூச்சிய நிலையை அடைந்துவிடும்''

இவ்வறிக்கை மேலும் கூறுவதாவது: ''இந்த ஏழு வருடங்களுக்குள்ளாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என நாம் நம்புகின்றோம்; ஆயினும், குறிப்பாக தென்-மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று மாதங்களில் இடம்பெறுகின்ற குறைந்த மழைவீழ்ச்சி உற்பத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும், இது சந்தர்ப்பவசத்தால் இடம்பெற்ற சம்பவமாகவன்றி கடந்த பதினைந்து வருடங்களாக இடம்பெற்று வருகின்ற ஒரு போக்கு என்பதனையும் மறந்துவிடக்கூடாது. எனவே இப் போக்கு தொடர்நதும் நிகழலாம்; எதிர்காலத் திட்டங்கள் யாவும் இவ் அம்சத்தை மனத்திற்கொண்டே இடப்படல் வேண்டும். ஒரு தென்னை மரத்தை வளர்க்க அல்லது இறந்த தென்னையைப் பிரதியீடு செய்ய பத்து வருடங்கள் எடுக்கின்றது. மட்டக்களப்பில் பெருந் தொகையான தென்னை அழிவுற்றதற்கு மேலாக புத்தளம், ராஜகடலுவ, பிங்கிரிய ஆகிய பிரதேசங்களிலும் தென்னை அழிந்துள்ளது. சிறந்த ஆயிரம் தென்னை மரங்களின் இழப்பினால், பத்து வருடங்களுக்குள் ஒரு இலட்சம் தேங்காய்கள் இழக்கப்படுகின்றது என்பதிலிருந்து, இதன் தாக்கத்தினை ஊகிக்கலாம்.''

உரிய நேரத்தில் தேவையான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின், நம்பிக்கையின அறிகுறிகளைக் காணலாம். அவ்வறிக்கையில் தொடர்ந்து பின்வருமாறு கூறப்படுகின்றது: ''அதிர்ஷ்டவசமாக, இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு இலகுவான வழி உண்டு; இதனை முறையாகவும், விரிவாகவும் அமுல் செய்யின், இதன் இருமுனைப் பிரச்சினைகளையும் தீர்ப்பதுடன், இதன் விளைவாக தற்போது இறந்து கொண்டிருக்கின்ற இத் துறைக்கு மீள் சக்தி அளிக்கவும் இயலும். ஒரு சிறு நில உற்பத்தியாளரின் ஏக்கருக்குரிய உற்பத்தி 1,500 ஆகவுள்ள அதே வேளை, சராசரி தோட்ட உரிமையாளரின் ஏக்கருக்குரிய உற்பத்தி 3,000 காய்களாகவும், கூடிய திறன் படைத்த ஒரு உரிமையாளரின் ஏக்கருக்குரிய உற்பத்தி 4,500 காய்களை அண்மித்தும் உள்ளது என்பதனை மனதில் இறுத்தல் வேண்டும். மிகச் சிறந்த உற்பத்தியாளர்களின் உற்பத்தி முறைகளை எல்லோரும் கடைப்பிடிப்பின், இத் தொழிற் துறையின் அமைப்பு முழுமையாக மாற்றமடையும்; இது காரிய சாத்தியமான ஒரு அம்சமாகும்.''

உள்ளூர்க் கைத்தொழில் முழுமையாகத் தேக்கமடைந்திருந்த வேளையில், பிலிப்பைன்ஸ் அடைந்த தீவிர முன்னேற்றம் தொடர்பாக இச் சங்கம் தனது கவனத்தைச் செலுத்துகின்றது. இது தொடர்பாக அறிக்கை பின்வருமாறு கூறுசின்றது: ''இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் பிலிப்பைன்சின் அபிவிருத்திப் பருமனையும். விகிதாசாரத்தையும் நோக்குமிடத்து, அந் நாடு ஒரு மில்லியனிற்குச் சிறிது கூடுதலான கொப்பராவையே ஏற்றுமதி செய்தது. அண்மைக் காலங்களில் இது 2 மில்லியன் தொன்களிற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இலங்கையின் சாதனையுடன் இதனை ஒப்பிடுவது ருசிகரமானதாகும். 1950 க்களின் ஆரம்பத்தில் 250,000 தொன்களாகவிருந்த இலங்கையின் ஏற்றுமதி, இன்று 100,000 தொன்களாகக் குறைவடைந்திருப்பதுடன் மேலும் வீழ்ச்சியடைந்தும் வருகின்றது.

பிலிப்பைன்சின் அமைப்பு ரீதியிலான அபிவிருத்தியின் பெரும் பகுதி கடந்த ஏழு அல்லது எட்டு வருடங்களுக்குள்ளாகவே இடம்பெற்றுள்ளது. இக் காலப் பகுதியில் பிலிப்பைன்சில் நடைபெற்ற ஆசிய, பசிபிக் தென்னை உற்பத்திச் சமூகக் கூட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய பிரதிநிதிகள் இவ் அபிவிருத்தி பற்றி அறிந்திருந்தனரா? அவ்வாறாயின் அவர்கள் இலங்கை திரும்பியதும் அவர்கள் அறிந்தவற்றைப் பிரபல்யப் படுத்த முயற்சித்தனரா? என்பதனைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.''

1979 ல் தென்னஞ் சிரட்டை ஏற்றுமதி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது; பெறுமான அடிப்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம்

# மானியங்கள்

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக உணவு மானியம் ஒரு முக்கியமான சேமநல நடவடிக்கையாக விளங்கி வருகிறது. பல அத்தியாவசியப் பாவனைப் பொருள்கள் குறிப்பாக அரிசி, மா, சீனி, குழந்தைகள் உணவு போன்ற பிரதான உணவுப் பொருள்கள் குறைந்த விலையில் விற்கப்பட்டு வருகின்றன. சில காலத்தில் பங்கீட்டு முறையில் இலவசமாகக் கூட அரிசி வழங்கப்பட்டது. சில வேளைகளில் மண்ணெண்ணெய் கூட மானியத் திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் விற்கப்பட்டதும் உண்டு. அவற்றுக்கு மேலதிகமாக, பிரதான பயிர்களின் புனர்நடுகை, உரம் போன்றவற்றுக்கும் அரசு மானியம் வழங்கி வருகிறது. அதாவது உற்பத்தித் துறைக்கும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பல விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு, குறிப்பாக நெல் மற்றும் உப உணவுப் பொருள்களுக்கு உத்தரவாத விலை வழங்கப்பட்டதன் மூலம் மானியம் வழங்கப்பட்டது. உத்தரவாத விலை, இறக்குமதி செய்யப்படும் அதே விவசாய உற்பத்திப் பொருளின் விலையை விடக் கூடுதலானதாகவே இருந்திருக்கிறது. விவசாயிகளுக்கு இப்போது வழங்கப்படும் உர மானியத்தை 85 சத வீதத்திலிருந்து குறைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக உத்தியோக பூர்வ வட்டாரங்களை ஆதாரங் காட்டி அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளினால், குறிப்பாக பெற்றோலியப் பொருள்களுக்கான இறக்குமதிச் செலவினம் அதிகரித்ததால் நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே அரசு விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும்போது வழங்கப்படும் மானியத்தைக் குறைக்க உத்தேசித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. 1979 ம் ஆண்டில் உர மானியம் 4 கோடி 4 லட்சம் டொலராக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு மானியத்தைப் பொறுத்த அளவில், அரிசி, மா, சீனி, என்பவற்றைக் குறைந்த விலையில் விற்பனை செய்வதே பாரம்பரிய கொள்கையாக இருந்து வந்தது. அதாவது, பிரஸ்தாப உணவுப் பொருள்களின் இறக்குமதிச் செலவுக்கும் விற்கப்படும் விலைக்கும் இடையில் உள்ள வித்தியாசத் தொகையை அரசாங்கமே பொறுத்துக் கொள்கிறது. உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் பட்சத்தில், உதாரணமாக இலவச அரிசி வழங்கும் முறையின்கீழ், அரிசிக்கான முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு மானியம் கொடுக்கிறது. ஆகையால் மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருள்களின் சர்வதேச விலைகளே மானியத் தொகையை அதிகரிப்பதற்கும், குறைப்பதற்கும் ஏதுவான முக்கியமான அம்சங்களாக விளங்குகின்றன. சில வேளைகளில் சீனியினதும், மாவினதும் சர்வதேச விலைகள் இங்கு விற்கப்படும் சில்லறை விலைகளை விடக் குறைவாக வீழ்ச்சி கண்டதும் உண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில் பிரஸ்தாப பொருள்களின் விற்பனை மூலம் அரசுக்கு இலாபம் ஏற்படவும் அந்த இலாபத்தைக் கொண்டு ஏனைய உணவுப் பொருள்களுக்கு வழங்கப்படும் மானியத்தினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யவும் கூடிய சூழ்நிலைகள் தோன்றியதும் உண்டு. உதாரணமாக, கோதுமை மாவைப் பொறுத்த மட்டில் 1970 - 71 ம் ஆண்டு காலப்பகுதி வரை அதன் சில்லறை விற்பனை விலை இறக்குமதிச் செலவை விட அதிகமாக இருந்தது. ஆனால் 1971 - 72 ம் ஆண்டுகள் காலப்பகுதிக்குப் பின்னர் இறக்குமதி விலை உள்ளூர் விற்பனை விலையை விட அதிகமாகியது. எனவே 1971 - 72 ம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் அரசாங்கம் மாவை இறக்குமதி செய்து விநியோகிப்பதன் மூலம் இலாபம் ஈட்டி வந்தது. ஆனால், அதன் பின்னர் அரசு மாவை கூடிய விலைக்கு இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விநியோகித்து மானியம் வழங்க வேண்டியதாயிற்று. உணவுப் பொருள்களுக்கான மானியம் தொடர்ந்தும் மேன்மேலும் அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். சீனியைப் பொறுத்தளவில், 1960 ம் ஆண்டுக்குப் பிந்திய காலப் பகுதியில், அரசாங்கம் லாபம் ஈட்டி வந்தது. அண்மைக் காலங்களில் அந்த லாபம் மேலும் அதிகரித்தது. சீனி இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றின் மூலம் அரசாங்கம், 1973, 1978, 1979 ம் ஆண்டுகளில் முறையே 2 கோடி 18 இலட்சம்; 3 கோடி 8 இலட்சம், 1 கோடி 2 இலட்சம் ரூபாவை ஆதாயமாகப் பெற்றது.

உணவுப் பொருள் மானியத்தில் இரண்டாவது முக்கிய அம்சம் என்னவெனில், வழங்கப்படும் உணவுப் பொருள்களின் தொகையாகும். இது அரிசியைப் பொறுத்த மட்டில் விசேஷமாகப் பொருந்தும். ஏனெனில், அரிசியில் ஒரு குறிப்பிட்ட அளவே மானிய விலைக்கு வழங்கப்பட்டு வந்தது. மானிய விலைக்கு வழங்கப்படும் அளவுகளில் மாற்றம் செய்யப்படும் போது உணவு மானியத்தின் மொத்தத் தொகையில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படும்; உதாரணமாக, 1978 ம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் வருமான வேறுபாடு இன்றி எல்லோருமே பங்கீட்டு அரிசி பெறுவதற்கு அருகதை உடையவர்களாக இருந்தார்கள். ஆனால், அதன் பின்னர் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மட்டுமே இலவசப் பங்கீட்டு அரிசி என்று கட்டுப்படுத்தப்பட்டது. அதன் மூலம் மானியத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் தொகை முன்னரை விட அரைவாசியாகக் குறைந்தது.

மூன்றாவது முக்கிய அம்சம் என்னவெனில், உணவுப் பொருளின் சில்லறை விற்பனை விலையாகும். ஒரு தனி அலகு மானியத்தை நிர்ணயிப்பதற்கு இறக்குமதி விலைக்கும் வழங்கப்படும் சில்லறை விலைக்கும் இடையில் உள்ள வித்தியாசமே கணக்கெடுக்கப்படுகிறது. 1965 ம் ஆண்டில் பங்கீட்டு அரிசி ஒரு கொத்துக்கு பணம் அறவிடுவது என்று மேற்கொள்ளப்பட்ட கொள்கை மாற்ற முடிவு, ''காசு அரிசி'' விலைகளில் வேறுபாடு கொண்டு வரப்பட்டமை, உதாரணமாக 1973 அக்டோபர் முதல் ''காசு அரிசி'' யின் விலையை 1 ரூபா 40 சதத்திலிருந்து 2 ரூபாவாக உயர்த்தியமை என்பன, உணவுப் பொருளகளின் சில்லறை விற்பனை விலை மாற்றம், மானியத் தொகையை எவ்வாறு கூட்டவும், குறைக்கவும் வகை செய்யும் என்பதற்குச் சில உதாரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு மானியம் (1973—1979)

(பத்து லட்சத்தில)

| மானியம் | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|---|---|---|---|
| அரிசி (உற்பத்தியாளர் மானியம் உட்பட) | 564.0 | 745.1 | 786.5 | 680.3 | 943.0 | 1066.1 | 1070.6 |
| மா .. .. .. | 111.0 | 148.1 | 218.4 | 52.9 | 363.6 | 1027.9 | 703.0 |
| சீனி * (லாபத்தைக் குறிக்கிறது) .. | * 21.8 | 26.5 | 215.1 | 165.9 | 70.0 | * 30.8 | *10.2 |
| குழந்தைகள் பாலுணவு .. .. | 4.0 | 8.5 | 11.9 | 16.2 | 15.3 | 68.7 | 75.0 |
| மற்றவை .. .. .. | 21.9 | 26.1 | — | — | 32.2 | — | — |
| | 700.9 | 954.3 | 1231.9 | 915.3 | 1424.1 | 2131.9 | 1838.4 |
| உணவு முத்திரைகள் .. .. | | | | | | | |
| | | | | | | | 2334.4 |

நெல் மற்றும் சில உப உணவுப் பயிர்களுக்கு வழங்கப்படும் உத்தரவாத விலை அரசாங்கத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க மானியமாகும். உணவுப் பொருள்களுக்கு ஸ்திரமான விலைகளை ஏற்படுத்துவதும், அரிசி மற்றும் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பை அளிப்பதுமே உத்தரவாத விலைத் திட்ட மானியத்தின் முக்கிய குறிக்கோளாகும். 1950 ம் ஆண்டு முதல் நெல் உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்டு வரும் உத்தரவாத விலை, இறக்குமதி செய்யப்படும் அரிசியின் கப்பற் கட்டணம் உட்பட இறக்குமதி விலையை விட அதிகமானதாகும். அரிசியின் சர்வதேச விலை உயர்ந்தபோதெல்லாம் எமது விவசாயிக்கு வழங்கப்படும் உத்தரவாத விலையும் அதிகரிக்கப்பட்டது. இந்த இரு விலைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசமே அரசாங்கம் வழங்கும் மானியமாகும். நெல் சந்தைப்படுத்தும் சபையின் கிளைகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் அரசாங்கம் உற்பத்தியாளரிடமிருந்து, நெல்லைக் கொள்வனவு செய்து வருகிறது.

அரசாங்கம் உள்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து வாங்கும் கொள்விலைக்கும், வெளிநாட்டுப் பொருளின் கப்பற் கட்டணம் உட்பட்ட இறக்குமதி விலைக்கும் உள்ள வித்தியாசமே உற்பத்தியாளருக்கு வழங்கப்படும் மானியமாகும். 1978, 79 ம் வருடங்களில் அரிசியின் இறக்குமதி விலை, உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்ட உத்தரவாத விலையை விட அதிகமானதாக இருந்ததால் அந்த வருடங்களில் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கப்படவில்லை. 1978 ம் ஆண்டில் ஒரு புசல் அரிசியின் இறக்குமதி விலை 56 ரூபாவாக இருந்தபோது உற்பத்தியாளருக்கு ஒரு புசலுக்கு 40 ரூபா வழங்கப்பட்டது. 1976 ம் ஆண்டில் உற்பத்தியாளர் மானியம் 12 கோடி 66 லட்சம் ரூபாவாக இருந்தது; 1977 ம் ஆண்டில் மானியத் தொகை 25 கோடி 20 லட்சமாக உயர்ந்தது. (1979 ம் ஆண்டில் இறக்குமதி அரிசியின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருந்தது. 1977 ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை தொன் ஒன்றுக்கு 1,648 ரூபாவாக இருந்தது; ஆனால் 1978 ம் வருடத்தில் அதே காலப் பகுதியில் ஒரு தொன் அரிசியின் இறக்குமதி விலை 3,415 ரூபாவாகவும், 1979 ம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 4,366 ரூபாவாகவும் உயர்ந்தது.)

1973 ம் ஆண்டு முதல் 1979 ம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கான உணவு மானிய விவரம் மேலே உள்ள அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது. அதில் காட்டப்பட்டிருக்கும் அரிசி மானியத்துக்கான தொகை, மேலே விவரிக்கப்பட்ட உற்பத்தியாளர், பாவனையாளர் மான்யங்கள் இரண்டையும் உள்ளடக்கியதாகும்.

1977 ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செலாவணி விகிதங்களில் ஏற்பட்ட மாற்றங்களே ரூபாத் தொகைகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும். 1978 ம் ஆண்டு பெப்ரவரி முதல் மானியங்கள் குறைக்கப்பட்ட போதிலும், செலாவணி விகித மாற்றத்தில் ஏற்பட்ட ரூபாத் தொகை உயர்வின் விளைவாக மொத்த உணவு மானியச் செலவு 50 சத வீதத்தால் அதிகரித்தது. கோதுமை மா மீதான மானியம் 1978 ம் ஆண்டில், 1977 ம் வருடத்தில் இருந்ததை விட சுமார் மூன்று மடங்காக அதிகரித்தது. அதன் காரணமாக மொத்த உணவு மானியத்தில், 31 சத வீதம் கோதுமை மாவுக்காக மட்டுமே செலவிடப்பட்டது. மா விலை உயர்வும், இறக்குமதி செய்யப்பட்ட தொகை அதிகரித்ததுமே அதற்குக் காரணங்களாகும். 1977 ம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 1978 ம் வருடத்தில் கோதுமை மாவின் மொத்த இறக்குமதித் தொகை 79,000 தொன்னால் அதிகரித்தது. அதே வேளை கோதுமை மாவின் விலையும் மெட்றிக் தொன் ஒன்றுக்கு 1977 இல் 1,698 ரூபாவில் இருந்து 1978 ம் வருடத்தில் 3,460 ரூபாவிற்கு உயர்ந்தது; 1979 ம் ஆண்டில் முதல் 9 மாதங்களில் மேலும் 3,654 ரூபாவாக அதிகரித்தது.

1979 ம் ஆண்டில் உணவு மானியத் தொகை முன்னைய வருடத்தை விடக் குறைந்த அளவே அதிகரித்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அந்த வருடத்தில் பிரஸ்தாப தொகை 216 கோடி 30 லட்சம் ரூபாவிலிருந்து 234 கோடி 40 லட்சம் ரூபாவாக மதிகரித்தது. உணவு முத்திரைத் திட்டத்தை அறிமுகம் செய்தது, உணவுப் பொருள்களின் சில்லறை விலைகளை உயர்த்தியது ஆகியனவே உணவு மானியத் தொகை குறைவதற்கு முக்கிய காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு முத்திரைத் திட்டமானது இதுவரை அமுலில் இருந்து வந்த நுகர்வோர் மானிய முறையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்ட ஒன்றாகும்.

இத்திட்டம் குறித்து நிதி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

> உணவு முத்திரைத் திட்டமானது, மக்களில் ஏழைகளாக உள்ளவர்களின் நலன்களுக்கு வசதி செய்ய உத்தரவாதமளிக்கும் அதே வேளையில், மூலவளங்களை முதலீட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் முயற்சிக்கு ஒரு உதாரணமாகவும் விளங்குகின்றது. உணவு மானியத்துக்கு வழங்கக் கூடிய எல்லாப் பொருள்களையும், வருமான வேறுபாடின்றி மக்கள் எல்லாச் சாராருக்கும் வழங்காது, தங்கள் வாழ்க்கைத் தரததை சரிக்கட்டுவதற்கு உதவி தேவைப்படும் சாராருக்கு மட்டுமே மானியத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தத் திட்டம் அமைந்துள்ளது. எங்கள் மக்களின் உடல் நலம் சார்ந்த துறையைப் பேணுவதில் அரசாங்கம் எப்போதும் வெகு அக்கறையும் சலுகையும் காட்டி வருவதோடு, அத்துறையில் நாம் இதுவரை ஈட்டிய தரத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்டுவதற்கு இயன்றளவு முயற்சிகளை மேற்கொண்டும் வருகிறது. அதற்கிணங்கவே, குடும்ப மாதாந்த வருமானம் 300 ரூபாவுக்குக் குறைவாக உள்ள சகலருக்கும் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 30 வருட காலத்திற்கு மேலாக நடைமுறையில் இருந்து வந்த, குறிப்பிட்ட பொருள்களை ஒரு குறிப்பிட்ட அளவில், வருமான வேறுபாடின்றி ஏழைகளுக்கும் பணக்காரருக்கும் உலகச் சந்தை விலைகளுக்கு குறைவான விலைகளில் வழங்கும் முறையில் இருந்து உணவு முத்திரைத் திட்டமானது முற்றிலும் மாறுபட்ட ஒரு முறையாகும். புதிய திட்டமானது, வசதி குறைந்த மக்கள் மட்டும், குறிப்பிட்ட பங்கீட்டுப் பொருள்களை அல்லாது, தெரிவு செய்யப்பட்ட பல பொருள்களில் தமக்கு விரும்பிய பொருள்களை தேர்ந்து எடுப்பதற்கு வசதி செய்கிறது.

உணவு முத்திரைத் திட்டத்துக்கு 1979 ம் ஆண்டில் 50 கோடி ரூபாவும், 1980 ம் ஆண்டில் 100 கோடி ரூபாவும் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் திட்டம் உரிய முறையில் வழிமுறைப்படுத்தப்பட்டதும் நாட்டு மக்களில் சுமார் 50 லட்சம் மக்கள் அதனால் நன்மை அடைவார்கள் என எதிர்ப்பார்க்கப்பட்டது. இப்போது 73 லட்சம் உணவுக் கூப்பன்களும், 18 லட்சம் மண்ணெண்ணெய் கூப்பன்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும், காலப்போக்கில் உணவு முத்திரை பெறத் தகுதியில்லாதவர்களும், அதனைப் பெற வேண்டிய தேவை இல்லாதவர்களும் அதிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இந்த உணவு மானியங்களுக்குப் புறம்பாக, பொதுப் போக்குவரத்து, உரம், மண்ணெண்ணெய் என்பவற்றுக்கும் மானிய முறை அமுலில் உள்ளது. 1980 ஜனவரி நடுப்பகுதியில், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மதிப்பீட்டின்படி, மொத்த மானியத் தொகை 510 கோடி ரூபாவாக இருந்தது. அது பின்வருமாறு அமைந்திருந்தது:

அரிசி, மா, சீனி — ரூ. 180 கோடி, இ. போ. ச. ரயில் — ரூ. 90 கோடி, உணவு முத்திரைத் திட்டம் — ரூ. 120 கோடி, பெற்றோலியம் பொருள்கள் — ரூ. 120 கோடி.

எண்ணெய் விலைகள் உச்சத்துக்கு உயர்ந்து செல்வதால் நாட்டின் சென்மதி நிலுவைத் தொல்லைகள் அளவுக்கதிகமாக உயர்வதோடு, வர்த்தகப் பற்றாக்குறையும் திடுக்கிடும் அளவுக்கு விரிவடைந்து போகிறது. விசேஷ ஒதுக்கு நிதியினைப் பொறுத்து நோக்குமிடத்தில், 1978 ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் 4 கோடி 80 லட்சம் ரூபாவாக இருந்த வர்த்தகப் பற்றாக்குறை, 1979 ம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 28 கோடி ரூபாவாக அதிகரித்ததைக் காண முடிகிறது. இது மட்டுமன்றி, பெற்றோலியம் பொருள்களினதும், ஏனைய பொருள்களினதும் விலை மேலும் ஏறிச் செல்லும் சாத்தியம் இருப்பதால் வர்த்தகப் பற்றாக்குறை மேன்மேலும் அதிகரிக்க இடமுண்டு என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, பாண் என்பவற்றின் விலைகளில் உயர்ச்சிப் போக்கிலான மாற்றங்களை மேற்கொண்டதன் மூலம், அரசாங்கத்தின் உணவு மானியத்தை 65 கோடி ரூபாவால் குறைப்பதற்கான நடவடிக்கை கடந்த பெப்ரவரி 23ம் திகதி எடுக்கப்பட்டது; மானியங்கள் குறித்த ஒரு புதிய கொள்கையாக இதனைக் கருத முடியும். இப்புதிய கொள்கையின் பிரகாரம், இறக்குமதி செய்யப்படும் இப்பொருட்களின் விலைகள் இனிமேல் சர்வதேச விலைகளையொட்டியே அமையும்; அவற்றுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது எவ்வாறிருப்பினும், 'தகுதியுடைய வறியோர்' உணவு முத்திரைகள் மூலம் தொடர்ந்தும் மானியங்களைப் பெற்று வருவர். இந்த உணவு முத்திரைத் திட்டத்துக்கு 1980 ல் 112.5 கோடி ரூபா செலவாகுமென வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு செய்துள்ளது. மானியங்கள் குறித்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் பின்வருமாறு:

| | மானியங்கள் | கோடி ரூபா |
|---|---|---|
| 1. | உணவு மானியம் | — |
| 2. | உணவு முத்திரை | 112.5 |
| 3. | மண்ணெண்ணெய் முத்திரை | 15 |
| 4. | வருமான உதவி | 23 |
| 5. | உரம் | 80 |
| 6. | தேசிய சேமிப்பு வங்கி | 25.8 |
| 7. | தேசிய பால் சபை | 5.3 |
| 8. | தேயிலைக் கொழுந்து — விலை உதவி | 6.5 |
| 9. | இலவச பாடநூல் | 3.2 |
| 10. | நட்டங்களை ஈடு செய்தல் | 20 |
| | | 291.3 |

மொத்த மானியங்களில் 117.6 கோடி ரூபாவை நுகர் பொருளல்லாத மானியமாக கருத முடியும். உரம், தேசிய பால் சபை, தேயிலைக் கொழுந்து என்பவற்றுக்கான மானியங்கள் உற்பத்தி நோக்கிலானவையாகும். தேசிய சேமிப்பு வங்கிக்கான மானியம் மூலவளங்களை நுகர்விலிருந்து முதலீட்டுக்குத் திசை திருப்புவதனை நோக்கமாகக் கொண்டதாகும். எனவே, இவற்றுள் 173.7 கோடி ரூபாவை மட்டுமே நேரடி நுகர்வு மானியமாக கருத முடியும். 1979 ல் இத்தொகை 304.7 கோடி ரூபாவாக இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தககும்.

---

(23ம் பக்கத் தொடர்ச்சி)

படையில் முன்னைய வருடத்தை விடவும், இவ் வருடம் இவ் அதிகரிப்பு 81 சதவீதத்திற்கும் மேலாகவிருந்தது; தென்னஞ் சிரட்டையும், சிரட்டைக் கரியும் இவ் அதிகரிப்பிற்கு பெருமளவு துணை புரிந்தது. தேங்காய்த் துருவலைப் பொறுத்தவரையிலும், 1978 ல் ஏற்றுமதிப் பரிமாணம் 29 சதவீதத்தினாலும், ஏற்றுமதிப் பெறுமானம் 28 சதவீதத்தினாலும் அதிகரித்தது. 1979 ல் இவ் அதிகரிப்பு முறையே 3 சதவீதத்தினாலும், 31 சதவீதத்தினாலும் மாத்திரமே அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம்

# நெல்—முன்னெப்போதும் காணாத அறுவடைகள்

1979 ம் ஆண்டில் நெல் உற்பத்தி முன்னெப்போதும் காணாத தொகையான 9.9 கோடி புசல்களை எட்டுமென்று மதிப்பிடப்படுகிறது; இது 1978 ம் ஆண்டின் சாதனையை விடச் சுமார் 90 லட்சம் புசல் அதிகமாகும்.

1975 ம் ஆண்டிலிருந்து இலங்கையில் நெல் உற்பத்தியில் துலக்கமான வருடாந்த அபிவிருத்தி ஏற்பட்டு வந்துள்ளதென்பது வெளிப்படை. 1978-79 இன் பெரும் போகத்துக்கான நெல் உற்பத்தி 6.68 கோடி புசல்களாயிருக்கையில், 1979 இன் சிறு போகத்துக்கான தொகை இன்னும் கணக்கிடப்படவில்லை. 1979 இன் பெரும் போகத்துக்கான உற்பத்தி இலங்கையில் எந்த ஒரு பெரும் போகத்துக்கும் இதுவரை சாதிக்கப்பட்டுள்ளதைவிட மிக உயர்வானது. இது அப்போகத்துக்கு விவசாய ஆராய்ச்சி - அபிவிருத்தி அமைச்சினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான 6.29 கோடி புசலுக்கு மேல் சுமார் 40 லட்சம் புசல் அதிகமாகும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. 1979 இன் சிறுபோகத்துக்குத் திட்டமிடப்பட்ட இலக்கு 3.26 கோடி புசல்களாகும். இது அண்ணளவாகச் சாதிக்கப்பட்டாலுங்கூட, 1979 ம் ஆண்டுக்கான உற்பத்தி சுமார் 9.9. கோடி புசல்களாக இருக்கும். இது, 1978 ம் ஆண்டுக்கான உற்பத்தியை விடச் சுமார் 10 சதவிகிதம் அதிகம் என்பது மட்டுமல்ல; இலங்கையில் இதுவரை சாதிக்கப்பட்டுள்ளதைவிட மிக உயர்வான நெல் உற்பத்தியாகும்.

1979 ம் ஆண்டு பெரும் போகத்துக்கான நெல் உற்பத்தியான 6.68 கோடி புசல்கள் 1978 ம் ஆண்டுக்குரிய உற்பத்தியைவிட 8 சதவிகிதம் அதிகமாகும். இதற்கிடையில், 1978 ம் ஆண்டு பெரும் போகத்துக்கான உற்பத்தி 1977 ம் ஆண்டின் நேரொத்த காலத்துக்கான உற்பத்தியை விட சுமார் 12 சதவிகிதம் அதிகரித்தது. 1979 ம் ஆண்டில் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கத்துக்கு இரு முக்கிய காரணங்களைக் கூறலாம் — நெற்சாகுபடி செய்யப்பட்ட ஏக்கர் காணியில் ஏற்பட்ட அதிகரிப்பும் ஏக்கரின் விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்புமே அக்காரணங்கள். எனினும், 1978 ம் ஆண்டின் பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட ஏக்கர் காணியுடன் ஒப்பிடுகையில், 1979 ம் ஆண்டின் பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட ஏக்கர் காணியில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறிதளவேயாகும். 1978 ம் ஆண்டின் பெரும் போகத்துக்கு நெற்சாகுபடி செய்யப்பட்ட ஏக்கர் காணி 7 சதவிகிதம் அதிகரித்திருந்த போதிலும், 1979 ம் ஆண்டின் நேரொத்த காலத்துக்கான அதிகரிப்பு 1.6 சதவிகிதம் மட்டுமேயாகும். இதில்கூட நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட ஏக்கர் காணி 1.3 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. 1979 ம் ஆண்டின் பெரும் போகத்தில் 67,375 ஏக்கர் காணியில் விளைச்சல் தவறியதென மதிப்பிடப்பட்டுள்ளது. இது, அப் போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்தப் பரப்பில் சுமார் 4.7 சதவிகிதமாகும். இது, 1978 ம் ஆண்டுக்கான ஏக்கர் காணியை விட அதிகம். இதன்படி, 1979 ம் ஆண்டின் பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட ஏக்கர் காணி கிட்டத்தட்ட அதிகரித்த போதிலும், 1978 ம் ஆண்டின் நேரொத்த போகத்துக்கான ஏக்கர் காணியை விட 0.7 சதவிகிதம் மட்டுமே அதிகமாகும்.

மதிப்பீடுகளின்படி, 1979 ம் ஆண்டின் பெரும் போகம் ஏக்கருக்கு 54.74 புசல் வீதம் சராசரி விளைச்சலைக் கொடுத்துள்ளது. இது, இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய விளைச்சலாகும். இது 1978 ம் ஆண்டின் பெரும் போகத்துக்கான விளைச்சலைவிட 1.7 புசல் அதிகமாயிருக்கையில், 1978 ம் ஆண்டின் பெரும் போகத்துக்குப் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு ஏக்கருக்கு 1.54 புசல் மட்டுமேயாகும். ஓர் ஒப்பியல் பகுப்பு வெளியிடும் விவரம் பின்வருமாறு: 1978 ம் ஆண்டு பெரும் போகத்துக்கான உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பிரதான காரணம் நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து நிச்சயமாகக் கிடைத்த நீர் விநியோகமாகும்; அத்துடன், பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட ஏக்கர் காணியில் ஏற்பட்ட அதிகரிப்பும், குறைந்த அளவுக்கு ஏக்கரின் விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதற்குக் காரணங்களாகும். இதே வேளையில், 1979 ம் ஆண்டின் நேரொத்த போகத்துக்கான உற்பத்தியில் ஏற்பட்ட பெருக்கத்துக்குப் பிரதான காரணம் ஏக்கரின் விளைச்சல் அதிகரித்ததாகும். பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட ஏக்கர் காணியில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதற்கு இலேசாக உதவியது. ஒப்பியல் ரீதியாக நோக்குமிடத்து, 1979 ம் ஆண்டின் பெரும் போகத்தில் உற்பத்திப் பெருக்க விகிதம் 1978 ம் ஆண்டின் விகிதத்தை விடக் குறைவானது. இதற்கும் 1979 ம் ஆண்டின் பெரும் போகத்தில் நெற்சாகுபடி செய்யப்பட்ட ஏக்கர் காணியில் குறைவான விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமென்று கூறலாம்.

1978 ம் ஆண்டில் நெல் உற்பத்தி அதிகரித்ததற்குப் பிரதானமாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட ஏக்கர் காணி அதிகரித்ததும், ஏக்கரின் சராசரி விளைச்சல் அதிகரித்ததும், தாபனக் கடன்களை உத்தரவாதப்படுத்துவதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதும், உரங்களின் உபயோகம் 40 சதவிகிதம் அதிகரித்ததும், உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டதும் காரணங்களாகும். மேலும், அனுகூலமான வெப்பதட்ப நிலைமைகள் நிலவியமையும் இவ்வருடம் உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவியது.

மிக இலகுவான நிபந்தனைகள் மீது கடன்கள் வழங்கப்பட்டதனால், 1978 ம் ஆணடில் வழங்கப்பட்ட தாபனக் கடன்களின் தொகை 9.9. கோடி ரூபாவிலிருந்து 45.2 கோடி ரூபாவுக்கு அதிகரித்தது. இந்தக் கடன்களின் அதிகரிப்பு ஓரளவுக்குச் சாகுபடி செய்யப்படும் ஏக்கர் காணி அதிகரிப்பதற்கும், இரசாயன உரங்களினதும் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களினதும் அதிகரித்த உபயோகத்துக்கும் அடிகோலியது. இதன் இறுதிப் பெறுபேறாக உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. எனினும், கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைத் தவிர்க்கும் உபாயங்கள் கையாள

ப்பட்டமையால், 1979 ம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் தொகை பெருமளவு குறைந்தது. உதாரணமாக, 1978 ம் ஆண்டில் நெற்சாகுபடிக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 73 சதவிகிதத்தை அல்லது 33 கோடி ரூபாவை வழங்கிய மக்கள் வங்கி 1979 ம் ஆண்டில் நெற்சாகுபடிக்காக 2.2 கோடி ரூபா கடன் மட்டுமே வழங்கியது. (1978 ம் ஆண்டுக்கு விடுவிக்கப்பட்ட கடன்களில், 1977-78 பெரும் போகத்துக்கு வழங்கப்பட்ட 1.7 கோடி ரூபாவில் 16.5 சதவிகிதத்தையும், 1978 சிறு போகத்துக்கு வழங்கப்பட்ட 1.6 கோடி ரூபாவில் 47.1 சத விகிதத்தையும மட்டுமே மக்கள் வங்கியால் மீட்க முடிந்தது.)

இலங்கையில் நடைபெறும் நெற்சாகுபடியில் பெரும் பகுதிக்கு அஃதாவது மொத்த ஏக்கர் காணியில் சுமார் 60 சதவிகிதத்துக்கான நீர், நீர்ப்பாசன முறை மூலம் வழங்கப்படுகையில், எஞ்சிய பகுதிக்கான நீர் மழை நீரிலிருந்து கிடைக்கிறது. 1976 ம் ஆண்டிலிருந்து நெற்சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட ஏக்கர் காணியின் பரப்பு ஒவ்வொரு போகத்திலும் அதிகரித்துள்ளது. இதில்கூட, நீர்ப்பாசன முறை மூலம் சாகுபடி செய்யப்படும் காணிகளிலேயே பெரும் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறு நீர்ப்பாசன முறை மூலம் சாகுபடி செய்யப்படும் ஓர் ஏக்கர் காணி, மழை நீர் பெறும் ஓர் ஏக்கர் நெற்காணியை விட ஏறக்குறைய 10 புசல் அதிக விளைச்சலைத் தருவதால், பெரிய நீர்ப்பாசன முறைகள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ஏறக்குறைய 20 புசல் அதிக விளைச்சலைப் பெறுவது சாத்தியமாகும். இம்முறைகளில் ஒவ்வொன்றின் மூலமும் ஓர் ஏக்கரின் விளைச்சல் 1976 ம் ஆண்டிலிருந்து குறையாமல் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. இலங்கையில் நெற்சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய காணியின் பரப்பு வரையறுக்கப்பட்டதயிருப்பதால், செறிந்த சாகுபடி முறைகள் மூலம் ஏக்கரின் விளைச்சலை அதிகரிப்பது ஜீவாதாரமாகும். 1978 ம் ஆண்டில் உற்பத்தி அதிகரிப்பதற்கு உதவிய ஒரு காரணி யாதெனில், மகாவலித் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் கிடைத்த நீர் வசதியின் பயனுகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட காணிகள் அதிகரித்ததாகும். மேலும், தற்போதுள்ள 132,000 ஏக்கர் வயல்களுடன், 20,700 ஏக்கர் புதிய காணிகளும் திசை திருப்பிய மகாவலி நீரினுல் இதுவரை பயனடைந்துள்ளன.

1978 ம் ஆண்டில், உத்தரவாத விலைத்திட்டப்படி, நெல் சந்தைப்படுத்தும் சபை இதுவரை பதிவாகாத ஆகக்கூடிய தொகை நெல்லைக் கொள்வனவு செய்தது. அஃதாவது, 1978 ம் ஆண்டில் நெல் அறுவடையில் 3.2 கோடி புசல்களை அல்லது 35 சதவிகிதத்தைக் கொள்வனவு செய்தது. இது 1971 ம் ஆண்டுக்குப்பின் கொள்வனவு செய்யப்பட்ட மிக உயர்ந்த தொகையாகும். அத்துடன், 1977 ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதைவிட 75 லட்சம் புசல் அல்லது 32 சதவிகிதம் அதிகமாகும். அமோக அறுவடை, 1977 நவம்பரில் நெல்லின் உத்தரவாதவிலை புசல் ஒன்று 33 ரூபாவிலிருந்து 40 ரூபாவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டமை, நெல் கொள்வனவுக்கு விதிக்கப்பட்ட குறைந்தபட்ச தரங்கள் தளர்த்தப்பட்டமை ஆகிய இவையெல்லாம் 1978 ம் ஆண்டின் கொள்வனவை அதிகரித்தன. வறண்ட பிரதேசத்திலிருந்தே குறிப்பாக அனுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்தே இக்கொள்வனவு நடைபெற்றது.

1979 ம் ஆண்டின் பெரும் போகத்தின் போது, நெல் சந்தைப்படுத்தும் சபை 2.2. கோடி புசல்களை அல்லது பெரும் போகத்தின் மொத்த உற்பத்தியில் 33 சதவிகிதத்தைக் கொள்வனவு செய்துள்ளது. ஆனுல், 1978 ம்

**நெல்—விதைக்கப்பட்ட காணியின் பரப்பு—அறுவடை செய்யப்பட்ட காணியின் பரப்பு ஏக்கருக்குச் சராசரி விளைச்சலும் மொத்த உற்பத்தியும்**

| வருடம் | விதைக்கப்பட்ட பரப்பு (அண்ணளவாக) தொகை ,000 ஏக்கர் | சதவிகித வித்தியாசம் | அறுவடை செய்யப்பட்ட பரப்பு (அண்ணளவாக) தொகை ,000 ஏக்கர் | சதவிகித வித்தியாசம் | ஏக்கருக்குச் சராசரி புஷல்கள் | மொத்த உற்பத்தி 10 லட்சம் புஷல்கள் | மொத்த உற்பத்தி சதவிகித வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1972 .. .. .. | 1795 | | 1579 | | 46.87 | 62.9 | |
| 1973 .. .. .. | 1792 | — 0.2 | 1660 | 5.13 | 44.58 | 62.9 | 0.0 |
| 1974 .. .. .. | 2038 | 13.7 | 1969 | 18.6 | 45.65 | 76.8 | 22.1 |
| 1975 .. .. .. | 1719 | — 15.6 | 1476 | — 25.0 | 44.04 | 55.3 | — 28.0 |
| 75-76 பெரும்போகம் .. .. | 1149 | | 1052 | | 47.17 | 42.3 | |
| 76-சிறுபோகம் .. .. .. | 642 | | 518 | | 40.30 | 17.7 | |
| 1976 .. .. .. | 1789 | 4.1 | 1570 | 6.4 | 44.91 | 60.0 | 8.5 |
| 76-77 பெரும்போகம் .. .. | 1329 | | 1250 | | 51.56 | 54.8 | |
| 77-சிறுபோகம் .. .. .. | 717 | | 683 | | 43.98 | 25.6 | |
| 1977 .. .. .. | 2046 | 14.4 | 1933 | 23.1 | 48.92 | 80.4 | 33.9 |
| 77-78 பெரும் போகம் .. .. | 1421 | | 1366 | | 53.2 | 61.6 | |
| 78-சிறு போகம் .. .. .. | 744 | 6.9 | 711 | 9.2 | 46.61 | 29.0 | 12.4) |
| 1978 .. .. .. | 2165 | 5.8 | 2077 | 7.5 | 50.70 | 90.6 | 12.7 |
| 78-79 பெரும் போகம் .. .. | 1444 | 1.6 | 1376 | 0.7 | 54.70 | 66.8 | 8.3) |

ஆதாரம்: குடிஜன மதிப்பு — புள்ளிவிவரத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெல் உற்பத்தியும் உத்தரவாத விலைத் திட்டக் கொள்வனவுகளும்

| | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் உற்பத்தி ,000 புசல் கணக்கில் .. | 62,901 | 62,900 | 76,794 | 55,315 | 60,034 | 80,387 | 90,605 | 66,764 |
| நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவுகள் ,000 புசல் கணக்கில் .. .. | 26,354 | 22,914 | 20,873 | 11,579 | 12,875 | 24,555 | 32,347 | 22,253 |
| மொத்த உற்பத்தியில் உத்தரவாத விலைக் கொள்வனவின் சதவிகிதம் .. .. | 41.90 | 36.43 | 27.18 | 20.52 | 21.36 | 30.55 | 35.70 | 33.33 |

ஆதாரங்கள்: குடிஜனமதிப்பு - புள்ளிவிவரத் திணைக்களமும் நெல் சந்தைப்படுத்தும் சபையும்.

ஆண்டு பெரும் போகத்தின் போது நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்த 2.4 கோடி புசல்களுடன் (மொத்த உற்பத்தியில் 39 சதவிகிதத்துடன்) ஒப்பிடுகையில், 1979 ம் ஆண்டுக்கான அதன் கொள்வனவுகளில் எந்த விருத்தியையும் நாம் காணவில்லை.

நெல் உற்பத்திப் பெருக்கம் தொடர்பாகக் கோதுமை மாவினதும் அரிசியினதும் இறக்குமதி முறைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கவனிக்குமிடத்து, பொதுவாக 1979 ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கு (அரிசி இறக்குமதிகள் 21 சதவிகிதம் அதிகரித்திருந்த போதிலும்) இறக்குமதிகள் 1978 ம் ஆண்டின் நேரொத்த காலத்துக்குரிய இறக்குமதிகளைவிட அதிகரிக்கவில்லை.

மா இறக்குமதிகள் 1976 ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன; 1978 ம் ஆண்டின் முதல் பாதிக்கு மட்டும், 1977 ம் ஆண்டின் நேரொத்த காலத்தைவிட 120 தொன் அல்லது ஏறக்குறைய 33 சதவிகிதம் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனினும், 1979 ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கான இறக்குமதிகளில், 1978 ம் ஆண்டின் அதே காலத்துக்குரிய இறக்குமதிகளுக்கு எதிராக ஏறக்குறைய 26.4 சதவிகித வீழ்ச்சி காணப்பட்டது. என்றாலும், 1978 ம் ஆண்டில், மா இறக்குமதிகள் ஏறக்குறைய 15 சதவிகிதம் அதிகரித்த அதே வேளையில், அரிசி இறக்குமதிகளில் ஏறக்குறைய 70 சதவிகித வீழ்ச்சி காணப்பட்டது. (அஃதாவது, 1977 ம் ஆண்டின் இறக்குமதியான 526,643 தொன்கள் 1978 ம் ஆண்டில் 158,856 தொன்களாகக் குறைந்தன.) எனினும், 1978 ம் ஆண்டில் மாவுக்கான உதவி மான்யத் தொகையில் செங்குத்தான அதிகரிப்பு — 66.4 கோடி ரூபா அதிகரிப்பு — காணப்பட்டது. இது மொத்த உணவு மானியத் தொகையில் சுமார் 31 சதவிகிதமாகும். இந்த அதிகரிப்புக்கு 1977 ம் வருட நாணயப் பரிவர்த்தனைச் சீர்திருத்தங்களுக்குப்பின் இறக்குமதி செய்யப்படும் மாவின் ரூபா விலை அதிகரித்ததே பிரதான காரணமாகும். 1978 ம் ஆண்டில் மொத்த இறக்குமதிகளில் 79,081 தொன்கள் அதிகரித்தன. எனினும், இறக்குமதிகளின் மொத்தச் செலவில் 119.6 கோடி ரூபா அதிகரித்து, மொத்தச் செலவு 208.6 கோடி ரூபாவுக்கு உயர்ந்தது. இதற்கு 1977 ம் ஆண்டில் மெட்ரிக் தொன் ஒன்று 1,698 ரூபாவாயிருந்த விலை 1978 ம் ஆண்டில் 3,460 ரூபாவாக அதிகரித்ததே காரணமாகும்.

## சீனி விலை அதிகரிப்பு

சமீப மாதங்களில் உலகச் சந்தைகளிலே சீனியின் விலைகள் செங்குத்தாக மேல் நோக்கி உயர்ந்து வரும் போக்கு காணப்பட்டது. இப்போக்கின் தாக்கம் இலங்கையிலும் உணரப்பட்டது. 1978 ம் ஆண்டின்போது மெட்ரிக் தொன் ஒன்று சராசரியாக 244.7 அமெரிக்க டாலராயிருந்த சீனி விலைகள் 1980 ம் ஆண்டு ஜனவரியில் 470.6 அமெரிக்க டாலர் வரை உயர்ந்தன. ரூபாக் கணக்கில் சொல்வதானால், 1979 ம் ஆண்டில் தொன் ஒன்று 3,997 ரூபாவாயிருந்த சீனி விலைகள் 1980 ஜனவரியில் 6,467 ரூபாவுக்கு உயர்ந்துவிட்டன. இது கிட்டத்தட்ட 92 சதவிகித அதிகரிப்பாகும். இதனால் 1976 ம் ஆண்டில் 12.8 கோடி ரூபாவாயிருந்த இறக்குமதிகளின் பெறுமதி 1977 ம் ஆண்டில் 18.5 கோடி ரூபாவுக்கும், 1978 ம் ஆண்டில் 59.5 .கோடி ரூபாவுக்கும், 1979 ம் ஆண்டில் 98.1 கோடி ரூபாவுக்கும் அதிகரித்துவிட்டது. (1977 ம் ஆண்டுக்குப் பிறகு நாணய மதிப்பு குறைக்கப்பட்ட போதிலும், இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பெருமளவான அதிகரிப்பெனக் கருதமுடியும்.)

வணிகப் பண்டங்களில் நடைபெற்ற சட்டா பேர விலைகள் (சட்டா பேரம் என்பது துணிவை அடிப்படையாகக் கொண்ட சாகச வியாபாரம்) பொங்கியெழும் ஏறி திரைகளைப் போல் தொடர்ந்து மேல் நோக்கி உயர்ந்து கொண்டேயிருந்ததால், பெப்ரவரி மாத அளவில் உலக சீனி விலைகள் 1975 ம் ஆண்டுக்குப் பின்னர் மிக உயர்ந்த மட்டத்தை அடைந்துவிட்டன. பெப்ரவரி

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

| | ஜனவரி—செப்டம்பர் 1978 | ஜனவரி—செப்டம்பர் 1979 |
|---|---|---|
| **அரிசி** | | |
| அளவு-தொன்கள் .. .. | 133,873 | 162,137 |
| பெறுமதி-மில்லியன் ரூபா .. | 459.4 | 706.5 |
| வி.கே. விலை-ரூபா-தொன் .. | 3,431 | 4,357 |
| **கோதுமை மா** | | |
| அளவு-தொன்கள் .. .. | 512,717 | 377,5 |
| பெறுமதி-மில்லியன் ரூபா .. | 1720.3 | 1330.466 |
| வி.கே. விலை-ரூபா-தொன் .. | 3,355 | 3,524 |

ஆதாரம்: உணவுக் கமிஷனரின் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்முக நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள்

## தீர்வு காணக் கோரி உலக வங்கிக்கு அழைப்பு

— ரொனீ டீ மெல்

இந்த வருடம் அக்டோபர் மாதம் யுகோஸ்லாவியாவில் நடைபெற்ற உலக வங்கியினதும் சர்வதேச நாணய சபையினதும் வருடாந்த மகாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இலங்கையின் நிதி அமைச்சர் திரு. ரொனி டி. மெல், வளர்முக நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற கோரிக்கையை உலகின் நிதி சம்பந்தமான பிரதான கூட்டத்தில் விடுத்தார். வளர்முக நாடுகள் குறிப்பாக எண்ணெய் உற்பத்தி செய்யாத நாடுகள் — செலாவணி விகிதங்களின் தளம்பல், வர்த்தக நிலை குன்றல், ஆகிய பாதிப்புகளுக்கு ஆளாகின்றன என்றும், அந்த நாடுகள் எந்த விதத்திலும் பொறுப்பாளிகளல்லாததும், அவற்றின் கட்டுப்பாட்டில் இல்லாததுமான வெளிப்புறக் காரணிகளாலேயே அவை இவ்வாறு தாக்கமுறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

வளர்முக நாடுகளின் கடன் பளு அதிகரித்துக் கொண்டு போவதையும், செலாவணி விகிதங்கள் ஏற்றமும் வீழ்ச்சியும் கண்டு தளம்பிக் கொண்டிருப்பதையும், அந்த நாடுகளின் தனிநபர் வருமானம் ஸ்தம்பித நிலையை அடையக்கூடிய ஆபத்தையும் அவை எதிர்நோக்கும் மற்றும் கஷ்டங்களையும் அவர் விவரித்துச் சுட்டிக் காட்டி மாநாட்டின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

செலாவணி விகிதங்கள் சம்பந்தமாக மேலும் அதிக அளவில் உறுதிவாய்ந்த கண்காணிப்புச் செலுத்தப்பட வேண்டும் என்றும், மூலதன முதலீட்டைப் பொறுத்த மட்டில் மீண்டும் மீண்டும் நிதி உதவி வழங்குவதை விடுத்து, முதலீட்டை புதிய வழியில் திசை திருப்ப வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர்.

சர்வதேச நாணய சபையின் ஒழுங்கு விதிகள் துரித நடவடிக்கையையே இலக்காகக் கொண்டு அமைய வேண்டும் என்றும், வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் சரி, வளர்முக நாடுகளிலும் சரி அமைப்பு முறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை உலக சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டிய காலகட்டம் வந்து விட்டது என்றும் அது தவிர்ந்த ஏனைய நிவாரணங்கள் வெறும் கண்துடைப்பாகவே முடியும் என்றும் அவர் வலியுறுத்தினர்.

பொருளியல் வளர்ச்சி விகிதங்கள் குறைந்து கொண்டு வருவதும், வேலையற்றோர் தொகை, பணவீக்கம் என்பன அதிகரித்து வருவதும் இப்போது கைத்தொழில் நாடுகளில் வழமையான இயல்புகளாகி விட்டன. கூட்டிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நாம் அடைந்து வந்த சுமாரான முன்னேற்றங்கூட செலாவணி விகிதங்களின் ஸ்திரமற்ற தன்மை எரிபொருள் சம்பந்தமாக இப்போது எழுந்துள்ள பிரச்சினைகள் என்பனவற்றால் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நாடுகள் யாவும் ஒன்று மற்றொன்றின் உதவியில் தங்கியிருக்கும் நிலையிலுள்ள இந்த யுகத்தில், வளர்முக நாடுகளின் நிலை, இப்போதைய கட்டத்தில் மேலும் மோசமடைந்துள்ளது. வளர்முக நாடுகளானவை தாம் ஒரு குழுவாக நின்று கைத்தொழில் நாடுகளை விடக் கூடிய பொருளியல் வளர்ச்சி விகிதங்களைக் கண்ட போதிலும் தமது வரவு - செலவின் நடைமுறைக்கணக்கில் பெருந்தொகை துண்டு விழும் நிலையிலிருந்து கொண்டே அவ்வாறு செய்ய முடிகிறது. 1977 ம் ஆண்டில் 2100 கோடி டாலராகவும், 1978 ம் ஆண்டில் 3200 கோடி டாலராகவும் இருந்த வளர்முக நாடுகளின் கூட்டுத் துண்டுவிழுதல் இந்த வருடத்தில் (1979இல) 4700 கோடி டாலராகவும், அடுத்த வருடத்தில் (1980 இல்) 5000 கோடி டாலராகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இந்த துண்டு விழுதல்கள் காலப்போக்கில் சரி செய்யப்பட்டு விடுவதுடது, அதுவும் அனேகமாக, வங்கிக் கடன்கள் மூலமே அவ்வாறு செய்யப்படுகிறது. நடைமுறைக் கணக்கில் துண்டு விழும் தொகையை வங்கிக் கடன்மூலம் சரிசெய்வதனால் ஏற்படும் விளைவுகள் மட்டுப்படுத்தபட்டவையாக உள்ளன. கடன்வகைகள் குறைந்த காலத்தவணையில் திரும்பச் செலுத்தப்பட வேண்டியவையாக உள்ள அதே வேளையில், அபிவிருத்திப் பிரச்சினைகள நீண்ட காலத்துக்கு உரியவையாக உள்ளன. பெறப்படும் கடன்வகைகளுக்கு சர்வதேசச் சந்தை வீதங்களில் வட்டி செலுத்தப்பட வேண்டி இருப்பதால், கைத்தொழில் நாடுகளின் பணவீக்கத்துக்கு எதிரான கொள்கைகளால் வட்டிவீதங்கள் அதிகரிக்கின்றன. அதன் பலனாக கடன் பெறுவது பெரும் செலவுத்தாமாகவே முடிகிறது. இவ்வாறான பல காரணங்களால், வளர்முக நாடுகளுக்கான கடன் சேவை ஒரு பளுமிக்கக் காரியமாக அமைந்து விடுகிறது.

எனவே, பொருளியல், நிதிக் கொள்கைகளில் மிக விரைவில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தாவிடில், மற்றும் பல பெரும் கஷ்டங்களை நாம் எதிர்நோக்க வேண்டி வரும் என்பது மிகவும் தெளிவானதாகும். உலகப் பொருளியலானது, குறைந்த வளர்ச்சி, வேலையில்லாமை, பணவீக்கம், நாணய, நிதித்துறைகளில் ஸ்திரமற்ற நிலைமை என்ற விஷவட்டத்துக்குள் சிக்கித் தவிக்க நேரிடும். குறிப்பாக, வளர்முக நாடுகள் அண்மைக்காலத்தில் நாம் கண்ட தேவைக்குக் குறைந்த வளர்ச்சி மட்டங்களைக் கூட எட்டிப்பிடிக்க முடியாமற் போகும். அது மட்டுமன்றி, அவற்றின் தனி நபர் வருமான வளர்ச்சி தடைப்பட்டு ஸ்தம்பித நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலையும் வரக்கூடும். வளர்ச்சி அடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் பொருளியல் அமைப்பு முறைகளில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதை சர்வ தேசங்களும் ஏற்றுக்கொள்ளாவிடில் ஏனைய நிவாரண நடவடிக்கைகள் வெறும் கணதுடைப்பாக முடியுமோ என நான் அச்சம் கொள்கிறேன்.

இந்தச் சர்வதேச நிலைகளால் இலங்கையில் பாரதூரமான தாக்கங்கள் ஏற்பட்டன. சீரறுந்து போயுள்ள எமது பொருளாதாரத்தைப் புனரமைத்துக் கட்டி எழுப்பவும், சுய வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கும் என இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய நடவடிக்கைகள் பற்றிய உள்நோக்கினை, இதற்கு முந்திய இரண்டு வருடங்

களாக இந்தச் சபையினருக்குத் தெரிவித்திருக்கிறேன். 1940 ம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பாவனையாளர் மானியங்கள் சம்பந்தமாகக் கடினமான முறைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலமும், தீவிரமான நாணயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலமும், உள்நாட்டுச் சேமிப்பில் குறிப்பிடக்கூடிய தொகை முதலீட்டுக்கும், அபிவிருத்திக்கும் திரட்டப்பட்டது. செனமதி நிலுவைகளைக் குறைப்பதற்காக, காத்திரமான முகாமைத்துவக் கொள்கைகளும், யதார்த்தமான விலைகளும் உரிய ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் நிறைப்படுத்தப்பட்டன. அவற்றின் விளைவாக கடந்த வருடத்தில் எமது வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதமாக உயர்ந்தது. அது கடந்த ஐந்து வருட காலத்தினதும் சராசரி வளர்ச்சி விகிதத்தின் இரட்டிப்பையும் விடக் கூடுதலானதாகும். தேசிய மொத்த உற்பத்தியில் முதலீட்டு விகிதம் உயர்ந்தது. 1977 ம் ஆண்டில் 15 ஆக இருந்த முதலீட்டு விகிதம் 1978 ம் ஆண்டில் 20 ஆக உயர்ந்தது, அத்தோடு உள்நாட்டு சேமிப்பு 15 % எல்லையை அடைந்தது.

நீண்டகாலமாக மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை ரத்துச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது எழுந்த கஷ்டங்களை இங்கு விளங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றே நினைக்கிறேன். இலங்கையில் பதவி வகித்த எந்த அரசாங்கத்துக்கும் இத்தகைய முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய துணிவு இருக்கவில்லை. ஆனால், நாங்கள் அவற்றை மேற்கொண்டோம். அவ்வாறான முடிவுகளைச் செய்த பின்னர், இப்போது எழுந்துள்ள சர்வதேசச் சூழ்நிலைகளைப் பொறுத்தவரை நாம் உதவியற்ற வெறும் பார்வையாளராகி விட்டோம். இப்போதைய சர்வதேசச் சூழ்நிலைகளானவை சென்மதி நிலுவைகள், உள்நாட்டு முதலீடு, வளர்ச்சி பல்வேறு சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு, எங்கள சேமிப்பு விகிதத்தையும் அரைவாசியாகக் குறைத்துவிடும். எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உலக நிகழ்ச்சிகளால் ஒருவரின் முயற்சி இவ்விதம் பலனற்றுப் போவதென்றால் அது விரக்தி தரக்கூடிய ஒன்றாகும்.

கடந்த பல வருடங்களாக, ஒவ்வொரு வருடத்திலும், சென்மதி நிலுவைகளை சரி செய்வதிலேயே எமது கவனத்தைப் பிரதானமாகச் செலுத்தினோம். நாணயச் சபையின் இப்போதைய திருத்த விதி முன்னர் இருந்த சமனற்ற நிலையை நீக்கி, சென்மதி நிலுவையைச் சரி செய்வதென்ற சுமையை, நிதிப்பற்றாக்குறையான நாடுகளிடமும், மேலதிக நிதியுள்ள நாடுகளிடமும் பகிர்ந்தளிப்பதற்கு வழி செய்கிறது. திருத்தப்பட்ட விதியின் உண்மையான நோக்கமும், தன்மையும் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் அதனை அமுல் செய்தால் மட்டுமே அதனால் உரிய விரும்பிய பயனை அடையலாம். மேலதிக நிதி வளத்தைக் கைத்தொழில் நாடுகள் மத்தியிலேயே மீண்டும் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையால் சென்மதி நிலுவைகளை உரிய முறையில் சரி செய்வது அரிதாகவே முடியும். அதைவிட வளர்முக நாடுகளின் சென்மதிக் கொடுப்பனவுகளைச் சீர்செய்யக்கூடிய நடவடிக்கையையே நாம் எதிர்பார்க்கிறோம்.

செலாவணி விகிதங்களைக் கண்காணிப்பதிலும் மேலும் மிக உறுதியாக நடந்து கொள்ள வேண்டிய நல்ல சந்தர்ப்பம் நாணய சபைக்குக் கிடைத்துள்ளது. செலாவணி விகிதங்களிலும், அவற்றுடன் சார்ந்த விலைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், நடைமுறைக் கணக்கு செனமதிகளைச் சரி செய்யும் வேகம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. கைத்தொழில் நாடுகள் மத்தியில் செலாவணி விகிதங்கள் வளம்பல் நிலையில் இருப்பின், வளர்முக நாடுகள் உரிய செலாவணி விகித மட்டங்களை அடைகதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன என்ற நிலையே இருந்து வருகிறது. அது மட்டுமன்றி நிதி முகாமைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் கஷ்டமாகி விடுகிறது. செலாவணி விகிதங்களை சரியான மட்டத்தில் வைத்திருக்க முடியாத காரணத்தினால் வளர்முக நாடுகள் வைத்திருக்கும் விசேஷ ஒதுக்கு மூலதனங்களின் மதிப்பு வெகுவாகக் குறைந்து போயிற்று.

எண்ணெய் உற்பத்தி செய்யாத வளர்முக நாடுகளின் வரவு-செலவில் துண்டு விழுதலைப் பெருமளவில் பிரதிபலிக்கும் பல வெளிக் காரணிகளுக்கு அந்த நாடுகள் எந்த விதத்திலும் பொறுப்பற்றவை என்பது மிகத் தெளிவானதாகும். எண்ணெய் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அதிக விலை கொடுக்க வேண்டி இருப்பதால் ஏற்படும் வர்த்தக விளைவுகள் சம்பந்தமாக நான் ஏற்கனவே இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஏற்பட்டு வரும் பணச்சுருக்கமும், பணப் பாதுகாப்பு வளர்ச்சியும் வளர்முக நாடுகளின் ஏற்றுமதியைப் பெருமளவில் பாதித்து விட்டன. வெளிநாட்டுச் செனமதிகளைச் சீர்செய்வதற்கு செலவாணி விகிதக் கொள்கைகளில் பெருமளவில் தங்கியிருக்கும் நிலைமை வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், பணத்தை அதிகம் செலவிடாமல் பாதுகாக்கும் நடவடிக்கைகளோ, விலைமுறைகளை நடைமுறைப்படுத்த வடாது தடுப்பதன் மூலம், செலாவணி விகிதக் கொள்கைகள் தரக்கூடிய நன்மைகளைத் தொடர்ந்தும் அள்ளிச்சென்று விடுகின்றன.

சென்மதி நிலுவைகளைச் சரி செய்வதற்கு அர்த்தமுள்ள தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால், பலவகைப்பட்ட நிதி நிறுவனங்களின் கொள்கைகளை வகுக்கும் போது முன் சொன்ன விஷயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். உடனடியாகப் பின்வரும் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்வதேச நாணய சபையின் எண்ணெய் வசதி நிதி மறுசீரமைக்கப்பட வேண்டும் அல்லது மாற்று நடவடிக்கையாக புதிய நிதி ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த நிதியிலிருந்து கடன் பெறுவதற்கான நிபந்தனைகள், முதலாவது ஒதுக்கு நிதியிலிருந்து பணம் பெறுவதற்கான நிபந்தனைகளை விடக் கடுமையானவையாக இருக்கக் கூடாது. பெறப்படும் பணத்தைத் திரும்பக் கொடுப்பதற்கான ஆகக் குறைந்த கால அவகாசம் 10 வருடங்களாக இருக்க வேண்டும். இந்த நிதியிலிருந்து பெறப்படும் கடனுக்கான வட்டியை, மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள், வட்டி மானியக் கணக்குமுறை மூலம் கழிப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

நாணய சபை அங்கத்தவர்களின் பொருளாதார முன்னுரிமை நடவடிக்கைகள் பற்றியும், அவர்களின் சென்மதி நிலுவைப் பிரச்

சினைகளுக்கான காரணங்கள் குறித்தும் உரிய கவனம் செலுத்தப்படும் என்று சபையின் நிபந்தனை நடைமுறை விதிகளில் வகுக்கப்பட்டுள்ளது. எனவே, உதவிகள் சம்பந்தமான திட்டங்களானவை, மேற்சொன்ன விஷயங்கள் குறித்துக் கவனம் செலுத்துவதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் இனங்கண்டு கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். ஏற்றுமதியில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நிலையை ஈடு செய்வதற்காக வழங்கப்படும் நிதியிலிருந்து, அங்கத்தவர் ஒருவர் வருடாந்தம் பெறக்கூடிய பணக் கோட்டாவை 100 சதவீதத்தால் அதிகரிப்பது என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முடிவை வரவேற்கிறோம். ஆனால், ஏற்றுமதி வீழ்ச்சி கண்டால் மட்டுமே பிரஸ்தாப நிதியிலிருந்து இப்போது பணம் பெறக்கூடியதாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இறக்குமதி ஏற்றத்தாழ்வு நிலையின்போதும், வர்த்தக ஒப்பந்தங்களை சரிவரக் கடைப்பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போதும் வளர்முக நாடுகள் மேற்சொன்ன நிதியிலிருந்து பணம் பெறுவதற்கு வகை செய்யப்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

விசேஷ தேவைகளுக்காக திட்டக் கடன்களை வழங்குவதனை உலக வங்கி அண்மையில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியதனையும் நாம் வரவேற்கிறோம். 1971 ம் ஆண்டளவில் திட்டக் கடன்கள் 10 சதவீதமே வழங்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்ட போதிலும், வழங்கப்படும் கடன் தொகை அதைவிடக் குறைந்துவிட்டது. விஷேசமான தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் மட்டுமே திட்டக்கடனை வழங்குவதற்கு வங்கி நடைமுறை விதிகள் அனுமதிக்கின்றன. அண்மையில் ஏற்பட்டுள்ள சர்வதேசச் சூழ்நிலைகளையும் கடன் வழங்குவதற்குரிய காரணிகளுக்குள் சேர்த்துக்கொள்ள முடியும் என நான் கருதுகின்றேன். சென்மதி நிலுவைப் பிரச்சினை எடுத்துவரும் பயங்கரத் தோற்றமும், உள்நாட்டுச் சேமிப்புகள் தேய்ந்துபோதலும் திட்டக்கடன் வரையறை எல்லையை 25 சதவீதத்தால் புதுப்பிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன. அதைவிட முக்கியம் என்னவெனில் ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். முழுதார்ந்த முன்னுரிமைகளைத் தெரிந்து கொண்டதும் திட்டக் கடன்களை விரைவில் வழங்கிவிட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் கடன் வழங்குவதற்கான முழுதார்ந்த விகிதங்களை உயர்த்தவும் முடியும்

இதே வேளையில் உள்நாட்டுச் செலவினத்துக்கு நிதி வழங்குவதில் வங்கி இதுவரை எவ்வாறு நடந்து கொ டது என்பதனை கோணத்தில் நோக்க வேண்டும். எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு வளர்ந்துள்ள பிரச்சினைகள உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டும் எமது முயற்சியை குன்றச் செய்து வருகின்றன. நாட்டு மக்களில் மிகஏழைகளாக உள்ளவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்காக வழங்கும் கடன தொகையும் அதிகரித்து வருகிறது பிரஸ்தாப திட்டங்களுக்கு உரிய உள்நாட்டுச் செலவினப் பங்கும் அதிகமானதேயாகும். எனவே உள்ளக மூலதனத்தோடு சேர்த்துக் கொள்ளுவதற்கு அதிக உள்நாட்டுச் செலவினப் பங்கும் தேவைப்படுகிறது.

வங்கி மேற்கொண்டுவரும் கூட்டுநிதி வழங்கும் முறையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய இரு அம்சங்கள் உள்ளன. ஏற்பாடான திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் கூட்டுநிதி முறையில் வேறு ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டுவிட்டன எனபதற்காக, பிரஸ்தாப திட்டங்களுக்குத் தான் வழங்க ஒப்புக்கொண்ட ஒதுக்கீட்டைக் குறைத்துக் கொள்ளாது, ஒடவொரு திட்டத்துக்கும் தொடர்ந்தும் உலகவங்கி நிதி வழங்க வேண்டும். இரண்டாவதாக, கூட்டுநிதி வழங்கும் முறையானது செலவுச் சுமையை பகிர்ந்து ஏற்றுக்கொள்வது என்பதாகும். எனவே, குறிப்பிட்ட திட்டமொன்றுக்கு மதிப்பீடு செய்யப்பட்டதைவிட அதிக பணம் செலவாகி விட்டால் அல்லது வேறு வகையில் அதிகரித்தால் அந்த மேலதிக செலவினம் முழுவதையும், சம்பந்தப்பட்ட நாடும், ஏனைய கூட்டு நிதியாளர்களும் மட்டுமே பொறுப்பேற்பதற்கு விடக்கூடாது, இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உபரி மூலதனம் உள்ள நாடுகளிடமிருந்து மிகப் பரந்த அளவில் கூட்டு நிதிக்கு உதவி தருமாறு வங்கி கோர வேண்டும். இந்தப் புதிய ஏற்பாடு இப்போது வழமையாக வழங்கப்படும் இருதரப்பு, பலதரப்பு உதவிகளை விட மேலதிகமானதாக இருக்கும் என்பதை அதிகம் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகின்றேன்.

நான் இதுவரை தெரிவித்த இந்த விழுயங்களை அமுல் செய்வதற்கு, ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டவையும், நடைமுறைப்படுத்தப்பட்டு வருபவையுமான வசதிகளையும், ஏற்பாடுகளையும் விஸ்தரிக்க வேண்டிய தேவை மட்டுமே இருக்கும். ஆனால், பெரும்பாலான சீர்பாடுகளைச் செய்வதற்கு அமைப்பு முறையில் மாற்றம் தேவை என்பதால், உலகவங்கியும், சர்வதேச நாணய நிதி சபையும் புதிய வசதிகளை உருவாக்கிக் கொளள வேடுண்ம். இது தொடர்பாக, வசதி குறைந்த வளர்முக நாடுகள் தமக்குத் தேவையான மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அவற்றிற்கு நீண்டகாலத் தவணை நிதி வசதி செய்து கொடுப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் கைத்தொழில் நாடுகளின் செயற்பாடுகள் துரிதம்டையும். அதன விளைவாக அவற்றின் மூலதனப் பொருட்களுக்கு வெளிநாட்டுக் கிராக்கிகளை ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச நிதிச் சமனற்ற நிலையை நீக்க முடியும்.

அத்தோடு, 5 முதல் 10 வருடகாலத்திற்கு மேற்பட்ட சென்மதி நிலுவைகளை செலுத்துவதற்கெனவும், நீண்டகாலத் தவணையில் கடன் வழங்குவதற்கும் சபை வசதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அதன மூலம், வளர்முக நாடுகள் தமது சென்மதி நிலுவைகளை சரி செய்வதற்கு நீண்ட காலம் கோருவதைக் குறைத்துக் கொள்வதற்கு உதவ இயலும். உத்தேச நிதியை நாணயசபையே முகாமை செய்து, வெளிக் காரணங்களால் பெருந்தொகைச் சென்மதி நிலுவைகளை செலுத்த வேண்டிய நாடுகளுக்கு வழங்க வேண்டும்.

நாணய சபை எவ்வித நிதி வசதிகளைச் செய்து சொடுத்தாலும் சரி, வங்கிக்குழுவின் ஆதரவு எவ்வளவுக்குக் கிடைத்தாலும் சரி, 4000 முதல் 5000 கோடி டாலர் வரை நிதிப்பற்றுக்குறையுடன் இருக்கும் எண்ணெய் உற்பத்தி செய்யாத வளர்முக நாடுகளுக்கு நீண்டகால மூலதன அடிப்படையாலான நஷ்டஈட்டு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாவிட்டால், அந்த நாடுகளை மீட்டு எடுக்க முடியும் என்பதனை சற்பனை செய்தும் பார்க்க முடியாது. இந்த நிலையை நீடிக்க அனுமதித்தால் அது நிச்சயமாக நிதிச்சுமைகள் தடைகள் என்பவற்றிற்கே வழியிட்டுச் செல்லும். இந்த பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணப்பட வேண்டுமானால் மீண்டும் மீண்டும், மேலும் மேலும் நிதிக் கடன வழங்குவதற்கு பதிலாக மூலதன ஓட்டத்தை வேறு வழிகளில் திசை திருப்பியாக வேண்டும்.

தேசிய மொத்த வருமானத்தில் மூன்றிலொரு வீதமே இப்போது சாதாரண கடன் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது; அது போதுமானதல்ல. 0.7 சத வீதத்துக்கு மேல் தேசிய மொத்த வருமானம் வளர்ச்சி கண்ட நாடுகளைப் பாராட்ட வேண்டும். அதே வேளையில் அந்த எல்லையை எட்டிப் பிடிக்க முடியாமற்போன நாடுகளுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்களை ஸ்திரமாக்கிக் கொள்வதோடு, குறைந்தது அடுத்த மூன்று வருட காலத்திற்காவது அதிக அளவு உதவிகள் வழங்குவது அவசியமாகும். குறிப்பாக இப்போதைய சர்வதேச சூழ்நிலையில் இது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

நீண்டகால மூலதனப் யங்களிப்பை பொறுத்தமட்டில் தனியார் துறையினரின் நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கென சரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வளர்முக நாடுகளின் மீது கவனம் செலுத்தப்பட்டு வருவதனை நான் கேள்விப்பட்டேன. எனினும் அதே வேளையில் அதன் பின்னணியில் குறைந்த மட்ட வளர்ச்சி உள்ள சிறிய அளவு பொருளாதார நிலையின் உண்மையான விளைவுகள் எவை என்பதையும் நாம் கருத்திற் கொண்டாக வேணடும். தனியாரின் சேமிப்புக்களை மூலதனமாக்கி அவற்றை வெளிநாடுகளில் கொண்டு சென்று லாபம் தரும் தனி முயற்சிகளில் முதலீடு செய்யும் காலத்தை நாம் கடந்து விட்டோம். முதலீடு செய்யக் கூடிய சேமிப்புகளை கூட்டு முயற்சியில் மூலதனமிடும் வழக்கமே இப்போது அனேகமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பணம் வேறு ஒரு புதிய இடத்தில் மூலதனமாக இடப்படுவதானல் அது ஏற்கனவே எந்தத்துறையில் பயன்படுத்தப்பட்டதோ அதனைச் சார்ந்த துறைகளிலே உபயோகிக்கப்படுகிறது.

அவ்வாருன மூலதனங்களை, வளர்முக நாடுகளின் ஆகக்கூடிய சலுகைகள் நிரம்பிய தொழிற்துறைகளில் முதலீடு செய்விப்பதுகூட பெரும் சிரமம் நிறைந்த காரியமாகி வருகிறது. சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்கள் தமக்கு ஏற்கனவே கிடைத்த லாபவிகிதம், புதிய இடத்திலும் கிடைக்கும் எனக் கண்டால் மட்டுமே வளர்முக நாடுகளில் முதலீடு செய்ய விருப்பங் கொள்வார்கள். அதுவன்றி, முதலீட்டாளர்களுக்கு உலகில் வழங்கக்கூடிய சகல வித சலுகைகளை வழங்கினலும் கூட, அவர்கள் வளர்முக நாடுகளின் பக்கம் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள். நேரடி முதலீடானது, பல நாடுகளின் பொருளியல் வளர்ச்சிக்கு ஊக்கி என்ற நிலையில் நின்று அளித்துவரும் பங்கில் இருந்து நீங்கிவிடும் என்ற அர்த்தத்தில் நான் இதைக் கூறவில்லை. மேற்சொன்ன நிலை அடிக்கடி ஏற்பட்டாலும் கூட, சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளே உள்ளன என்பதற்கான கவனத்தை திருப்புவதற்கே இதனைக் கூறுகின்றேன். பணம் தேவைப்படுகின்ற உலகப் பிராந்தியங்களுக்கு அது கிடைக்கும் விதத்தில் பிரதிபலிக்கக் கூடியதாக சர்வதேச அபிவிருத்திக்கழக நிதிக்கு பல குழுக்களிலிருந்தும் பரந்த அளவில் பண உதவி பெறப்பட வேண்டும். புதிய நாடுகளிடமிருந்து பண உதவி மேலதிகமாக கிடைக்கிறது என்பதற்காக, வழமையாகப் பண உதவி செய்யும் நாடுகளின் உதவி மென்மேலும் அதிகரிப்பதில் தடை ஏற்பட்டுவிடக் கூடாது. அது பற்றி அவதானத்துடன் இருந்து கொள்ள வேணடும்.

---

(29ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாந் திகதியன்று லண்டன் தினசரி சீனி விலை தொன் ஒன்று 221 பவுணுக நிர்ணயிக்கப்பட்டது; லண்டன் சட்டா பேரச் சந்தையில் (எதிர்கால மொன்றில் ஒப்படைக்கப்படுவதற்காகச் சரக்குகள் வாங்கப்படுவதும் விற்கப்படுவதுமான சந்தை (மே மாத விலை தொன் ஒன்று 235.8 பவுண் வரை உயர்ந்து விட்டது. பெப்ரவரி 5 ம் திகதியளவில் விலை தொன் ஒன்று 242.8 பவுணை எட்டிவிட்டது. கொள்வனவு செய்யும் நிர்ப்பந்தத்தில் பெருபகுதி சட்டா பேரக்காரர்களிடமிருந்தே வருவதாக வர்த்தகர்கள் அபிப்பிராயப்பட்டனர். ''உண்மையான'' ஆஸ்தியை விரும்பிய இந்தச் சட்டா பேரக்காரர்கள் சீனி விலையுயர்ந்த உலோகங்களுக்கு ஒரு கவர்ச்சியான மாற்ருக இருப்பதைக் கண்டனர்.

சமீபத்தில் திடீரெனத் தோன்றிய தங்க, வெள்ளி ''சுரத்'' தினல் ஊக்குவிக்கப்பட்ட சாகச வியாபார சிரத்தை ஒருபுறமிருக்க, சீனி விலைகள் இவ்வருடம் விநியோக நிலை மிக இறுக்கமாயிருக்குமென்ற ஹேஷ்யங்களால் பயனடைந்துள்ளன. 1980 ம் ஆண்டில் உலக உற்பத்தி இலேசாகக் குறையும் என்று அமெரிக்க விவசாயத் திணைக்களம் பெப்ரவரி மாத மத்தியில் மதிப்பிட்டது. தாய்லாந்திலும் சோவியத் ரஷ்யாவிலும் பெறப்பட்ட மோசமான அறுவடைகள் மேற்கு ஐரோப்பாவில் கிடைத்த பெருவிளைச்சலால் ஈடுசெய்யப்பட்டு விடுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. எனினும் அமெரிக்காவில் உற்பத்தியாளர்களுக்கு ஓர் அருவருப்பான அனுபவம் ஏற்பட்டது: சீனியின் உயர் விலைகள் அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய சீனிக் கொள்வனவாளரான ''கொக்கோ - கோலா'' கம்பெனியைக் குறைந்த விலையுள்ள தான்யத்தை அடிப்படையாகக் கொண்ட இனிப்பூட்டிகளை உபயோகிப்பதற்கு மாறும்படி நிர்ப்பந்தித்துள்ளன: இக் கம்பெனியுடன் போட்டியிடும் ''பெப்சி கோ'' கம்பெனியும் இதே போலச் சீனியிலிருந்து மாறிவிடுவதைப் பற்றி ஆலோசித்து வருகிறது.

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் சீனியின் அளவுகள் 1974 ம் ஆண்டுக்கும் 1977 ம் ஆண்டுக்குமிடையே மிகக் குறைந்த மட்டங்களை அடைந்தனவென்றாலும், கடந்த இரு வருடங்களில் சீனியின் இறக்குமதியளவுகள் இடையருது அதிகரித்து வந்துள்ளன. கடந்த ஈராண்டுகளில் வருடாந்த தலா நுகர்வு குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்திருக்கும் போக்கு காணப்பட்டுள்ளது. 1970 ம் ஆண்டுக்கும் 1973 ம் ஆண்டுக்குமிடையே தலா நுகர்வு 42.2 இருத்தலம் யிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபாற் கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# பொருளியல் நோக்கு

**மக்கள் வங்கி** ஒரு சமூகப்பணித்திட்டமாக **பொருளியல் நோக்கை** வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், **மக்கள் வங்கி** நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் **550** கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.



**விலை ரூ. 2/25**

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றை பேற்றுக் குறிப்புடன்
மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 135 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org